# யாமினி

தேவகி கருணாகரன்



யாழினி

# யாழினி

தேவகி கருணாகரன்

STILO
BOOKS

Title: Yaazhini
Author's Name: Thevakie Karunagaran
Copyright © Ashan Karunagaran
Published by Estilo Books Pvt. Ltd.

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, psychic, or otherwise, without the prior permission of the publishers.

ESTILO BOOKS

Estilo Books Private Limited
No. 55(7), R Block, 6th Avenue,
Anna Nagar,
Chennai - 600 040

Website: www.estilobooks.com
E Mail id: estilobooks@gmail.com
Phone: 63834 95575

Estilo Books First Edition: April 2024
ISBN: 978-93-94693-22-7
Estilo Title No.: 11

Rs. 180/-

Cover Design: Manjula Sri-Pathma
Layout: Vijayan, Creative Studio

சமர்ப்பணம்

என் கணவருக்கு...

# பொருளடக்கம்

அணிந்துரை ....... 9

என்னுரை ....... 13

யாழினி - குறுநாவல் ....... 15

மாதவன் ஏமாந்தான் ....... 81

பிரியாவும் ஜேம்சும் ....... 92

சுவர்ணபூமி ....... 101

உங்கள் வாழ்வு நீள ....... 114

உயர்ந்த மலை ....... 123

ஒரு முன்னோடி ....... 137

இருளிலிருந்து வெளிச்சத்திற்கு ....... 143

# அணிந்துரை

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய வரலாற்றில் தேவகி கருணாகரனின் வகிபாகம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இலக்கியப்பிரதிகள் எழுதத் தொடங்கி, குறுகிய காலத்தில், தனது படைப்புளுக்கு பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றிருக்கும் தேவகி கருணாகரன், கடந்த பல ஆண்டு காலமாக அவுஸ்திரேலியா கண்டத்தில், நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில், சிட்னி மாநகரில் வசிக்கிறார்.

இதுவரையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் சில குறுநாவல்களையும் எழுதியிருக்கும் இவர், நாடகத்துறையிலும் ஈடுபாடு காண்பித்து வருபவர்.

அவுஸ்திரேலியா தமிழ் வானொலிகளிலும் இவரது சில சிறுகதைகள் ஒலிபரப்பாகியிருக்கின்றன.

அன்பின் ஆழம், அவள் ஒரு பூங்கொத்து ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகளை வரவாக்கியிருக்கிறார். இலங்கை பத்திரிகைகள், இலக்கிய இதழ்கள், மற்றும் அவுஸ்திரேலியா இணைய இதழ்கள் உட்பட, தமிழக இலக்கிய இதழ்களிலும் எழுதி வருபவர்.

நூலுருவில் தனது மூன்றாவது கதைத் தொகுப்பினை தற்போது இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். இத்தொகுப்பில் தமிழ் நாடு ஸீரோ டிகிரி இலக்கிய அமைப்பின் விருது பெற்ற யாழினி குறுநாவலுடன் மேலும் சில சிறுகதைகளை இந்த நூலில் பதிவேற்றியிருக்கிறார்.

இலங்கையில் நீண்டகாலமாக வெளியாகும் ஞானம் இதழின் அட்டைப்பட அதிதி கௌரவமும் பெற்றிருக்கும் தேவகி கருணாகரன் சிறந்த கதை சொல்லி.

இவரது தாய்நாடும், புகலிடம் பெற்ற கண்டமும் இவரது கதைகளில் களங்களாகியிருக்கின்றன.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த பெரும்பாலான தமிழ் படைப்பாளிகளுக்கு தாயகத்தின் நினைவுகள்தான் அவர்தம் இலக்கியப் பிரதிகளுக்கு மூலதனம்.

தேவகி கருணாகரனும் இதில் விதிவிலக்கல்ல!

இவர் தமது பாத்திரப்படைப்புகளின் மனவோட்டங்களின் ஊடாக கதைகளை நகர்த்திச்செல்லும்போது, சம்பவங்களையும் துரித வேகத்தில் நகர்த்துகிறார்.

நினைக்கத் தெரிந்த மனதால், மறக்கவும் முடிவதில்லை. தேவகி படைத்திருக்கும் பெரும்பாலான பாத்திரங்கள் அத்தகைய இயல்பினைக் கொண்டிருக்கின்றன.

Flash back உத்திமுறையை நாம் திரைப்படங்களில் பார்க்கின்றோம். தேவகியும் தனது கதைகளில் அத்தகைய உத்தியையே தொடர்ந்தும் பயன்படுத்தி வருகிறார்.

படைப்பாளிகள் சிறுகதையோ, நாவலோ எழுதும்போது பாத்திரங்களை முதலில் தீர்மானிப்பார்கள். பின்னர் அந்தப்பாத்திரங்களின் இயல்புகளை பிரதிபலித்து, அதற்கேற்ப சம்பவங்களை பின்னிப் பிணைந்து நகர்த்துவார்கள்.

தேவகியின் பாத்திரங்களின் இயல்புகள் நகருவதற்கு முன்பே சம்பவங்கள் வேகமாக நகர்ந்துவிடுவதனால், வாசகர்களும் அந்த வேகத்திற்கு ஈடுகொடுக்கவேண்டியிருக்கிறது.

*எமது தமிழ் சமூகம் பேசத்தயங்கும் விடயங்களையும் தனது கதைகளில் தேவகி, அநாயசமாக பேசிச்செல்கிறார். குறிப்பாக ஒரு பாலுறவு தொடர்பான கதையைச் சொல்லாம்.*

*தேவகியின் பெரும்பாலான கதைகள் பண்பாட்டு விழுமியங்களையும் தொட்டுச்செல்கின்றன.*

*தாயகம் விட்டு புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவுக்கு வந்தாலும், குடும்ப வன்முறையினால், மற்றும் ஒரு நாட்டுக்கு தப்பிச்சென்று வாழவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட பெண், இலங்கையில் போர்க்காலத்தில் காணாமல் போன கணவன், மீண்டும் வரமாட்டான் என்ற நம்பிக்கையில் மற்றும் ஒரு இல்லற பந்தத்திற்குள் நுழைந்து, மீண்டும் நிர்க்கதியாகும் பெண், பெற்றோராகவிருக்கும் இரண்டு ஆண்களின் மத்தியில் வளரும் குழந்தை முதலான கதைகள் உட்பட அனைத்துக்கதைகளுமே நனவிடை தோய்தல் உத்தியுடன்தான் நகர்ந்துகொண்டிருக்கின்றன.*

*தேவகி, பேரன், பேத்திகளை கண்டபின்னரும் தொடர்ந்து இலக்கியப்பிரதிகள் எழுதிவருவது பாராட்டத்தக்கது.*

*பொதுவாகவே எங்கள் தமிழ் சமூகத்தில் பெண்கள், எழுத்துத் துறைக்கு வருவது குறைவு. அவ்வாறு வந்தாலும், திருமணத்தின் பின்னர், குடும்பம், பிள்ளைகள் பராமரிப்பு என்று கவனம் திசை திரும்பிவிடும்.*

*பல பெண் எழுத்தாளர்களுக்கு குடும்பச்சுமை சார்ந்த இந்த நிலைமை வந்தமையால், நாம் ஆற்றல் மிக்க, படைப்பூக்கம் கொண்ட பல பெண் ஆளுமைகளை இழந்துவிட்டோம்.*

*இந்தப்பின்னணியில் தேவகி கருணாகரன், நம்மத்தியில் முன்னுதாரணம் மிக்க படைப்பாளியாக மிளிர்ந்திருக்கிறார்.*

*அவருக்கு எமது வாழ்த்துக்கள்.*

**லெ. முருகபூபதி**
*மெல்பன்*
*அவுஸ்திரேலியா*

# என்னுரை

*சென்னையில் இலக்கியத்தை ஊக்குவிக்கும் மிகவும் மதிக்கப்படுகிற ஒரு அமைப்பாகவும் பிரசித்தி பெற்ற புத்தக வெளியீட்டாளராகவும் விளங்கும் ஸீரோ டிகிரி பதிப்பகம் நடத்திய போட்டியில், எனது 'யாழினி' குறுநாவல் முதல் பரிசை பெற்றது. அக் குறுநாவலையும், மற்றும் தமிழ் நாட்டின் கணையாழி, செம்மலர் சஞ்சிகைகளிலும் சிறீலங்காவின் வீரகேசரி பத்திரிகையிலும் வெளிவந்த ஏழு சிறுகதைகளையும் இக் குறுநாலுடன் சேர்த்து ஒரு தொகுப்பாக வெளியிடுகிறேன்.*

*இந் நாவலில் பல எதிர்பாராத திருப்பங்கள் வருகிறதால் நாவலைப்பற்றி இங்கு அதிகம் நான் கூற விரும்பவில்லை. அது உங்கள் வாசிப்பின் சுவாரஸ்யத்தை குறைத்து விடும். உள் நாட்டுப் போராயினும் சரி, அயல் நாட்டுடனான போராயினும் சரி அந்தக் காலகட்டத்தில் வாழும் மக்கள் மட்டுமன்றி அடுத்து வரும் சந்ததியர்களும் எப்படி உடல்ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை துல்லியமாக இந்த நாவல் பேசுகிறது.*

*ஏற்கனவே எனது சிறுகதைகள் பல, தமிழ் நாட்டின் கல்கி, கலைமகள், கணையாழி, குமுதம், செம்மலர் சஞ்சிகைகளிலும், இலங்கையின் ஞானம் சஞ்சிகையிலும், வீரகேசரி, தினக்குரல்*

*வாரப் பத்திரிகைகளிலும் பிரசுரமாகி உள்ளன. இச் சிறுகதைகள் ‘அன்பின் ஆழம்’, ‘அவள் ஒரு பூங்கொத்து’ என இரு தொகுப்பாக சிட்னியில் வெளியிடப்பட்டுள்ளன. யாழினி எனது மூன்றாவது தொகுப்பாகும்.*

*லெ. முருகபூபதி அவர்கள் அவுஸ்திரேலியா தமிழ் இலக்கியக் கலைச் சங்கத்தின் காரணகர்த்தாகவிருந்து வளர்த்தவர். அவர் பிரபல ஊடகவியலாளரும், இலக்கியத்துறையில் ஆழுமை மிக்க எழுத்தாளரும் ஆவார். தனது பல எழுத்து மற்றும் சமூக சேவை கடமைகளிடையே, நான் கேட்டதும் தயங்காது அன்புடன் என் தொகுப்புக்கு , அணிந்துரை எழுதிக்கொடுத்தார். அவருக்கு எனது மனம் நிறைந்த நன்றி.*

*தமிழ் நாட்டில் பிரசித்திபெற்ற எழுத்தாளரான நெய்வேலி பாரதிக்குமார், என் குறுநாவலை வாசித்துவிட்டு எழுதிய விமர்சனத்தில் இருந்து ஒரு மேற்கோள் இந்நூலின் பின் அட்டையில் பதித்துள்ளேன். அவருக்கு எனது மனம் நிறைந்த நன்றி.*

*எனது எழுத்துப் பயணத்திற்கு உறுதுணையாக இருந்து ஒப்பு நோக்கல் செய்து உதவிய என் கணவருக்கு எனது அன்பு கனிந்த நன்றிகளை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். அவருக்கே இச்சிறுகதைத் தொகுப்பையும் அர்ப்பணிக்கிறேன்.*

*இத் தொகுப்பிற்க்கு அட்டைப்படம் வரைந்த எனது அண்ணன் மகள் மஞ்சுளா ஸ்ரீ-பத்மாவுக்கும் எனது அன்பு கனிந்த நன்றி. மேலும் நூலை என் வேண்டுகோள்படி சீராக வடிவமைத்து அச்சிட்ட ஸீரோ டிகிரி பதிப்பகத்தினர் ராம்ஜி, காயத்திரி அவர்களுக்கும் மற்றும் பணிப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.*

*அன்புடன்*
*தேவகி கருணாகரன்*

*thevakiek@hotmail.com*
*blog - https://thevakieskatpannaikal.wordpress.com/*

# யாழினி

**குறுநாவல்**

மதியம் பன்னிரெண்டு மணி. சித்திரைமாத உச்சி வெய்யில் மண்டையைப் பிளந்திடும் அக்குரோசத்துடன் எரித்துக் கொண்டிருந்தது. கூடவே வறண்ட சோளகக்காற்று புழுதியை அள்ளி வீசிக்கொண்டிருந்தது. மங்களம் கட்டுடையில் உள்ள தன் வீட்டுக் குசினியில் மதிய உணவு சமைத்துக் கொண்டிருந்தாள். அப்போது தடதடவென வாசல் கதவு தட்டப்பட்டது. 'யாரா இருக்கலாம்? இந்த வீரன் கூட குரைக்காமல் இருக்குதே,' என நினைத்தபடி கையைக் கழுவிவிட்டு போய் வாசற் கதவைத் திறந்தாள்.

வாசலில் நின்றவனை அவளால் யாரென மட்டுக்கட்ட முடியவில்லை. வீரன் வாலை ஆட்டியபடி அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது. அவளுக்கும் தெரிந்தவன் போலவே இருந்தது. 'அவரைப் போலவும் அல்லவா இருக்கிறது. ஆனா......ல்..... அவரா இருக்க முடியாது. அவரைத்தானே அநியாயமாய் கொன்று போட்டிட்டாங்களே. யாரா இருக்கலாம்?' இவ்வளவும் மங்களத்தின் மனதில் மின்னல் வேகத்தில் எழுந்து மறைந்தது.

அங்கங்கே நரை விழுந்த அடர்ந்த தாடி. பல நாட்களாக எண்ணையே காணாத செம்பட்டை அடித்த முடி, சலவையைக் கண்டு பல நாளான சாரமும், கட்டைக்கைச் சேர்ட்டும் அணிந்திருந்தான். கத்தைக்குள் ஒரு துணி முடிப்பு.

*"மங்களம்! என்னைத் தெரியவில்லையா?"*

*"இந்தக் குரல் அவருடையது போல் அல்லவா இருக்கிறது...?"*

*"நான்தான் உன்.........ரை .........ரவி! என்னை மறந்திட்டியா மங்களம்?"*

*சம்மட்டியால் அடித்தது போல மங்களத்தின் தலைக்குள் பொறிகள் பறந்தன. வாலை ஆட்டிக்கொண்டு அவரைச் சுற்றிக் குதித்துக் கொண்டிருந்த ஐந்தறிவு பிராணியின் அறிவு எனக்கில்லாமல் போயிட்டுதே என மன வருத்தத்துடன் "ஐயோ நீங்களா ரவி? இந்த கோலத்திலே உங்களை மட்டுக்கட்டடல்லே," அவர் கையைப் பிடித்து அணைத்து உள்ளே அழைத்து வந்து கதிரையில் இருக்கவைத்தாள்.*

*"உங்களை இனி பார்ப்போமா என்ற நம்பிக்கையையே இழந்திருந்தோம்," என்று விம்மலுக்கு இடையே சொன்னவள், கணவரின் கை கால் என ஒவ்வொன்றாகத் தொட்டுப் பார்த்தாள். தான் காண்பது நிஜமா என்ற சந்தேகம். பின்பு "கபிலன்! கபிலன்!! காணாமல் போயிட்டார் என நாங்கள் நினைத்திருந்த உன் அப்பா திரும்ப வந்து விட்டார். வந்து பாரடா," என உணர்ச்சி மேலிட உரத்த கீச்சிட்ட குரலில் மகனைக் கூப்பிட்டாள்.*

*"அப்பாவா! உண்மையாவா! அம்மா?" என்ற கபிலன் மாடியிலிருந்து தடதடவென படியிறங்கி ஹாலுக்குள் ஓடி வந்தான். வந்தவன் சோபாவில் அமர்ந்திருந்த உருவத்தைப் பார்த்து சற்று தடுமாறினான். ஆனால் ரவி, "கபிலா! நான் உன் அப்பாவடா!" எனப் பாசமாக சொல்லவும், தந்தையின் குரலைக் கேட்டதும் ஓடிச் சென்று அவரை அணைத்துக்கொண்டான் கபிலன். தந்தையும் தனயனும் ஒருத்தரை ஒருத்தர் தொட்டுத் தடவி, நடப்பது நிஜமோ என உர்ஜிதப்படுத்திக் கொண்டார்கள்.*

*"உன்னை விட்டிட்டுப் போயிட்டேனடா," என மகனைக் கட்டி அணைத்தபடி, "இனிமேல் எங்கேயும் போகமாட்டேன்." என்றவர் சற்றுத் தள்ளி இருந்து மகனை மேலேயும் கீழேயும் பார்த்தார், பிறகு "இப்ப உனக்கு பன்னிரெண்டு வயதா?"*

*"இல்லை அப்பா? எனக்கு 14 வயதாகிறது...?" அவன் கேட்ட விதத்தில் இது தெரியாதா என்ற கேள்வி அதில் தொனித்தது. அவனுக்கு எப்படித் தெரியும் தன் தந்தை பட்ட நரகவேதனை.*

*"என்ர மகன் எவ்வளவு வளந்திட்டான், மங்களம்."*

*"ஓம் அவன் உங்களைப்போல் கெட்டிக்காரனும் கூட."*

*மங்களம் கணவருக்குக் குடிப்பதற்கு ஒரு டம்ளரில் தண்ணீர் கொடுத்துவிட்டு, "இஞ்சேருங்கோ முதலிலே குளித்துவிட்டு வாங்கோ. கபிலன், நீ ஓடிப்போய் கீசர் சுவிட்சை போட்டிட்டு, அப்பாவுக்குச் சவரம் செய்யத் தேவையானதை எடுத்துக்கொடு. அதற்கிடையிலே நான் மத்தியானச் சாப்பாட்டை சமைத்திடுவேன்" என்றாள் மங்களம்.*

*தகப்பனைக் கூட்டிக்கொண்டு கபிலன் படியேறி படுக்கை அறைப்பக்கம் போனதும் மங்களம் ஹாலில் தொங்கிக் கொண்டிருந்த கணவரின் படத்திற்குப் போட்டிருந்த மாலையைக் கழட்டிக்கொண்டு பின் முற்றத்தில் இறங்கிப்போய் கருவேப்பிலை மரத்தில் கொளுவி விட்டாள். 'அவர் படத்துக்கு மாலை போட்டிருப்பதைக் கண்டாரோ தெரியாது,' என மனதுக்குள் குழம்பினாள். சுவாமி அறைக்குள் போய் அங்கு வைத்திருந்த வெல்வெட்டுப் பெட்டியைத் திறந்து பல வருடங்களாகப் பெட்டியில் முடங்கிக் கிடந்த தாலிக்கொடியை நடுங்கும் கரங்களால் எடுத்து கழுத்தில் அணிந்துகொண்டாள். குங்குமத்தை எடுத்து நெற்றியின் உச்சியிலும் தாலியிலும் வைத்து முருகன் விக்கிரகத்திற்கு முன் விழுந்து, 'முருகா என் கணவரை எனக்குத் திரும்பத் தந்ததற்கு நன்றி,' என மனதார நன்றி கூறினாள். குசினிக்குள் புகுந்தவள் பின் முற்றத்தில் இறங்கி பதமாக முற்றியிருந்த முருங்கைக்காய் நாலைப் பிடுங்கிக்கொண்டு வந்து, கணவருக்குப் பிடித்தமாதிரி முருங்கைக்காய் கறிக்குள் இரண்டு முட்டையும் அடித்துப் போட்டு படபடவென அடுப்பில் வைத்து இறக்கினாள். கொள்ளை விலை கொடுத்து யாழ்ப்பாணப் பெரியகடையில் வாங்கி அடுத்த நாளைக்கு என்று பிரிஜ்ஜிலே வைத்திருந்த பாரை மீன் துண்டுகளை எடுத்து நல்லெண்ணெயில் பொரித்தாள். வீடு முழுவதும்*

பசியைக் கிள்ளும் மங்களத்தின் சமையல் வாசம் பரவியது.

சமையல் நடுவில் ஓடிப்போய் ரவியின் அலுமாரியில் அவர் ஒரு நாள் திரும்பி வந்தாலும் எனச் சலவைக்குக் கொடுத்து எடுத்து வைத்திருந்த வெள்ளை வேட்டியையும் நீலநிற சேர்ட் ஒன்றையும் எடுத்து கட்டிலில் வைத்துவிட்டு, “அப்பா குளித்துப் போட்டு வந்ததும் இதைப் போட்டுக் கொள்ள குடு” எனக் கபிலனிடம் சொல்லிவிட்டுத் திரும்ப வந்து பம்பரமாகச் சுழன்று சாப்பாட்டு மேசைக்குச் சோறு கறிகளைக் கொண்டு வந்து வைத்து விட்டு, கணவரை அழைத்து வரப் போனாள்,

தாடி மீசை வழித்து, சவரம் செய்து வெந்நீரில் குளித்து கட்டிலில் அமர்ந்திருந்த ரவிக்கும் ஒரு மணித்தியாலத்திற்கு முன் வீட்டு வாசலில் நின்றவருக்கும் எத்தனை மாற்றம்? வெந்நீரில் குளித்ததால் இயற்கையாகவே சிவந்த நிறமான அவர் முகம் சிவந்து, அவளைக் கவர்ந்த அந்தக் காந்தக் கண்களில் குழி விழுந்திருந்தாலும் இன்னும் கவர்ச்சியோடு, சற்று எழும்பிய கிளி மூக்கோடு இன்றும் அவள் மணந்து நேசித்த ஆணழகனாக அவள் கண்களுக்குத் தெரிந்தார். மகன் கபிலன் அறையில் இருக்கவில்லை. ஆசையோடு அவர் பக்கத்தில் நெருங்கி அமர்ந்தவள் அவர் கையைப் பற்ற, ரவி மங்களத்தை அணைத்து அவள் தோள் மேல் சாய்ந்து கொண்டான்.

“மங்களம்! கபிலனையும், உன்னையும் தவிக்கவிட்டிட்டு போயிட்டேனே. எல்லாம் என்னை மீறி நடந்துவிட்டது. உங்களுக்காக நான் என்னும் கூட கவனமாக இருந்திருக்க வேணும். அவர்கள் பிடியிலிருந்து தப்ப நான் பட்ட பாடு, பிறகு வெளியே விட்ட பின் கையிலே காசுமில்லாமல் பல நாளா பட்டினியோடு அலைந்து திரிந்துதான் இன்றைக்கு இங்கு வந்து சேர்ந்தேன். எனக்கு நடந்தவற்றை நினைக்கவும், சொல்லவும் இங்கே நோகிறது,” என நெஞ்சைத் தொட்டுச் சொன்னார். மங்களத்தின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. இந்த எட்டு வருடமாக அழுது அழுது அவள் கண்களில் கண்ணீர் வற்றிவிட்டது என நினைத்திருந்தாள், ஆனால் இன்று மனதில் சோகம், தாபம், குற்ற உணர்வு பாசம் பல

*உணர்வுகள் முட்டிமோதக் கண்ணீர் கட்டுப்பாடில்லாமல் வழிந்தோடியது. பசி மறந்து இருவரும் அழுது தீர்த்தார்கள்.*

*பல நாளா, இல்லை மாதக் கணக்காக வெட்டாமல் நீண்டு வளர்ந்திருந்த ரவியின் தலைமுடியை கைகளால் கோதிவிட்டவள்,.*

*“கபிலன்! என் தையல் மேசையில் இருக்கும் கத்தரிக்கோலைக் கொண்டுவா? அப்பாண்ட முடியை வெட்டுவோம்,” என்றாள் மங்களம் கன்னத்தில் வடிந்த கண்ணீரைத் துடைத்தபடி, குரலில் உற்சாகத்தை வரவழைத்தபடி. ஒரு துவாயை ரவியின் தோளைச் சுற்றிப் போட்டுவிட்டு சீப்பால் முடியைச் சீவி இழுத்துப் பிடித்து ரவியின் காதுக்கு மேல் அளவுக்கு சுற்றிவர வெட்டிவிட்டாள். கபிலனும் தந்தையின் முடியை வெட்டுவதற்கு கூட இருந்து ஒத்தாசை செய்தான்..*

*“இப்போதைக்கு இது நல்லாயிருக்கு. நாளைக்கு ரவி, அம்பட்டனைக் கூப்பிட்டு வெட்டிவிப்போம். இப்போ உங்களுக்குப் பசிக்குமே! வாங்கோ சாப்பிடலாம்,” என அவர் கையைப் பிடித்து தாங்கலாக அழைத்துக் கொண்டு போனாள் மங்களம். பல வருடங்களுகுப் பின் வெந்நீரில் தோய்ந்த ரவிக்கு ஒரே பசியும் களையும். தட்டில் போட்டதை ஆவலோடு சாப்பிட்டார். பக்கத்தில் அமர்ந்திருந்த கபிலனுக்கும் இடை இடையே ஊட்டிவிட்டார். கபிலனும் அப்பாவுக்கு தன் தட்டிலிருந்து ஊட்டிவிட்டான்.*

*“மங்களம்! உன்ரை கையாலே சமைத்ததைச் சாப்பிட்டு எத்தனை நாள், அதுவும் இந்த முட்டை அடித்துப்போட்ட முருங்கைக்காய் கறி சாப்பிட்டு எத்தனை வருசம்.?”*

*“எட்டு வருசம்.”*

*“எனக்கு நாள் வருசம் கணக்கு எதுவுமே தெரியாது. பசியையும், உடல் காயங்கள் ஆறாமல் காயங்களின் வேதனையையும், பாதி நாட்கள் உணர்வே இல்லாமல் இருந்ததும் தான் தெரியும்,” அவர் குரல் நடுங்கியது.*

*“அப்பா! உங்களை ஆர்மி அடித்தாங்களா?”*

*“கபிலா! அப்பா களைத்துப் போயிருக்கிறார், சாப்பிட்டுட்டு போய் படுக்கட்டும். பிறகு கதைக்கலாம்.” என்றாள்.*

*படுக்கை அறைக்குள் போனதும் காற்றாடியைப் போட்டு ரவியைப் படுக்க வைத்து விட்டு அறைக் கதவை மெதுவாகச் சாத்திவிட்டாள். மாடியை விட்டு கீழே இறங்கி வந்தவுடன் இதுவரையும் இடையிலே புகுந்து கேள்வி கேட்காமல் பொறுமையாகவிருந்த கபிலன், “அம்மா! அப்பா பாவம் எவ்வளவு மெலிந்து குச்சி போல இருக்கிறார். அவர் குளிக்கும் போது பார்த்தேன், உடம்புபூராவும் காய்ச்சுப்போன தளம்புகள். ஆர்மி அடித்திருப்பாங்களா அம்மா?”*

*“ஓமடா, அப்படியாகத்தான் இருக்கும். ஆனால் உன்ரை அப்பா உயிரோடு எங்களிட்டை வந்து சேர்ந்து விட்டார். கடவுள்தான் அவரைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார். அப்பா முதலிலே நல்லா நித்திரை கொண்டு எழும்பட்டும். நாளை திங்கட்கிழமை உனக்குப் பள்ளிக்கூடம்தானே? பள்ளிக்கூடத்திலே அப்பா திரும்பி வந்திட்டார் என இப்போதைக்கு ஒத்தரிட்டேயும் சொல்லாதே சரியே.”*

*“சரி அம்மா” எனக் கபிலன் தன் அறைக்குள் போகவும், மங்களம் தொலைபேசியில் தன் தமையன் சிவபாலனை அழைத்தாள். மறுமுனையில் “தங்கச்சி உன்ரை குரல்லே சந்தோசம் ஒலிக்குது என்ன விசயம்” எனக் கேட்டார்.*

*“அண்ணா அவர்……ரவி….உயிரோடு எங்களிட்டை திரும்ப வந்திட்டார்.”*

*“என்ன சொல்லுறாய்?”*

*“ஓமண்ணா, மெலிந்துபோய், பலநாளா சாப்பாடுமில்லாமல் அலைந்து… திரிந்து சரியா கஷ்டப்பட்டிருக்கிறார். வாசலில் வந்து நின்ற அவரை என்னாலே மட்டுக்கட்ட முடியவில்லை என்றா பாருங்கோ!” என எட்டு வருடங்களுக்கு முன் இராணுவத்தினால் பிடித்துக் கொண்டு போய் இறந்து விட்டார் என முடிவெடுத்திருந்த கணவர் உயிரோடு திரும்பி வந்த*

*சந்தோசம் குரலில் தொனிக்க, கணவர் வந்த கோலத்தையும் நினைத்து கன்னத்தில் கண்ணீர் வடியச் சொன்னாள்.*

*"தங்கச்சி! மச்சான் திரும்பி வந்துவிட்டார் என்பதை வெளியாட்களுக்கு இப்போதைக்குச் சொல்லாதே, நாங்கள் கவனமாக இருக்க வேணும்."*

*"சரி அண்ணா. அவர் பாவம் தோய்ந்து போட்டு, சாப்பிட்டுவிட்டு நல்ல நித்திரை."*

*"நல்லா நித்திரை கொண்டு எழும்பட்டும். நாங்கள் பின்னேரம் ஆறு மணி மட்டிலை வீட்டுக்கு வாறம்," என்றார் தமையன் சிவபாலன்.*

*"அண்ணா! ரவிண்ட அப்பா அம்மாவுக்கும் சொல்லி விட ஏலுமா?"*

*"நான் கட்டாயம் சொல்லி விடுறேன்."*

*மங்களம் கணவருக்குப் பிடித்த சிவத்த அரிசிமாப் பிட்டும், முட்டைப் பொரியலும், பொரிச்ச கத்திரிக்காய்க் புளிக்குளம்பும் சமைப்பதற்கு வேண்டியதை ஆயத்தப்படுத்துவதற்கு குசினுக்குள் போனாள். அவளின் இரு கைகளும் மும்முரமாகச் சமையல் வேலையைச் செய்ய, பதினான்கு வருடங்களுக்கு முன் நடந்த இனிய நினைவுகளும் அதைத் தொடர்ந்து நடந்த கொடிய நினைவுகளும் அவள் மனதுக்குள் ஓட முதலில் புன்முறுவலுடனும் இறுதியில் கண்ணீருடனும் சமைத்து முடித்தாள்.*

# அத்தியாயம் 2

இரண்டு அண்ணன் மாருக்குப் பிறகு கடைக்குட்டியாகப் பிறந்த மங்களம் வீட்டுக்குச் செல்லப் பிள்ளை. தந்தை சுந்தரலிங்கமும் தாய் லோகினியும், அண்ணன்கள் சிவபாலனும் நந்தபாலனும் மங்களத்தின் மேல் பாசத்தைப் பொழிந்தனர். சிவபாலனுக்கு இரண்டு வருடங்களுக்கு முன் தான் திருமணமாகியிருந்தது.

பருவமடைந்து பதினாறு வயதில் மங்களத்தின் அழகோ ஒரு தனி அழகு. நிறம் குறைவெனினும் அவள் முகத்தோற்றம் கோயிலில் வீற்றிருக்கும் அம்மன் சிலைபோல் வட்டமான முகமும் பெரிய வட்டக்கருவிழிகளும், அளவாகச் செதுக்கிவைத்த நாசியில் ஜொலிக்கும் ஒற்றைக்கல்லு வைர மூக்குத்தியும், அவள் புன்னகைத்தபோது சற்றுத் தடிப்பான இதழ்ககளிடையே வெண் முத்துப் பற்களும் பிரகாசித்தன.

உள்நாட்டின் போர் நிலைமையால் வட மாகாணத்திற்குத் தெற்கில் இருந்து வரும் மருந்துகள், அரிசி கோதுமை மா எல்லாம் தட்டுப்பாடாக இருந்தது. எரி பொருட்கள் தடை செய்யப்பட்டிருந்தன. எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பயமும் பதட்டமும் நிலவிய காலம். தங்களுக்கு எதுவும் நடக்கமுன் மங்களத்தை நல்ல இடத்திலே கட்டிக் கொடுக்க

வேணுமென்று பெற்றோர், அவளுக்கு நல்ல இடமாகப் பார்க்கச் சொல்லி சொந்தக்காரர்களிடம் சொல்யிருந்தார்கள். கடவுளின் அருளாலே மாப்பிள்ளையே வீடு தேடி வந்துவிட்டார்.

அவர்கள் குடியிருந்த சண்டிலிப்பாய் ஊரின்,மானிப்பாய் காரைநகர் வீதியிலிருந்த சீரணி நாகபூசனி அம்மன் கோயிலுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மங்களமும் தாயும், சில நேரங்களில் இரு அண்ணன்களும் கூடப் போவார்கள். அந்த வெள்ளி மங்களமும் தன் தாய் லோகினியோடு போனாள். பக்கத்து ஊரான மானிப்பாயில் வசித்த மாப்பிள்ளையாவதற்கு எல்லா தகுதிகளும் கொண்ட இளம் ரவிச்சந்திரனும் தன் சினேகிதர்களோடு அதே கோயிலுக்கு அன்று போயிருந்தார். மூலஸ்தானத்திலே ஆராதனை நடக்கக் கைகூப்பிக் கண்மூடியபடி, 'தாயே இந்தப் போர் நெருக்கடியான நேரத்திலே நீதான் என் வியாபாரத்திற்குத் துணையாக இருக்க வேண்டும்,' என மனதார வேண்டியபடி, கண்திறந்த ரவிச்சந்திரனுக்கு பெண்கள் பக்கத்தில் சாட்சாத் அம்மனே தரிசனம் கொடுத்தது போல் மங்களம் கண் முன் நின்றாள். அப்போதுதான், அம்மனிடம் வேண்டிவிட்டு இதழ்களில் புன்னகையோடு தலையை நிமிர்த்தியிருந்தாள் மங்களம். அந்த அழகிய முகத்தில் வைரக்கல்லு மூக்குத்தி ஜொலிக்க அவள் வட்டக் கருவிழிகளில் நிரம்பியிருந்த சாந்தம் அவனைக் கவர்ந்தது.

மானிப்பாய் ஊரிலே ரவிச்சந்திரனை எல்லோருக்கும் தெரியும். வீட்டிலே குமர்களை வைத்திருந்தவர்கள் அவனை தங்கள் மருமகனாக்கிக் கொள்ள ஆசைப்பட்டார்கள். ஆங்கிலத்திலே சொன்னால் 'எலிஜிபில் பச்சுலர்'. அதாவது கல்யாணத்திற்கு எல்லா தகுதிகளும் கொண்ட பிரமச்சாரி. உழைப்பு, பணம் கம்பீரமான ஆணழகு எல்லாம் அமைந்தவன் தான் ரவிச்சந்திரன்.

அந்த பெண் யார் என் ரவிச்சந்திரன் விசாரித்ததில் அவள் சண்டிலிப்பாயில் வசிக்கும் சுந்தரலிங்கம் தம்பதிகளின் ஒரே மகள் மங்களம் என அறிந்து கொண்டான். ரவி பெற்றோரிடம் தனக்கு இன்னாருடைய மகளைப் பிடித்துக்கொண்டது என்று

*சொல்லவும் பெற்றோரான வல்லிபுரத்திற்கும் பொன்மணிக்கும் ஒரே சந்தோசம். இருபத்தி ஏழு வயதாகியும் கலியாணம் கட்டமாட்டேன் என இருந்தவன் இப்போ கட்ட விரும்புகிறான் என்றதும் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். உடனேயே தங்கள் சொந்தக்காரர் ஒருவரை மங்களத்தின் தந்தை சுந்தரலிங்கத்திடம் அவர் மகளைக் கேட்டு அனுப்பினார்கள். நல்ல குடும்பம் மாப்பிள்ளை வியாபாரத்தில் நல்லா உழைக்கிறார் என்று அறிந்ததும் சுந்தரலிங்கத்திற்கு ஒரே சந்தோசம். சாதி சனமும் எல்லாம் அவருக்குப் பிடித்துப் போயிற்று. மாப்பிள்ளை மங்களத்தைப் பெண் பார்க்க வந்தபோது செக்கச்செவேல் என்று உயரமாகவும் வாட்டசாட்டமாகவும் இருந்த ரவிச்சந்தரன் மங்களத்திற்கு திரைப்பட ஹிரோ போலக் காட்சியளித்தார். மங்களத்திற்கு ரவியை நன்றாக பிடித்துக் கொண்டது. சுந்திரலிங்கம் பல இடங்களில் விசாரித்ததில் அவர் குணமானவன் எனத் தெரியவந்தது. அப்படிப்பட்ட ரவிசந்திரன் மங்களத்தை அன்போடு நல்லாப் பார்த்துக்கொள்வான், எனச் சந்தோசப்பட்டார். மங்களத்தின் அண்ணன் சிவபாலனோ ரவிச்சந்திரன் மங்களத்திலும் பத்து வயது வித்தியாசமே என தன் கருத்தைச் சொன்னான். எனினும் சுந்தரலிங்கத்தார், “மாப்பிள்ளை குணமானவர். வயது வித்தியாசம் ஒரு பொருட்டில்லை. ஏன் எனக்கும் உன்னுடைய அம்மாவுக்கும் பதினைந்து வயது வித்தியாசமே. இப்போ எங்களுக்கு என்ன குறை? நாங்கள் சந்தோசமா வாழவில்லையா“ என அவன் ஐயத்தை போக்கினார். ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தி ஐந்தில் மங்களத்திற்கும், ரவிச்சந்திரனுக்கும் நாட்டின் நிலைமையையும் தாண்டி திருமணம் அமர்க்களமாகவே நடந்தேறியது. மானிப்பாயிற்கு ஒட்டினாற் போல் இருந்த கட்டுடைவில் இருந்த ரவிச்சந்திரனின் புதுவீட்டுக்கு புது தம்பதிகள் குடிபுகுந்தனர் .*

*கல்யாணமாகி ஒரு வருடத்திற்குள் மகன் கபிலனும் பிறந்தான். கபிலன் பிறந்ததோடு ரவியின் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. இரண்டு வருடங்ளுக்கு முன் ஆனையிறவுக்கு வடக்கே பத்து கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த யக்கச்சியில்*

*வெறும் காடாக 520 ஏக்கர் வாங்கிப் போட்டிருந்தார். இப்போது ஆட்களைப் போட்டு காட்டை அழித்து அங்கே தென்னை, பனை நட்டுக் கூடவே ஒரு அன்னாசி தோட்டமும் போட்டார். பல மரக்கறி வகைகளையும் பயிர் செய்தார். வீட்டுக்கும் அவனது சொந்தக்காரர்களுக்கும் வேண்டிய மரக்கறி வகைகளை அனுப்பி வைத்தார். அங்கு வேலை செய்பவர்கள தங்கள் குடும்பத்தோடு தோட்டத்திலே தங்குவதற்கு வீடுகளும் கட்டிக் கொடுத்தார். யக்கச்சித் தோட்டத்தில் நடக்கும் வேலைகளை மேற்பார்வை பார்க்க அவர் தனது தூரத்துச் சொந்தக்காரனான வேலாயுதத்திற்கும் அங்கேயே தங்குவதற்கு ஒரு கல் வீடும் கட்டிக் கொடுத்தார். சனி ஞாயிறு நாட்களில் ரவியுடன் மங்களமும் மகன் கபிலனும் யக்கச்சிக்குப் போவார்கள். அப்போது அந்த கல்வீட்டில் வேலாயுதத்தோடு தங்குவார்கள். மங்களத்திற்கு யக்கச்சிக்குப் போவது என்றால் ஒரே ஆனந்தம்தான். மதிய நேரங்களில் ரவியுடன் பச்சைப் பசேலென்ற வயல் வெளிகளிலும் தென்னைமரக் கீற்று நிழலிலும், கபிலன் உறங்காமலிருந்தால் அவனையும் கூடவே அழைத்துக் கொண்டு, தூய்மையான காற்றை சுவாசித்தபடி நடந்து போவதே, ஒரு ஆனந்தம். சில நாட்கள் ரவி மட்டும் யக்கிச்சிக்கு போனால் ஆனையிறவையும் கடந்து பரந்தன் கிளிநொச்சி என்று போய் வருவார். அப்படிப் போய் வரும் நேரங்களில் கஸ்டப்படுற இயக்கப் பெடியன்களுக்கு காசு கொடுத்து உதவுவார். இயக்கப் பெடியன்களை இராணுவம் தொடர்கிறது அல்லது அவர்கள் பிடிபடப் போகிறார்கள் என்றால் யக்கச்சித் தோட்டத்தில் ஒளித்து வைத்து பலதடவை அவர்களை காப்பாற்றியிருக்கிறார்.*

*ரவியினது இந்த நடவடிக்கைகள் எல்லாவற்றையும் இராணுவம் அவதானித்து வைத்திருந்துவிட்டு ஒரு நாள் அவர்களின் கட்டுடை வீட்டிற்கே வந்துவிட்டார்கள். இரவு வாசல் கதவை தட்டும் சத்தம் கேட்டு மங்களம் கதவைத்திறந்தாள். அவள் முகத்திற்கு நேரே துப்பாக்கியை இலக்கு வைத்தபடி ஒரு ஆர்மிக்காரன் நின்றான் அவனுக்குப் பின்னால் இன்னும் நான்கு இராணுவத்தினர் நின்றனர். மங்களம் வெலவெலத்துப்*

போனாள். துவக்கை அவள் நெற்றிப் பொட்டில் வைத்தபடி "ரவி கொய்த?" ரவி எங்கே எனச் சிங்களத்தில் கேட்டார்கள். மங்களத்துக்குச் சிங்களம் தெரியாது எனினும் அவர்கள் ரவி எங்கே எனக் கேட்கிறார்கள் என அவளுக்குப் புரிந்துவிட்டது. மங்களத்தை ஒரு பக்கமாகவே தள்ளிவிட்டு இரண்டு இராணுவத்தினர் உள்ளே கட்டிலில் சாரத்தோடு படுத்திருந்த ரவியைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே போனார்கள். மற்ற மூன்றுபேரும் வீட்டைத் தலைகீழாக்கித் தேடினார்கள். என்ன தேடுகிறார்கள் என அவர்களுக்கே தெரியவில்லை போலிருந்தது. இழுபட்டுப் போன ரவியோ, "என்னை எதற்காகப் பிடித்துக்கொண்டு போறீங்கள்?" எனச் சிங்களத்தில் திரும்பத் திரும்ப சத்தமாக கேட்க, "மங்களம் ஐயோ அவரை விட்டிடுங்கோ," எனக் குளறினாள், கூடவே கபிலனும், "அப்பா! அப்பா!!" எனக் கத்தினான். இவர்கள் குளறும் சத்தத்தைக் கேட்டு இரவு படுக்கைக்குப் போயிருந்த அந்தத் தெருவின் விட்டிலுள்ளோர் வீட்டுக்குள் எரிந்துகொண்டிருந்த விளக்குகளை அணைத்து விட்டு, பீதியுடன் உள்ளே ஒளிந்திருந்து பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எவருமே உதவிக்கு வரவே இல்லை. எப்படி வருவார்கள்? அவர்கள் அசைந்தால் துவக்கும் கையுமாக நிற்கும் இராணுவம் சுட்டுப் போடுவார்கள் அல்லது அவர்களையும் பிடித்துக் கொண்டு போய் விடுவார்களே! அப்போதைய நாட்டின் நிலைமையால் என்ன ஏது என்று அறியாமல் சனங்கள் சட்டென்று உதவிக்கு வரமாட்டார்கள்.

இராணுவம் ரவியை இழுத்துக் கொண்டு போகவும் அவன் வீட்டுக் கேட்டைப் பிடித்துக் கொண்டு தொங்கினான். எனினும் அவர்கள் அவனை முரட்டுத்தனமாக இழுத்துக் கொண்டு போய் இராணுவ வாகனத்தில் ஏற்றினார்கள். இராணுவ வாகனம் புறப்பட்டுப் போனதும், சனங்கள் ஒவ்வொருவராக வீடுகளிலிருந்து வெளியே வந்தார்கள். ரோட்டில் சனம் கூடிவிட்து. புறப்பட்டு போன இராணுவ வாகனத்தின் பின்னால் மங்களம் ஐயோ! ஐயோ! எனக் குளறியபடி கொஞ்சத் தூரம் ஓடினாள். பின்பு ரோட்டில் விழுந்து நிலத்தில் கைகளை அடித்து "ஐயோ ஐயோ" எனக் கதறினாள். பின்னால் ஓடி வந்த

*கபிலன் மங்களத்தின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு “அம்மா! எனக்கு அப்பாவேணும்,” என விக்கி விக்கி அழுதான். பக்கத்துவீட்டுப் பெண்கள் மங்களத்தை கூட்டிக்கொண்டு போய் வீட்டில் விட்டு அவள் கூட இருந்து ஆறுதல் சொன்னார்கள். மும்மரமாக உள் நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்த கால கட்டத்தில் டெலிபோன் வசதி இல்லாததால், பக்கத்து வீட்டில் இருந்த ரவியின் சினேகிதர் சண்டிலிப்பாயில் இருந்த மங்களத்தின் அண்ணன் சிவபாலனுக்குச் சைக்கிளில் போய் நடந்ததை உடனே அறிவித்தார். அண்ணன் சிவபாலன் தாய் தந்தையரோடும், ரவியின் தாய், தந்தை, ரவியின் தம்பியோடும் உடனே காரில் வந்து சேர்ந்து விட்டார்கள். நடந்த சம்பவம் முழுவதையும் கேட்டனர். அப்போதய நிலைமையில் யாழ்ப்பாணத்தில் காவல்துறை ஒழுங்காக நடக்கவில்லை. அத்தோடு பத்துமணிக்கு மேலாகிவிட்டதால் அந்த நேரத்திலே செஞ்சிலுவைக்கோ, அரச சார்பற்ற என் ஜீ ஓவுக்கோ போய் புகார் கொடுக்க இயலாததால் எல்லோரும் மங்களத்தோடு அன்று இரவு தங்கினார்கள். அன்று இரவு முழுவதும் ஒரே கதறலோடு கடந்து போயிற்று அடுத்த நாள் விடிந்ததும் செஞ்சிலுவை சங்கத்திற்குப் போய் இரவு இராணுவம் வந்து ரவியை எந்த காரணமும் சொல்லாமல் ஆதாரமும் இல்லாமல் பிடித்துக் கொண்டு போனதைச் சொல்லிப் புகார் கொடுத்து ரவியைப் பற்றிய போட்டோவும் விபரங்களையும் பதிவு செய்தார்கள். அதோடு அவர்கள் குடும்ப வக்கீலிடமும் போய் ரவி எந்த குற்றமும் செய்யவில்லை என மனுவொன்றைத் தயாரித்து காவல் அதிகாரிகளிடமும் இராணுவத்திடமும் சமர்ப்பித்தார்கள்.*

*தனித்துப் போன மங்களத்துக்கு துணையாக தந்தை சுந்திரலிங்கமும், தாய் லோகினியும் அவள் வீட்டிலே தங்கிக் கொண்டனர். எப்போதும் இரவில் கபிலன் அப்பாவை கட்டிப்பிட்டித்துக் கொண்டுதான் தூங்குவான். சாதாரண நாட்களில் வியாபார வேலையால் வீட்டுக்கு வர சுணங்கினால் அவன் அப்பா! அப்பா! என அழுது அழுதுதான் நித்திரை ஆவான். இப்போது ஒவ்வொரு இரவும் அழுகைதான்.*

செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் போய் ஒவ்வொரு நாளும் சிவபாலனும், ரவியின் தம்பியும் விசாரித்தார்கள். ஆனால் ரவியை எந்த இராணுவ காம்பிலே தடுத்து வைத்திருக்கிறார்கள் அல்லது பூசா மறியலில் அடைத்து வைத்திருக்கிறார்களா என்று எந்தத்தகவலும் அறிய முடியவில்லை.

நாட்கள் வாரங்கள் ஆகின. வாரங்கள் மாதங்கள் ஆகின. மாதங்கள் வருடங்கள் ஆகி இரண்டு வருடங்கள் வேகமாக சென்றன.

கபிலனோ தினமும் "எனக்கு அப்பா வேணும். என் செல்ல அப்பாவை இழுத்துக் கொண்டு போயிட்டாங்கள் இது சரியா? நியாயமா? அப்பு சாமி எனக்கு என் அப்பாவைத் திருப்பி கூட்டிக் கொண்டு வந்து தா," என அழுது அழுது சொன்னவனின் மழலை சொற்கள் மங்களத்தின் நெஞ்சைப் பிசைந்தது. அவனுக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் அவனை அணைத்துக் கொண்டு விம்மி விம்மி தானும் அழுதாள். இவர்கள் இருவருக்குமாக வீட்டோடு இருந்த வயதுபோன தந்தை சுந்தரலிங்கமும், தாயும் மகளின் நிலையைக் கண்டு துடித்தனர்.

நான்கு வருடங்கள் உருண்டோடியது. ரவியின் தம்பி மோகன் ரவியின் வியாபாரத்திலே பங்கு வைத்திருந்தபடியால் அதைத் தொடர்ந்து நடத்தினான். வந்த வருமானத்திலே மங்களத்திற்கு பாதியைக் கொடுத்துக் கொண்டு வந்தான். அதனால் மங்களத்திற்குப் பண நெருக்கடி இருக்கவில்லை. கபிலனுக்கு இப்போது பத்து வயது. "அம்மா! அப்பா எப்ப திரும்பி வருவார். எனக்கு என் அப்பா வேணும்", என சதா கேட்டபடியேதான் இருந்தான் கபிலன். துரு துருவென ஓடித்திரிந்த கபிலன் இப்போது நண்பர்களோடு விளையாடுவது குறைவு. சதா யோசித்தபடி வாசலைப் பார்த்தபடி இருந்தான். அவன் கண் முன்னாலே தந்தையை முரட்டுத்தனமாக இழுத்துக் கொண்டு போன அந்த நினைவில் இருந்து அவனால் வெளியே வரமுடியவில்லை.

ரவியை ஆர்மி பிடித்துக் கொண்டுபோய் ஐந்து வருடங்களாகி யிருந்தது. இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் என். ஜி யோவிற்கும் ரவியைப் பற்றிய தகவல் அறிய மங்களம் போவாள். இந்தமுறை கணவரின் தம்பி மோகனோடு போய் இரண்டு இடத்திலும் ரவியைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்திருக்கா என விசாரிக்கச் சென்றார்கள். அவர்கள் கூறிய பதில் இருவரையும் துயரில் ஆழ்த்தியது. "எல்லா சிறைச்சாலைகளிலும் விசாரித்தும், நேரே போய் பார்த்தும் விட்டோம். ஆர்மி காம்புகளுக்குப் போயும் பார்த்து விட்டோம். ரவியைப் பற்றி எந்த தகவலும் கிடைக்கவில்லை. அவர் கொல்லப்பட்டு வெகுசன புதைக்குளிக்குள் புதைக்காட்டி அவர் சடலமாவது கிடைத்திருக்க வேணு.........ம்" என அவர்களால் செய்யக் கூடிய தேடல்களின் முடிவைச் சொன்னார்கள். மங்களத்திற்கு அழுகை பீறிக் கொண்டு வந்தது.

"ரவியை இராணுவம் பிடித்துக் கொண்டு போய் ஆறு வருசமாகுதே. எந்த மறியலிலும் இல்லையென்றால் என்ன நினைக்கிறது தம்பி!" எனக் கண்ணீர் வடிய மோகனிடம் கேட்டபடி வீடு வந்து சேர்ந்தாள் மங்களம். அவள் வீட்டிலும் ரவி வீட்டிலும், ரவி இனி திரும்பி வருவார் என்ற நம்பிக்கை போய்விட்டது, எல்லோரும் அவர் உயிரோடு இல்லை என்ற முடிவுக்கு வந்தனர். வேறு வழி இல்லாமல் மங்களம் அந்த முடிவை தானும் ஏற்றுக் கொண்டு, ஒருவருக்கும் சொல்லாமல் தாலிக் கொடியைக் கழட்டி சாமி அறையில் ஒரு பெட்டிக்குள் வைத்துவிட்டாள். அவள் நெற்றியை அலங்கரித்த பெரிய குங்குமப் பொட்டுக்குப் பதிலாகச் சிறிய சிவப்பு ஸ்டிக்கர் பொட்டை வைத்துக்கொண்டாள். மகளின் இந்தக் கோலத்தைப் பார்த்த சோகத்தில் படுக்கையில் விழுந்த மங்களத்தின் தாய், லோகினி அதற்குப்பின் எழுந்திருக்கவே இல்லை.

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றி ஐந்தில் உள்நாட்டுப் போரின் காரணமாக சனங்கள் எல்லாம் அள்ளுப்பட்டு வடமராட்சியைவிட்டு தென்மராட்சிக்கு புலம்பெயர்ந்த போது, மங்களமும், கபிலனும் சுந்திரலிங்கத்தாரும், ரவியின் குடும்பத்தாரும் மானிப்பாயை விட்டு, சண்டிலிப்பாயில் இருந்த

*மங்களத்தின் அண்ணன் சிவபாலன் குடும்பத்தோடும் சேர்ந்து சாகச்சேரி போய்ச் சேர்ந்தார்கள். அப்பப்பா! அந்த அலங்கோல அவஸ்தையை மங்களத்தால் மறக்க முடியுமா? மேலே வானூர்திகள் செல் போடவும் சனங்கள் ரோட்டை விட்டு பத்தைகளுக்குள்ளும், தோட்டங்களுக்குள்ளும் ஒதுங்குவதுமாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, காயப்பட்டவர்களின் வேதனை அழுகுரல்கள் நெஞ்சினைப் பிசைய, எல்லோரும் தங்கள் தங்கள் குலதெய்வங்களின் துணையை அழைத்தபடி முன்னேறிப் போனது அவளால் மறக்கமுடியாத ஒரு அனுபவம்.*

*இந்தப் புலம்பெயர்வோடு சாகவச்சேரியில் தங்கியிருந்த நாட்களில் தான் பத்து வயதான கபிலனுக்கு அவனது தமிழ் இனம் படும் கஷ்டம் புரியத்தொடங்கியது. சொந்தங்கள், தெரிந்தவர்கள், அறியாதவர்கள் என ஒன்றாகவே அங்குள்ள பள்ளிக்கூடங்களில் தங்கியிருந்த போது, இந்த இடப் பெயர்வில் தாயை இழந்த பிள்ளைகள், ஏன் தாய் தந்தை இருவரையும் இழந்த பிள்ளைகளையும் சந்தித்தான். அவர்களின் நிலைமையை பார்த்தபின், தான் ஒரு விதத்தில் அதிர்ஷ்டசாலி என எண்ணினான். 'எனக்கு அம்மா, இரண்டு பாட்டாக்கள் பாட்டி, மூன்று மாமாக்கள் இருக்கிறார்கள்,' என மனதைத் தேற்றிக் கொண்டான். அம்மா அம்மா என மங்களத்தின் பின்னாலே திரிந்தான். தன் தாயிற்கு ஒத்தாசையாகவும் இருந்து அவவை அக்கறையாகக் கவனித்துக் கொண்டான்.*

*1997 முடிவில் வடமராட்சியை சிங்கள அரசாங்கம் தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்திருந்தார்கள். சமாதானம் இல்லையென்றாலும், எறிகணைகள் வானூர்திக் குண்டுவீச்சுகள் எல்லாம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. ஆகையால் பயமில்லாமல் பலர் தங்கள் தங்கள் ஊருக்குத் திரும்பத் தொடங்கினார்கள். மங்களத்தின் குடும்பத்தாரும் மானிப்பாயுக்கும் சண்டிலிப்பாய்க்கும் திரும்பினார்கள். மானிப்பாயில் மங்களத்தின் பெற்றோரின் வீடு ஷெல் அடியாலும் துப்பாக்கிச் சூடாலும் இடிந்துபோய் கிடந்தது. வீட்டில் சாமான் தட்டுகள் எதுவுமே இருக்கவில்லை. மங்களத்தின் வீட்டுக்கு*

அவ்வளவு பாதிப்பு இருக்கவில்லை. வீட்டைத் திருத்தி முடியும் வரை அவள் பெற்றோரும் அண்ணன் சிவபாலன் குடும்பமும் சின்னண்ணன் நந்தபாலனும் மங்களத்தின் வீட்டில் தான் தங்கினார்கள். ஆறு மாதத்தில் வீடு திருத்தப்பட்டதும் அவர்கள் தங்கள் வீட்டிற்குப் போய்விட்டார்கள். சின்னண்ணன் மட்டும் மங்களத்திற்குத் துணையாக அவள் வீட்டிலே தங்கிவிட்டான்.

யாழ்ப்பாணத்திலே உயர்தரபரீட்சை முடித்துவிட்டு சின்ன அண்ணன் நந்தபாலன் கொழும்புக்குப் போய் அங்கேயே சொந்தக்காரர் வீட்டில் தங்கி இருந்து அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் நடாத்தும் வளாகத்தில் கணனி என்ஞியரிங் படித்திருந்தான். இறுதி வருடப் படிப்புக்கு அவுஸ்திரேலியா சென்று அங்குதான் படிக்க வேண்டியிருந்தது. ஆகையால் அந்த வருடக் கடைசியில் அவனும் சிட்னிக்குப் பயணமானான். நந்தபாலன் போகவும் தந்தை சுந்தரலிங்கம் மங்களத்திற்குத் துணையாக அவள் வீட்டில் வந்து தங்கினார்.

இரண்டு வருடங்கள் உருண்டோடியது. மங்களத்திற்கு அப்பா துணையாக இருந்தாலும் மகன் கபிலனின் வளர்ச்சியைப் பார்த்துச் சந்தோசப்பட்டாலும், அவளைத் தனிமை வாட்டியது. உள்நாட்டுப் போரினால் பணக்கஷ்டம் வந்தாலும் வாழ்க்கையை ஒருவாறு ஓட்டிக் கொண்டுபோனாள். தன் ஒரே மகளின் நிலையைப் பார்த்தோ தெரியவில்லை சுந்தரலிங்கம், திடீரென ஒருநாள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்தவர் எழுந்திருக்கவேயில்லை.

அப்பாவும் மறைந்த பின் மங்களத்தைத் தனிமை மிகவும் வாட்டியது. அண்ணன் சிவபாலனும் அவன் குடும்பமும் தான் அவளுக்கு ஆறுதலாக இருந்தனர். வேலைக்குப் போனாலாவது பலரோடு பேசிப் பழகலாம் என்றால், ஊரின் நிலைமையில் அவள் படித்த படிப்புக்கு என்ன வேலை கிடைக்கப்போகிறது. கபிலன் தான் அவளுக்கு இருந்த ஒரு பிடிப்பு. இந்த நிலையிலே தான் எட்டு வருடத்திற்கு முன் இராணுவம் பிடித்துக்கொண்டு போய் இறந்துவிட்டதாக முடிவெடுத்திருந்த கணவர் ரவி, இன்று வாசலில் உயிரோடு வந்து சேர்ந்திருந்தார். அவள்

மனம் அன்றைய நிஜத்திற்கு வரவும் "ஐயோ என் ரவி வந்த கோலம்! அந்தக் கோலம் கண்முன் தெரியவும் அவள் மனம் துடித்தது, கன்னத்தில் கண்ணீர் வடிந்தது."

மாலை ஆறு மணியளவில் மங்களத்தின் அண்ணன் சிவபாலன், மனைவி மாலாவும் பத்து வயது வாணியும், பல வருடங்களுக்குப் பின் பிறந்த மகன் வசீகரனும். காரில் வந்திறங்கினார்கள். அடுத்தாற்போல் ரவியின் பெற்றோர். ரவியின் தம்பி மோகனும் மனைவியும் வந்திறங்கினார்கள். எட்டு வருடமாகக் காணாமல் போய் இறந்துவிட்டதாக முடிவெடுத்திருந்த மகன் உயிரோடு வந்து விட்டான் என்ற சந்தோசத்திலே ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள். ரவியின் அம்மா மகனைக் கட்டி அணைத்துக் கொண்டு, "உன்னை என்னபாடு படுத்தினார்கள் எடா? அடிச்சார்களா? இப்படி மெலிந்து போயிருக்கிறாயே!" என கேள்விமேல் கேள்வி கேட்டாள் மகனைப் பல வருடங்களாகப் பிரிந்து தவித்துப்போன அந்தத் தாயுள்ளம்.

ரவியின் அப்பா, அழுது புலம்பாமல், "உன்னை ஆர்மிக்காரன்கள் பிடிச்சு எங்கே கொண்டு போனவன்கள்," என நடைமுறையான கேள்வியைக் கேட்டார்.

"என்னை முதலில் ஆனையிறவு ஆர்மி காம்பிலே வைத்திருந்தார் கள். பல கேள்விகள் கேட்டார்கள். எனக்கு தெரியாது என்று சொன்னதும் போட்டு அடிச்சாங்கள். நான் மயங்கி இருக்க வேணும். அடுத்து முழித்துப் பார்த்தால் பூசா மறியலில் இருந்தேன். இயக்கத்தைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டிச்சினம். எனக்குத் தெரியாது என்று சொன்னேன், நம்பாது, பல விதமாகச் சித்திரவதை செய்துபார்த்தார்கள். எனக்கு ஏதேனும் தெரிந்தால் தானே சொல்லலாம்" என்றான்

தாய் பொன்மணி "ஐயோ என்ர மகன் ரவியை இப்படிப் போட்டு அடிச்சுப் போட்டாங்களே!" என மகனைக் கட்டிப் பிடித்து அவன் கையிலிருந்த காயங்களைத் தடவித் தடவி அழுதாள்.

"எந்தக் குற்றமோ பிழையோ செய்யாதவனை இப்படிப்

போட்டு அடித்திருக்கிறான்களே! நாசமாப் போவாங்கள்" என்றார் ரவியின் அப்பா.

ரவியின் பெற்றோர் கேட்ட அதே கேள்விகளை மங்களம் ரவி வந்தவுடனே கேட்க நினைத்தாலும் அவனுடைய பரிதாப கோலத்தைப் பார்த்தபின் அடக்கிக் கொண்டாள். அப்போதைக்கு அவனுக்குப் பசிக்கு உணவும் நல்ல ஓய்வும் தான் முக்கியம் என எண்ணியவளுக்கு, இப்போது, ரவி தனக்கு நடந்தவற்றைப் பெற்றோருக்குச் சொல்லுவதைக் கேட்டு மங்களம் துடித்துப் போனாள். 'நான் இங்கே நேரத்திற்கு நேரம் சாப்பிட்டுக் கொண்டு சுகமாக இருக்க, அவர் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறாரே,' என மனதுக்குள் நினைத்து வருந்த, அவள் கன்னத்தில் கண்ணீர் பொலபொலவென வழிந்தது.

சிவபாலன், மங்களத்தைத் தனியே அழைத்துக் கொண்டு போய், "இப்போதைக்கு மச்சான் ரவியை வெளியே எங்கேயும் போக விடாதே. வெளியாட்களுக்கு அவர் திரும்பி வந்த விசயத்தையும் சொல்லாதே ஆர்மி அவரை தேடுதோ தெரியாது? இராணுவம் அவனை விடுதலை செய்ததா அல்லது............" எனக் கேட்டார்.

"அண்ணா, அவர் வந்த நிலைமையைப் பார்த்துத் துடித்துப் போனேன். ஆகையால் நான் அவரிட்ட எதுவுமே கேட்கவில்லை. ஆகையால் எனக்கு எதுவும் தெரியாது" என்றாள்.

சிவபாலனின் மனைவி மாலாவும் மோகனின் மனைவியும் இடியப்பமும், முட்டைப் பொரியலும் கிழங்குக் குளம்பும் சமைத்துக்கொண்டு வந்திருந்தார்கள். உணவுப் பொருட்கள் தட்டுப்பாடாக இருக்கும் இந்த நாட்களில் மங்களத்துக்கு உதவியாக இருக்கட்டும் என நினைத்து சமைத்துக் கொண்டு வந்திருந்தார்கள். எல்லோரும் இரவு அங்கு சாப்பிட்டுவிட்டுப் போனார்கள்.

ரவி இயல்பாக முன்னம் போல் சுருசுருப்பாக இருக்கவில்லை அவ்வளவாகக் கதையாது சதா யோசனையோடு அமர்ந்தி ருந்தார். மகன் கபிலன் பள்ளிக்கூடம் போகாத நேரங்களை தந்தையோடவே கழித்தான்.

அந்நேரங்களில் ரவி தன் கவலைகளை மறந்தவனாகத் தெரிந்தார். மங்களத்திற்கு ரவி இருந்த மனநிலையில் கேள்விகள் கேட்டு தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை. சில இரவுகளில் நடுச்சாமத்திலே ஐயோ! ஐயோ! என அலறிக் கொண்டு எழும்புவான். உடம்பு பூராவும் வியர்த்துப் போயிருக்கும். "ஒன்றுமில்லை ஒன்றுமில்லை. நீங்கள் பத்திரமாக வீட்டில்தான் இருக்கிறீர்கள்," என மங்களம் ரவியின் முதுகைத் தடவிச் சமாதானப்படுத்தி அவனை அணைத்து குழந்தையைத் தாலாட்டுவது போல் தடவி தட்டித்தட்டி உறங்கவைப்பாள். ரவி படும் அவஸ்தையை மங்களம் அண்ணன் சிவபாலனிடம் சொல்ல அவர் ரவியை யாழ்ப்பாணத்தில் உள்ள, ஒரு மனோதத்துவ வைத்தியரைச் சந்திக்க முன்பதிவு செய்து கூட்டிக்கொண்டு போனார். வைத்தியர் நடந்த விபரங்களைக் கேட்டபின், ரவியையும் ரவியின் காயங்களையும் பரிசோதித்துவிட்டு, சிவபாலனையும் மங்களத்தையும் அறைக்கு வெளியே இருக்கச் சொன்னார். ஒரு மணித்தியாலத்திற்கு மேல் ரவியைச் சோதித்து விட்டு அவர்களை அறைக்குள் அழைத்து "இப்ப நீங்கள் போகலாம். நாளைக்கு டெலிபோன் பண்ணி அடுத்த அப்பொண்ட்மெண்ட் பற்றிச் சொல்றேன்," எனக் கூறினார்.

அடுத்த நாள் காலையிலே வைத்தியர் சிவபாலனுக்கு டெலிபோன் பண்ணி மாலை நான்கு மணிக்கு மங்களத்தையும் சிவபாலனையும் மட்டும் தன்னை வந்து பார்க்கும்படி சொன்னார். இவர்கள் வைத்தியரைப் போய்ப் பார்த்தபோது அவர் சொன்னதைக் கேட்டு மங்களமும் சிவபாலனும் திகைத்துப் போனார்கள்.

"உங்கள் கணவர் அதாவது ரவிச்சந்திரன் மனதளவிலும் உடலளவிலும் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார். நான் அவரிடம் பக்குவமாக் கேட்டதில் மறியலில் அவருக்கு ஏற்பட்ட பாதிப்புகள் எல்லாவற்றையும் சொன்னார். அவர் அனுபவித்த கொடுமைகள் பற்றி உங்களுக்கும் தெரிந்தால்தான் நீங்கள் அவருக்கு ஆதரவாகவும் ஆறுதலாகவும் இருக்கலாம். அவர் உடம்பு முழுவதும் சூடேற்றிய இரும்பு கம்பியால்

அடித்தக் காயங்கள். இந்த அடிகளின் தாக்கம் தாங்க இயலாமல் நினைவு தவறிப் போய் மணித்தியாலக் கணக்காக இருந்திருக்கிறார். அவர் உடைகள் உரியப்பட்டு நிர்வாணமாக வைத்து அவர் ஆண்குறியைக் கடுமையாகத் தாக்கி, பூட்ஸ் கால்களால் மிதித்து, கைவிரல்களின் நகங்களைக் குறடு கொண்டு பிடுங்கி சித்திரவதை செய்திருக்கிறார்கள். ஒரு நாள் இரண்டு நாள் இல்லை, இது பல வருடங்களாகத் திரும்பத் திரும்ப நடந்திருக்கிறது. கடைசியாக அவரிடம் இயக்கத்தைப் பற்றி தகவல் எதுவும் இல்லை என முடிவெடுத்து, அவரைப் போல் இன்னும் நான்கு பேரை ஒரு காட்டுப் பிரதேசத்திலே கொண்டு போய் விட்டிருக்கிறார்கள். என்ன காடு எங்கே என்று எதுவுமே அவர்களுக்குத் தெரியாது. அப்படிக் காட்டிலே திரியும் போது அவர்களோடு இருந்த ஒருவனைப் புலி அடித்துப் போட்டுத் தூக்கிக்கொண்டு போயிருக்கிறது. அவர் என்னிடம் சொன்ன விதத்தில், அந்தக் காட்சி என்னும் அவர் மனதை விட்டு அகலவில்லை எனத் தெரியிது. அவர்கள் ஒருவாறு காட்டை விட்டு வெளியேறி ஒரு ஊருக்குள்ளே போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் போன ஊர் திசமகாராம, ஆகையால் அவர்கள் அலைந்து திரிந்தக் காடு யால என அப்போதுதான் அவர்களுக்கு தெரிந்தது. கையில் காசுமில்லாமல் பட்டினியாகக் கிட்தட்ட இரண்டு மாதங்களாக அலைந்து திரிந்து தான் வீட்டுக்கு வந்து சேர்ந்திருக்கிறார். அவரிடம் நீங்கள் இராணுவம் பிடித்துக் கொண்டு போனபின் என்ன நடந்தது என விசாரிக்காமல் இருந்தால் நல்லம். அவரை தனியே விடாது நீங்கள் அவருடன் மற்ற நல்ல விசயங்களைப் பற்றி நினைவு படுத்திக் கதைத்துக் கொண்டிருந்தால் அவர் பழைய நிலைமைக்கு வந்துவிடுவார்," என வைத்தியர் அவர்களுக்கு நம்பிக்கை கொடுத்தார். மேலும் "இந்த மாத்திரைகளை வாங்கி ஒழுங்கா நேரம் தவறாமல் கொடுக்க வேணும்" என மாத்திரைகளை எழுதிக் கொடுத்தார். வாரத்தில் இரண்டு நாள் யாழ்ப்பாணத்துப் பெரிய ஆஸ்பத்திரியில் ஒரு மனோதத்துவ ஆலோசகரைப் பார்க்க அப்பொய்ன்ட்மெண்டும் (நியமனமும்) எடுத்துக் கொடுத்தார்..

இராணுவம் பிடித்துக் கொண்டு போனவர்களுக்கு நடந்த பல விசயங்களைப் பற்றி மங்களம் கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால் அவள் கணவர், அவள் ரவி எப்படி எல்லாம் கஷ்டப்பட்டிருக்கிறார் என அறிந்ததும் மங்களத்தின் இருதயத்தை யாரோ நசுக்குவது போல் நொந்தது. கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. சிவபாலன் மங்களத்தை அணைத்து ஆறுதல் சொல்லி

“மச்சானுக்கு நடந்ததைக் கேட்க எனக்கே நெஞ்சுக்குள்ளே வலிக்குது. தங்கச்சி! உனக்கு எப்படியிருக்கும் என்று எனக்கு நல்லாவே புரியுது” என்றான். மங்களத்தைக் காரில் ஏற்றியபடி. வீடு போய்ச் சேரும்வரை தொடர்ந்து சிவபாலன்.

“தங்கச்சி, நீ கவலைப்பட வேண்டாம். மச்சான் மெல்ல மெல்ல சுகமாயிடுவான். பழைய ரவியாக மாறுவான். நீ பொறுமையாக இருக்கவேணும். டொக்டர் சொன்ன விசயங்களை அப்பா அம்மாவுக்கோ ரவி வீட்டுக்கோ தெரிய வேண்டாம். வெளியாட்களுக்கும் தெரிய வேண்டாம். ரவி வியாபாரத்தையும் கவனிக்கத் தொடங்க வேணும். இன்னொன்று தங்கச்சி! நடந்த அந்த விசயத்தை ஒருவருக்கும் தெரியாமல் முக்கியமாக ரவிக்குத் தெரியாமல் பாத்துக்கொள். தெரிந்தால் எல்லோருடைய வாழ்க்கையுமே நாசமாப் போயிடும். கவனமா நடந்து கொள் அம்மா?” என மங்களத்திற்கு ஆறுதலும் அறிவுரையும் சொல்லிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள்.

மங்களம், ரவியின் மருந்துகளை நேரம் தவறாமல் ஒழுங்காக் கொடுத்ததாலும், ஒழுங்கா மனோதத்துவ ஆலோசகரை சந்தித்து வந்ததாலும், சிறிது சிறிதாக அவர் இயல்பு நிலைக்கு வரத் தொடங்கினார். ரவி இரவிலே கனவு கண்டு குளறுவதும் மெல்ல மெல்லக் குறைந்து கொண்டு வந்தது

கபிலனும் பள்ளிக்கூடம் போகின்ற நேரம் தவிர மற்றைய நேரங்களைத் தகப்பனோடுதான் கழித்தான். ரவி இயல்பு நிலைக்கு வரவும் குடும்பமாக அடிக்கடி ரவியின் பெற்றோர் வீட்டுக்குப் போய் அங்கே தங்கிவிட்டு வருவார்கள். அங்கு தங்கி இருக்கும் போது ரவி தன் தம்பி மோகனோடு அவர்களுடைய

வியாபார விசயங்களைப் பற்றிக் கதைப்பார்கள். ஆறு மாதத்தில் ரவியும் வியாபாரத்தை மோகனோடு சேர்ந்து கவனிக்கத் தொடங்கிவிட்டார்.

மேலும் ஒருவருடம் உருண்டோடியது. மங்களம் காலையிலே சோர்ந்து சோர்ந்து படுத்திருந்தாள். ரவி இதை அவதானித்துவிட்டு. டொக்டரிடம் கூட்டிக்கொண்டு போய் காட்டினான். டொக்டர் மங்களத்தை சோதித்து விட்டு அவள் இரண்டு மாதக் கர்ப்பிணி எனச் சொன்னார். ரவிக்கும் மங்களத்திற்கும் ரவியின் பெற்றோருக்கும் அண்ணன் சிவபாலன் குடும்பத்துக்கும் ஒரே சந்தோசம். பதினைந்து வயது கபிலனுக்கு தனக்கு ஒரு தம்பியோ தங்கச்சியோ பிறக்கப் போகிறது என்று அறிந்ததும் அவன் மனதில் மகிழ்ச்சி கரை புரண்டோடியது.

ஒன்பது மாதம் முடிய ரவியின் நிறத்தோடும் மங்களத்தின் அழகோடும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. ரவியின் பெற்றோரும் ரவியின் தம்பி மோகன் குடும்பத்தாரும் மங்களத்தின் அண்ணன் சிவபாலன் குடும்பமும் மருத்துவமனையில் இருந்த மங்களத்தையும் குழந்தையையும் பார்க்கப் போனார்கள். மங்களத்தின் அழகிய, பெரிய கண்களோடும், அதே செதுக்கிய அழகிய நாசியோடும் ரவிச் சந்திரனின் சிவந்த நிறத்தோடும் இருந்த குழந்தையின் அழகைப் பார்த்து இரண்டு வீட்டாருக்கும் ஒரே ஆனந்தம் தான். குழந்தைக்கு யாழினி எனப் பெயர் சூட்டினார்கள். கபிலனுக்கோ உலகத்தின் உச்சிக்கே போனது போன்ற உணர்வு. தன் தங்கையின் அழகிய இளஞ்சிவப்பு நிற சின்னஞ்சிறுய உள்ளங்கைகளை, பாதங்களைத் தொட்டுக் கொஞ்சி அவளுடைய ஒவ்வொரு அசைவையும் பார்த்து அதிசயித்தான்.

“அம்மா! பாருங்கோ தங்கச்சியின்ட பாதங்கள், கைகள் எவ்வளவு சின்னதாகவும் வடிவாகவும் இருக்குது,” எனச் சொன்ன அவன் முகத்தில் தெரிந்த சந்தோசத்தையும் பெருமையும் பார்த்து மகிழ்ந்தாள் மங்களம்.

சிவபாலனின் மனைவியோ தன் மகன் வசீகரனிடம், “உன்னுடைய முறை மச்சாள். அவள் உனக்காகத்தான்

*பிறந்திருக்கிறாள்" என்றாள். எட்டு வயது வசிகரனின் மனதில் தாய் கூறியது அப்படியே பதிந்துவிட்டது. சிவபாலனைப் போல் வசீகரனும் குணமானவன். இரண்டு குடும்பங்களும் ஒன்றாகக் கூடும்போது யாழினியை குழந்தையாகவும் பின்பு அவள் வளர்ந்தபின் ஒரு நண்பனாகவும் கவனமாகப் பார்த்துக்கொண்டான்.*

*பள்ளிக்கூட நேரத்தையும் பாடங்கள் படிக்கிற நேரங்களையும் தவிர கபிலனின் மற்ற பொழுதுகள் யாழினியுடன் கழிந்தது. அவள் சிரித்தால், அவனும் கூடவே சிரித்து இன்புற்றான். யாழினி அழுதால் என்ன ஏதோ என வருத்தப்பட்டான்.*

# அத்தியாயம் 3

*வருடங்கள் பதினான்கு உருண்டோடியது. உள்நாட்டுப் போரின் சூழலில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மூடுவதாலும், ஊரடங்குச் சட்டத்தாலும் மாதக்கணக்காகப் பள்ளிக்கூடங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் பாடங்கள் ஒழுங்காக நடக்காமலிருந்தது. கபிலன் இதை எல்லாம் ஒருவாறு பொறுமையாகக் கடந்து யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரியில் படித்து, இப்போது தான் அவனது இருபத்தி ஒன்பதாவது வயதில் மருத்துவராகப் பட்டம் பெற்று, யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் வேலைக்குச் சேர்ந்திருந்தான். யாழினி அழகிய இளம் கன்னியாக உடுவில் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தாள்.*

*வசீகரனும் யாழ்ப்பாணத்து பல்கலைக்கழகத்தில் வர்த்தகம் படித்துக் கொண்டிருந்தான். ஆறடி உயரமாகவும் வாட்டசாட்டமாகவும் வளர்ந்திருந்தான். பக்கத்து ஊரான சண்டிலிப்பாயில் வசித்தபடியால் சனி ஞாயிறு நாட்களில் மங்களம் மாமியின் குடும்பத்தாரையும் முக்கியமாக யாழினியையும் பார்க்க வருவான். வசீகரனும் கபிலனும் தோழமையாக பழகினார்கள். கலாசாலைப் பட்டம் பெற்று*

*வேலையானதும் யாழினியைக் கலியாணம் கட்ட காத்திருந்தான் வசீகரன். ஆனால் அதை வெளிப்படையாகக் காட்டி யாழினியை சங்கடப் படுத்த அவன் விரும்பவில்லை.*

*இந்த பதினாலு வருடங்களில் யாழ்ப்பாணத்தில் பல பல மாற்றங்கள். இரண்டாயிரத்து ஒன்பதில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்திருந்தது. ஆயினும் இப்போது வட மாகாணத்தில் இராணுவத்தின் நடமாட்டமும் கெடுபிடியும் கூடியிருந்தது. ஆகையால் யாழினியைப் பள்ளிக்கூடத்திற்கு வாகனத்தில் தந்தை அல்லது அண்ணன் கபிலன் பத்திரமாகக் கூட்டிக் கொண்டு போயும் திரும்ப வீட்டுக்கும் கூட்டிக் கொண்டும் வந்தார்கள்.*

*மேலும் நான்கு வருடங்கள் ஓடியது. உயர்தரப்ரீட்சையில் சித்தி பெற்ற யாழினி வர்த்தகம் படிப்பதற்குப் பிரியப்பட்டாள். யாழ்ப்பாணம், மட்டக்கள்ப்பு ஆகிய இரு பல்கலைக்கழகங்களுக்கும் விண்ணப்பம் போட்டிருந்தாள். அவளுக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கவில்லை. ஆனால் மட்டக்களப்பு வந்தாரமூலையில் உள்ள பல்கலைக்கழகத்தில் தான் இடம் கிடைத்தது. வீட்டை விட்டு தூரப் போவது பெற்றோரரான ரவிக்கும் மங்களத்திற்கும் உடன்பாடில்லை.*

*“நாட்டின் நிலைமை இன்னும் சரியில்லை ஆகையால் நீ மட்டக்களப்புக்கு எல்லாம் போக வேண்டாம். இங்கேயே எதாவது மேற் படிப்புப் படிக்கலாமே?” என மங்களம் யாழினியை வெளியூர் போகாமல் தடுக்கப்பார்த்தாள்.*

*“யாழினி, நீ மட்டக்களப்புக்கு போறது எனக்கும் அவ்வளவாக விருப்பமில்லை. ஆனால் நீ பாடுபட்டுப் படித்திருக்கிறாய் அதனால் தான் அங்கே இடம் கிடைத்திருக்கிறது. மட்டக்களப்பு பல்கலைக்கழகமும் நல்ல தரமானது. எங்களை எல்லாம் விட்டிட்டு உன்னால் தனியே இருக்கமுடியுமா?”*

*“ஓம் அப்பா, நான் படிக்க விரும்பின டிக்கிரி இதுதான். இதைத் தவற விட எனக்கு விருப்பமில்லை. ஆகையால்*

*மட்டக்களப்புக்கு போக நான் தயார், பிளீஸ் அப்பா! ஓகே சொல்லுங்கோ"" எனக் கெஞ்சினாள்.*

*"சரி யாழினி உன் விருப்பப்படியே மட்டக்களப்புக்குப் போகலாம். அங்கே போய் நீ கலாசாலை விடுதியில் எல்லாம் தங்க வேண்டாம், என் நண்பன் குலசேகரம் மாமாவைத் தெரியும்தானே? நேற்று அவரோடு உனக்கு வந்தாரமூலைப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகம் செய்ய இடம் கிடைத்திருக்கு என்று சொன்னேன். உடனே அவர் தங்கள் வீட்டில் நீ தங்கி தினமும் யூனி போய் வரலாம். மாமியும் நானும் யாழினியை நல்லாப் பாத்துக்கொள்வோம் என்றார். அவையின்ர மகள் கலியாணம் கட்டிப் போன பின் அவர்கள் இரண்டு பேரும் தான் வீட்டில். நீ அவர்களோடு இருந்தால் அவர்களுக்கும் பம்பலாக இருக்கும் தானே! நீ என்ன சொல்லுறாய்?"*

*"தாங்யு! தாங்யு! அப்பா" எனத் தந்தையைக் கட்டிப்பிடித்து அவர் நெற்றியில் முத்தமிட்டாள் யாழினி.*

*இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மங்களத்திற்கு யாழினி மட்டக்களப்பில் குலசேகரம் வீட்டில் தங்கித்தான் கலாசாலை போகப் போகிறாள் என்று அறிந்ததும் பெரு மூச்செறிந்தாள்.*

*அன்று மாலை வேலையால் வந்த கபிலனுக்கும் தங்கையை வெளியூர் அனுப்ப விருப்பமில்லை. பலதும் சொல்லி அவளைப் போகாமல் தடுக்கப் பார்த்தான். "யாழ்ப்பாண பல்கலைக்கழத்தில் உனக்கு இடம் கிடைக்கக் கூடும், ஒருவருசம் கல்லூரிப் படிப்பை பின்போடலாமே. அதோடு உன்னைப் பிரிந்திருக்க எனக்குக் கஷ்டமாக இருக்கு," என சொல்லிப் பார்த்தான்*

*யாழினியோ, "அண்ணா! உங்களுக்கும், அம்மா, அப்பா எல்லோருக்கும் நான் இன்னும் சின்னக் குழந்தை என்ற நினைப்பு. எனக்கு பதினெட்டு வயது. எங்கே போனாலும் என்னைப் பார்த்துக் கொள்ள முடியும் அதோடு குலசேகரகம் மாமா வீட்டில் தானே தங்கி யூனிக்குப் போவேன். அவர்களுடைய வீடும் வந்தாரமூலையிலே யூனிக்குக்*

கிட்டத்தானே. நான் நடந்தோ அல்லது பஸ்சிலே போய் வரலாம். என்னை அவர்கள் நல்லா பாத்துக் கொள்ளுவினம்." இப்படிச் சொல்லி எல்லோரையும் தன் விருப்பத்திற்கு இணங்க வைத்து மட்டக்களப்புக்குப் போக வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினாள்.

ரவி தன் நண்பன் குலசேகரத்தோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு யாழினி அவர்கள் வீட்டில் தங்குவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

யாழினி மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்திற்குப் படிக்கப்போகிறாள் என கேள்விப்பட்ட வசீகரன் உடனே தனது பைக்கில் ஏறி சண்டிலிப்பாயில் இருந்து, யாழினியைப் பார்க்க அவள் வீட்டுக்கே வந்துவிட்டான். அவனுக்கு யாழினி மேல் தன் முறைப் பெண் என்ற பாசம். வந்தவன்,

"யாழினி நீ மட்டக்களப்புக்கு எல்லாம் போக வேண்டாம். அது உனக்கு புது இடம். நீ தனித்துப் போவாய். இங்கேயே யாழ்ப்பாணத்திலேயே தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் வர்த்தகம் செய்யலாமே?" எனச் சொல்லி மட்டக்களப்புக்குப் போகாமல் அவளைத் தடுக்கப் பார்த்தான்.

"வசீ அத்தான், நான் மட்டக்களப்புக்குப் போவது என முடிவெடுத்து விட்டேன். எனது சிநேகிதி சந்திராவும் வந்தாரமூலை பல்கலைக்கழகத்தில் நான் படிக்கப்போகிற அதே கோர்ஸ் தான் செய்யப்போறா. ஆகையால் நான் தனித்துப் போவேன் என்று கவலைப்படாதே" என்று கூறி அவனுடைய கவலையைத் தீர்த்து வைத்தாள்.

யாழினிக்கு வசீகரன் போல அவன் மேல் ஈடுபாடிருக்கவில்லை. சிறு வயது முதல் ஒன்றாய் விளையாடி வளர்ந்திருந்தார்கள். மச்சான், என்ற உரிமையோடு அவன் தன் மேல் பாசமாகவிருக்கிறான் என்று மட்டும் தெரிந்திருந்தது. ஆனால் வசீகரனோ, படிப்பு முடிந்து வேலையானதும் யாழினியை தனக்கு கட்டித்தரும்படி தன் மாமியிடமும், ரவி மாமாவிடம் கேட்பதற்குக் காத்திருந்தான். யாழினி மட்டகளப்பு

போய்விட்டால் அவளை அடிக்கடி பார்க்கமுடியாமல் போய்விடும் என்ற கவலை அவனுக்கு.

ஒரு வெள்ளிக்கிழமை கபிலன் ஆஸ்பத்திரியில் அரைநாள் லீவ் போட்டுவிட்டு,மதியம் பன்னிரெண்டு மணி அளவில் தன் டொயோட்டா வண்டியை ஓட்ட, யாழினியும், பெற்றோரும் மட்டக்களப்புக்குப் புறப்பட்டனர். இரவு ஏழு மணிக்கு வந்தாரமூலையில், கழுவான் கேணி தெருவிலிருந்த குலசேகரத்தின் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவர்களை அன்போடு குலசேகரத்தின் குடும்பம் வரவேற்றனர். இரவு உணவுக்கு இடியப்பம், பிட்டுடன் சேர்த்து கத்தரிக்காய் பொரியல், இறால் பொரியல் மீன் குழம்பு, முருங்கைக்காய் கறி என விதம் விதமாக வாய்க்கு ருசியாக அவர்களுக்காக அன்போடு சமைத்து வைத்திருந்த விருந்தை உண்டு மகிழ்ந்தனர். அடுத்த நாள் சனிக்கிழமை ரவியின் குடும்பம் பல்கலைக்கழகத்தைச் சுற்றிப் பார்த்தனர். அன்று இரவு ரவி குலசேகரத்தின் குடும்பத்தையும் தன் குடும்பத்தையும் உணவு அருந்துவதற்கு மட்டக்களப்பில் பெயர் போன 'பாடும் மீன்' உணவகத்திற்கு அழைத்துச் சென்றார். அடுத்தநாள் காலையிலே ரவியின் குடும்பத்தார் கட்டுடைக்குப் போகத் தயாராகி விட்டனர். யாழினியை விட்டுப் பிரிய மனமில்லாமல் விடைப் பெற்றனர்.

"யாழினி கவனமா இரு. குலசேகரம் ஆன்டி சொல்கிறபடி நடந்து கொள்" என அவளைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள் மங்களம். ரவியும் தன் பங்குக்கு மகளைக் கட்டி அணைத்து விடை பெற்றார்.

"ஆல் தெ பெஸ்ட் தங்கச்சி. கவனமா படி" என விடைப்பெற்றான் கபிலன்.

படிப்பு, புது இடம், புது அனுபவம் என யாழினியின் வாழ்க்கை விறு விறுப்பாகவும் சந்தோசமாகவும் ஓடியது. அவளின் பள்ளிக்கூடச் சிநேகிதி சந்திரா பல்கலைகழகத்தின் ஹஸ்டலில் தங்கியிருந்தாள். யாழினியும், சந்திராவும் ஒரே கோர்ஸ் செய்வதால் ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாக

இருந்தனர். பல்கலைக்கழகப் பர பரப்பும் குலசேகரம் வீட்டில் தங்கியிருந்தபடியாலும் யாழினியை வீட்டின் நினைப்பு அவ்வளவாக வாட்டவில்லை. கலாசாலைப் படிப்பு இரண்டு சிநேகிதிகளுக்கும் புது அனுபவமாகவும் மிகவும் சந்தோசமாகவும் கழிந்தது.

ஒப்வொரு இரவும் தவறாமல் யாழினி படுக்கைக்கு போகுமுன் மங்களமும் ரவியும் வாட்சப்பில் அவளை அழைத்து கதைப்பார்கள். கபிலன் சில இரவுகள் வேலை இருந்தால், காலையில் யாழினியை வாட்சப்பில் கூப்பிட்டு “என் குட்டி தங்கச்சி எப்படி இருக்கிறாய். ஐ மிஸ் யு.” என்பான். “ஐ ஆல்சோ மிஸ் யு பிக் அண்ணா!” என கலகலவென சிரிப்பாள். இந்தச் சிரிப்பைக் கேட்பதற்காகவே கபிலன் தன் செல்லத் தங்கையை நாள் தவறாமல் டெலிபோன் பண்ணுவான்.

ஆறு மாதம் கழிந்திருக்கும் திடீரென சிநேகிதி சந்திராவின் தந்தை மாரடைப்பால் இறந்து விட்டார் எனச் செய்தி வந்தது. உடனே சந்திரா யாழ்ப்பாணம் புறப்பட்டுப் போய்விட்டாள். படிப்பு நிமித்தம் யாழினியால் தானும் அவள் கூடப் போக முடியாததால், தாய் மங்களத்திற்கு டெலிபோன் பண்ணி விசயத்தைச் சொல்லி

“மரண வீட்டுக்குப் போய் எல்லா உதவிகளும் செய்யுங்கோ, அம்மா” எனச் சொன்னாள்.

தந்தை இறந்ததால் வீட்டில் ஏற்பட்ட நிலைமையால் பல்கலைக் கழகத்துப் படிப்பைத் தொடரச் சந்திரா மட்டக்களப்புக்கு திரும்பி வரவேயில்லை. சிநேகிதி சந்திராவின் தோழமை இல்லாதது யாழினிக்குத் தனிமையாகவே இருந்தது

ஒருநாள் யாழினி பல்கலைகழத்தின் ஒரு கட்டிடத்திற்குள் போவதற்கு படிக்கட்டுகளில் ஏறியபோது இடது கால் பெருவிரலை இடித்துக் கொண்டாள். இரத்தம் கசிய நோவும் தாங்க முடியாது படிக்கட்டில் அப்படியே அமர்ந்து விட்டாள். அந்நேரம் அங்கு ஓடி வந்த ஒரு சகமாணவன் “பெரிய காயமாக இருக்குது வாங்கோ யூனி மெடிக்கல் சென்டருக்கு போவம்” எனக் கூட்டிச்சென்று, அவள் கால் பெருவிரலுக்கு மருந்தும்

கட்டும் போட்டுக்கொண்டு வந்தார்கள். நடந்து வரும் பொழுது, அவன், "என் பெயர் அர்ச்சுன். நானும் நீங்கள் செய்யிற கோர்ஸ் தான் செய்யிறேன். எங்கே, உங்களோடு கூடவே இருக்கும் சிநேகிதியை கொஞ்ச நாளாகக் காணோம்?" எனக் கேட்டான்.

"சந்திராவை கேட்கிறீங்களா? அவவின்ரை அப்பா இறந்து போனதால் அவ கோர்சை பின் போட்டிருக்கிறா. சொறி நூறுபேர் கூடுகிற லெக்சர் ஹாலிலே உங்களைக் கவனிக்கவில்லை. "என் பெயர் யாழினி."

"அது எனக்குத் தெரியுமே. யூனி தொடங்கிய முதல் நாளே லெக்சர் ஹாலுக்குள்ளே நீங்கள் வந்ததும் கவனித்துவிட்டேன். நீங்கள் நல்ல வடிவு. உங்கள் சிநேகிதி திரும்பிவரும் வரை நான் உங்களுக்கு கொம்பனி குடிக்கலாமா?"

யாழினியின் முகம் நாணத்தில் சிவந்துவிட்டது. அவனுடைய வெளிப்படையான பேச்சு அவளுக்குப் பிடித்திருந்தது.

"........அதற்கென்ன ஒகே," என பதிலளித்தாள் யாழினி.

அன்று முதல் தினமும் கலாசாலை வர்த்தகப் பாடங்களுக்கு இருவரும் சேர்ந்தே போவார்கள். பக்கத்தில் பக்கத்தில் அமர்ந்தே விரிவுரைகளைக் கேட்பார்கள். கலாசாலை நூலகத்திற்கு அடுத்தாற்போல் இருந்த பென்சீன் பூங்கா புற்தரையில் அமர்ந்து ஒன்றாய் சேர்ந்து படிப்பார்கள். மதிய உணவை உண்பார்கள். வீட்டில் தனது மதிய உணவினைக் கட்டும்போது என் சினேகிதிக்கு என்று சொல்லி அருச்சுனுக்கும் சேர்த்துக்கட்டி டப்பாவில் கொண்டுபோய் அவனுடன் பங்கிட்டு உண்ணுவாள்.

அவர்களுடைய நட்பு பொழுதொரு வண்ணமாக வளர்ந்து நெருங்கிய நண்பர்களானார்கள். யாழினி அர்ச்சுன்னுக்கு தன் குடும்பத்தைப் பற்றிய முழு விவரத்தையும் சொல்லி, தான் குடும்பத்தின் நெருங்கிய நண்பர் குலசேகரம் அங்கில் வீட்டில் தங்கி இருப்பதாகவும், பல்கலைக்கழகத்திற்கு பஸ்சிலும், பொழுது சாயும்வரை விரிவுரைகள் இருந்தால் அங்கிலே காரில் தன்னை வந்து கூட்டிச்செல்வார் எனத் தன்னைப் பற்றிச் சொன்னாள்.

அர்ச்சுன் தன்னைப் பற்றியும் தன் குடும்பத்தைப் பற்றியும் ஒன்றும் சொல்லாமல் இருக்கவும் யாழினி,

"அர்ச்சுன், நீ எந்த ஹஸ்டலில் தங்கியிருக்கிறாய்?" எனக் கேட்டாள்

"நியுவ் விங் ஹாஸ்டலில்."

"உன்ரை ஊர் எது? உன் குடும்பத்தைப் பற்றிச் சொல்லேன்?" என யாழினி கேட்டாள்.

அர்ச்சுன் பதில் ஏதும் சொல்லாது மௌனமாக அமர்ந்திருந்தான்.

"உனக்குச் சொல்ல விருப்பமில்லை என்றால் சொல்ல வேண்டாம்," என்றாள் யாழினி.

"உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிட்ட சொல்லுவேன். யாழினி, நான் ஒரு அநாதை. என் அம்மா அப்பாவை நான் பார்த்ததேயில்லை. குழந்தையாக இருக்கும் போது இங்கு இருக்கும் ஆசிரமத்திலே விடப்பட்டேன். படித்து முன்னேற வேண்டும், நல்ல உத்தியோகத்திற்குப் போக வேணும் என்ற ஆசையால் படிப்பிலே கவனம் செலுத்தினேன். உயர்தர பரீட்சையிலே இரண்டு டிஸ்டிங்சனும் இரண்டு கிறெடிட்டும் பெற்றதால், புலம் பெயர்ந்த தமிழர்கள் நடாத்தும் யூனி டிரஸ்ட் என் யூனி படிப்பிற்கும் ஹஸ்டலில் தங்குவதற்கும் தேவையான நிதியைக் கொடுத்து உதவுகிறார்கள்," என்றான்

"அருச்சுன், நீ எந்த ஆசிரமத்திலே வளர்ந்தாய்?"

"கல்லடி உப்போடையில் இருக்கும் இராமகிரிஷ்ன மிசன் ஆண்கள் ஆசிரமத்தில் தான், எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அங்கேதான் இருக்கிறேன். என் அப்பா அம்மா எப்படி இருப்பார்கள்? எப்படி இந்த ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தேன் எனப் பல கேள்விகள் என் மனதில் எழுந்தன. யாழினி நான் சிறுவயதில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது சக மாணவர்களை அவர்கள் பெற்றோர்கள் என் தங்கமே என் குஞ்சு எனக் கொஞ்சுவதை பார்க்கும் போது என் நெஞ்சுக்குள் வலிக்கும்" தன் நெஞ்சைத் தொட்டுச் சொன்னவனின் கண்கள் கலங்கிவிட்டன. "என் பதின்ம வயதில்தான், எங்கள் உள்நாட்டுப்

*போரினால் என்னைப்போல் பல அநாதை குழந்தைகள் இருக்கிறார்கள் எனப் புரிந்துகொண்டேன்” என்றான்*

*யாழினியின் மனதில் அவளையும் மீறி இனம்புரியாத பரிவு ஏற்பட்டது. அவன் தோள்மேல் ஒரு கையை வைத்தபடி, அர்ச்சுன், நீ குடும்பமாக வாழ்ந்த இராமகிரிஷ்ன மிசன் தோழர்கள் இருக்கிறார்கள். ஏன் நான் இருக்கிறேன். நீ தைரியமாக இருக்கவேணும். உனக்கே தெரியும் எங்கள் உள்நாட்டுப் போரினால் வீட்டுக்கு வீடு பலவிதமான அவலங்கள். உன்னைப்போலத் தாய் தந்தையரை இழந்தவர்கள், தந்தையை இழந்து வாழ்வாதாரமின்றி தவிக்கிறவர்கள். ஏன் எங்கள் குடும்பத்தில் என் அப்பாவை ஆர்மி பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். அவர் இறந்துவிட்டார் என நம்பிவிட்டார்கள். எட்டு வருசத்திற்குப் பின் திரும்பி வந்திருக்கிறார். இப்படி எமது தமிழ் சனங்களுக்குப் பல கஷ்டங்கள். ஆனால் நாங்கள் வாழ்ந்துத்தான் ஆகவேண்டும். அதற்கு மனதில் தைரியம் வேண்டும்,” என அருச்சுனுக்கு ஆறுதல் சொன்னாள் யாழினி.*

*அர்ச்சுனுடன் அல்லது யாழினியுடன் அவர்கள் சிநேகிதர்கள் பேச வேண்டுமெனில், பக்கத்திலிருக்கிற பிள்ளையார் கோயிலுக்கு, அல்லது பென்சீன் பூங்காவைத் தேடிப் போவார்கள். அவர்கள் இருவரும் வளமையாக இந்த இடங்களில் ஒன்றாக இருப்பதை சக மாணவர்கள் கவனித்திருந்தார்கள். அருச்சுன், யாழினி இருவர்களுடைய இணைபிரியா நட்பு காலம் போகப்போகக் காதலாக மாறியது.*

*கலாசாலை விடுமுறைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து டிரைவர் காரை ஓட்ட, தந்தை யாழினியை வீட்டுக்குக் கூட்டிவரப் போவார். அதற்கு அடுத்த விடுமுறைக்கு அண்ணன் கபிலன் வந்து கூட்டிக் கொண்டு போவான். அவனிலும் பார்க்க பதின்னாலு வயது இளமையான தங்கை மேல் கபிலனுக்கு அளவு கடந்த பாசம். சில விடுமுறைக்கு தந்தையோடு தாயும் வந்தால் நண்பன் வீட்டில் மூவரும் ஒரு நாள் தங்கிவிட்டுத்தான் யாழினியை வீட்டிற்கு கூட்டிக் கொண்டு போவார்கள்.*

இரண்டு வருடங்கள் உருண்டோடியது. யாழினியும் அர்ச்சுன்னும் கபேகளிலும் பார்க்கிலும் சந்தித்து மணித்தியாலக் கணக்கில் பொழுதைப் போக்குவார்கள். இருவர்களின் விருப்பு வெறுப்புகள் ஒன்றாக இருந்ததால் அவர்கள் மனம் ஒத்த காதலர்களானர்கள்.

ஒரு நாள் ஒரு மாலைப் பொழுதினிலே முன்னம் பேசி வைத்திருந்தபடி யாழினி அர்ச்சுன்னனை பென்சீன் பார்க்கில் சந்திக்கப் போனாள். அந்த நேரத்தில் பார்க்கில் சனநடமாட்டம் மிகவும் குறைவாகவிருந்தது. செம்மைக் கொன்றைப் பூக்கள் பூத்துக் குலுங்கும் மரங்கள் அடர்ந்திருந்த இடத்திலிருந்த சிறு குளத்தைப் பார்த்தபடி நின்றான் அருச்சுன். ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறான் போல் என்றும், தான் வந்தது தெரியாது என எண்ணிய யாழினி மெதுவாகப் பின்னால் போய் கரங்களை நீட்டி விரல்களால் அவன் விலா எலும்புகளை கிளறினாள். ஆனால் அவள் பின்னால் வந்தது அர்ச்சுன்னுக்குத் தெரிந்திருந்தபடியால் சடாரெனத் திரும்பினான். யாழினி இதை எதிர்பார்க்கவில்லை. திரும்பியவன் அவள் கைகளைப் பற்றி அவளை தன்னுடன் அணைத்துக் கொண்டான். அவன் பிடியிலிருந்து தப்பப்பார்த்த அவளின் விலா எலும்புகளை விரல்களால் கிளறவும் அவள் கிரீச்சிட்டு சிரிக்க இருவரும் நிலைதடுமாறி பூக்கள் சொரிந்திருந்த புற்தரையில் விழுந்தனர். அப்படி விழும்போது யாழினி அர்ச்சுன் மேல் இருந்தாள், அவன் அவளை அணைக்கப் பார்த்தான்.

“வேண்டாம் அருச்சுன்! யாராவது பார்த்துவிடுவார்கள்,” எனக் கூறி திமிறிக் கொண்டு எழப் பார்த்தாள்.

“நோ யாழ் என்னிடமிருந்து நீ தப்பமுடியாது,” என அவன் கண்கள் காதலோடு பிரகாசிக்க யாழினியை இறுக அணைத்து டக்கென்று யாழினியின் கன்னத்தில் ஒரு முத்தத்தைப் பதித்துவிட்டு தன் பிடியைத் தளர்த்தினான் அருச்சுன். யாழினியின் கன்னங்கள் நாணத்தில் சிவந்தன. நிலத்தைவிட்டு எழுந்த இருவரும் உடையில் ஒட்டியிருந்த பூக்களைத் தட்டியபடி பக்கத்திலிருந்த பென்ச்சில் அமர்ந்து கொண்டனர்.

*“யாழினி! நான் உன்னைக் காதலிக்கிறேன். என்னை மணந்து என்னை சந்தோசப்படுத்திவியா?” என யாழினியின் கரங்களை ஆதரவாகப் பற்றியபடி அர்ச்சுன் கேட்டான்.*

*“டீயர் அர்ச்சுன், நானும்தான். நீ இல்லாமல் எனக்கு வாழ்க்கையே இல்லை,” என்றாள் யாழினி அவனின் தோளில் சாய்ந்தபடி.*

*“யாழினி! ஒரு அநாதையான என்னை உன் அப்பா அம்மா தங்கள் மருமகனாக ஏற்றுக் கொள்ளுவினமா?” எனத் தயங்கித் தயங்கிக் கேட்டான் அருச்சுன்.*

*“அருச்சுன் டீயர், என் அம்மா அப்பா அப்படி நினைக்கிறவர்கள் இல்லை. எனக்கு உன்னை பிடித்திருக்கு, முக்கியமாக உன்னுடைய நல்ல குணங்களை அறிந்த பின் எந்த மறுப்பும் சொல்லமாட்டினம்.”*

*“எனக்கே நான் என்ன சாதியைச் சேர்ந்தவன் என்று தெரியாத போது அவர்கள் தங்கள் மகளை எனக்கு எப்படி குடுப்பார்கள்.”*

*“நான் உன்னைக் காதலிக்கிறேன் உன்னைத்தான் கட்டுவேன் என்று முடிவாகச் சொன்னால், அவர்கள் எனக்காக ஒத்துக்கொள்வார்கள். அது மட்டுமில்லை, உன்னோடு கொஞ்சநாள் பழகினால் போதும் அவர்களுக்கு உன்னை பிடித்துப்போய்விடும்” என்றாள் நம்பிக்கையோடு.*

*கலாசாலை விடுமுறைக்கு வீட்டிற்குப் போனபோது, யாழினி, “அம்மா! அப்பா! நான் அர்ச்சுன் என்ற ஒரு சக மாணவனோடு இந்த இரண்டு வருசமாக பழகிறேன். அவனை எனக்கு நல்லா...... பிடித்திருக்கிறது. அவ........னுக்கும்......... என்... னைப் பிடித்திருக்கிறது,” என்றாள் தயங்கித் தயங்கி.*

*“யாழினி முதலிலே படிப்பிலே கவனம் செலுத்து, பாஸ் பண்ணின பிறகு உதை எல்லாம் பற்றி கதைக்கலாம்” என்றார் ரவிச்சந்திரன்.*

*“சரி அப்பா” என பதிலளித்தாள். பிறகு பார்க்கலாம் என்று சொன்னது அவளுக்கு சிறிது நம்பிக்கையைக் கொடுத்தது.*

அடுத்தக் கலாசாலை விடுமுறைக்கு வீட்டிற்குப் போனபோது, யாழினி, மீண்டும் அர்ச்சுனை பற்றி பெற்றோருடன் கதைத்தாள். "நாங்கள் இருவரும் இன்னும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புகிறோம். இதில் இருவரும் உறுதியாக இருக்கிறோம். பிறகு கல்......யாணம் கட்..டப்......போறோம் என்று சொல்லும் போது உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கக் கூடாது. அதனால் இப்பவே சொல்லி வைக்கிறேன்" என்றாள் தயக்கத்துடன்.

அடுத்த விடுமுறைக்குப் போன போது, தந்தை ரவி. "யாழினி நீ விரும்புறவன்ரை பெயர் என்ன?"

"அர்ச்சுன்," பதிலளித்தாள் யாழினி.

"அவனுடைய பெற்றோர் எந்த ஊர்?" என அடுத்த கேள்வியைக் கேட்டார்

"அர்ச்சுன் ஒரு அநாதை. ஒரு அநாதை ஆசிரமத்திலே தான் வளர்ந்திருக்கிறான். அவன் குணமானவன் படிப்பிலும் கெட்டிக்காரன்," என்றவள் அர்ச்சுன்னனின் போட்டோ ஒன்றையும் பெற்றோருக்குக் காட்டினாள்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த கபிலன், "ஓம் அப்பா நான் யாழினியை விடுமுறைக்கு கூட்டிக் கொண்டு வர மட்டக்களப்பு போனபோது அர்ச்சுன்னைச் சந்தித்திருக்கிறேன், நல்ல பண்பானவனாக தெரிகிறான், கெட்டிக்காரன் கூட, வாட்டசாட்டமா இருப்பான். என் தங்கச்சியின் அழகுக்கு ஏற்ற ஆணழகன்" என்றான்.

"என்ன கபிலன் நீ அர்ச்சுன்னனுக்காகச் சிபார்சு செய்யிறியா?" எனக் கேட்டாள் மங்களம்.

"சிபார்சுதான். அர்ச்சுனை இரண்டு மூன்று தடவைதான் சந்தித்திருப்பேன், எனக்கு அவனை நல்லா பிடித்துவிட்டது," என்றான்.

"சரி சரி படிப்பு முடிந்தபின் பார்க்கலாம். யாழினி உனக்கு பிடித்திருந்தால் எங்களுக்கும் பிடிக்கும்தானே," என்றார் தந்தை ரவி.

*அன்று இரவு படுக்கைக்குப் போகுமுன், யாழினி, கபிலனின் அறைக் கதவைத் தட்டிவிட்டு அறைக்குள் போனாள். கபிலன் தன் கணினியில் வேலையாக இருந்தான் "பிக் அண்ணா எனக்காக அர்ச்சுன்னைப் பற்றி நல்லா கதைத்தற்கு தான்ங் யு," என்றாள்*

*"எனக்குத் தெரியும் என் செல்லத் தங்கச்சிக்கு அர்ச்சுன்னை எவ்வளவு பிடிக்கும், அவனைக் காதலிக்கிறாள் என்றும். ஆனால் தங்கச்சி, நீ பொறுமையாக இருக்க வேணும். உன்னை அர்ச்சுன்னுக்கு கல்யாணம் கட்டி வைப்பது என் பொறுப்பு" என்றான்.*

*டொக்டரான கபிலனுக்குப் பெரிய இடங்களிருந்தும், நல்ல பணக்கார இடங்களிலிருந்தும் தங்கள் மகள் மாருக்கு கல்யாணம் பேசி வந்து கொண்டிருந்தது ஆனால் கபிலன் என் தங்கை முதலில் கல்யாணம் கட்டட்டும் அதன் பின் நான் கல்யாணம் கட்டுவேன் என பெற்றோரிடம் முடிவாகச் சொல்லிவிட்டான்.*

*"கபிலா உனக்கும் வயது ஏறிக் கொண்டு போகுது. அடுத்த வருசம் உனக்கு முப்பத்தைந்து வயதாகிறது" என்றாள் மங்களம்.*

*"நான் கல்யாணம் கட்டிவிட்டால், மனைவி பிள்ளைகள் என வந்துவிட்டால், என் தங்கை யாழினி மேல் கவனம் செலுத்த நேரமிராது. அது மட்டுமில்லை நான் சத்திர சிகிச்சை நிபுணராக வருவதற்கு டிரேயினிங் செய்து கொண்டிருக்கிறேன். சோதனை எடுக்க இங்கிலாந்து அப்படிப் போக வேண்டி வரும், ஆகையால் எனக்கு இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம்," எனச் சொல்லிவிட்டான்.*

*வசீகரன், தனது கபிலன் மச்சானை அடிக்கடி வந்து சந்திப்பான். கபிலனும் சண்டிலிப்பாயயிலிருந்த வசீகரன் வீட்டிற்கு நேரம் கிடைக்கும் போது போவான். இருவரும் சேர்ந்தே சினிமாவுக்குப் போவார்கள். யாழினி பல்கலைக்கழக லீவுக்கு வந்தால் வசீகரன் உடனே அவளைப் பார்க்க கட்டுடைக்கு வந்துவிடுவான். மங்களம் அவனுக்கும் யாழினிக்கும் ஆட்டு*

இறைச்சிப் பொரியல், இறால் பொரியல், மீன் குளம்பு என விதம் விதமாகச் சமைத்துப் பரிமாறினாள்.

வசீகரன், ரவி மாமா வீட்டிற்கு இப்படி அடிக்கடி போய் வந்ததால், யாழினி கலாசாலையில் தன் கூடப் படிக்கும் அர்ச்சுன்னனை விரும்புகிறாள் என அவனுக்கும் தெரிய வந்தது. இது அவனுக்குப் பெரிய ஏமாற்றமும் மன வருத்தமும் தான். ஆனல் யாழினிக்கு அர்ச்சுனைப் பிடித்திருப்பதால், இடையிலே புகுந்து குழப்பும் எண்ணம் அவனுக்கு வரவில்லை. யாழினியின் சந்தோசம்தான் அவனுக்கு முக்கியமாகவிருந்தது. ஆகையால் இது தெரிந்தும் தெரியாதது போல் இருந்தான்.

கடைசி வருடம் அதாவது மூன்றாவது வருடம் நடுவில் கலாசாலை விடுதலை வந்தபோது யாழினி தாயிக்கு டெலிஃபோன் பண்ணி,

“அம்மா! நான் நிறையப் படிக்கவேணும். யூனி நூலகத்தில் மேற்கோள் நூல்களும் எடுத்துப் படிக்கவேண்டி இருக்கு, சக மாணவர்களிடமும் ஆலோசனைகள் பரிமாறலாம். ஆகையால் நான் இந்த விடுதலைக்கு அங்கில் வீட்டிலே இருந்திடுறேன்,” என்று சொல்லி யாழினி அந்த விடுதலைக்கு வீட்டிற்குப் போகவில்லை. இதற்கு முக்கிய காரணம் அவளுக்கு அர்ச்சுனை விட்டுப் பிரிய மனமில்லாதது தான்.

சோதனை கடைசி நாளும் வந்து முடிந்தது. யாழினியும் அர்ச்சுனனும் சோதனை நன்றாகச் செய்து முடித்திருந்தார்கள். வழக்கமாக எல்லாப் பல்கலைக்கழகங்களில் நடப்பது போல இறுதி ஆண்டு மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து மட்டக்களப்பில் இருந்த ’பாடும் மீன்’ ரெஸ்டாரண்டுக்கு மதிய உணவு உண்பதற்கு போனார்கள். எல்லோரும் படித்து முடித்ததும் அடுத்து என்ன செய்யப் போகிறோம் என தங்கள் தங்கள் எண்ணங்களைப் பரிமாறிச் சந்தோசப்பட்டார்கள், ஒருத்தரை ஒருத்தர் பிரியப்போகிறோம் என்ற மன வருத்தமும் எல்லோருக்கும் இருந்தது.

அன்று யாழினியும் அர்ச்சுனனும் ஒருத்தரை ஒருத்தர் பிரிய மனமில்லாமல் பிரியும் போது, “அர்ச்சுன்! என்னை அழைத்துக்

*கொண்டுபோக அப்பாவும் அம்மாவும் வருவார்கள், அப்போது உன்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்,” என்றாள் யாழினி.*

*“இல்லை, யாழினி டிக்கிரியின் முடிவுகள் வந்தபின், எனக்கு ஒரு நல்ல வேலையையும் கிடைத்தபின்தான், உன் பெற்றோரைச் சந்தித்து, உன்னை எனக்குக் கல்யாணம் கட்டித் தரச்சொல்லிக் கேட்பேன், இப்ப வேண்டாம்” என்றான்.*

*மூன்று மாதத்தில் இறுதி ஆண்டு முடிவுகள் வெளிவந்தது. யாழினி சாதாரண தேர்வுடனும், அர்ச்சுன் முதல் வகுப்பில் தங்கப் பதக்கத்தோடும் சித்தியடைந்திருந்தான். முடிவுகள் அறிந்ததும் யாழினி உடனே கைபேசியில் அர்ச்சுனை அழைத்து வாழ்த்துக்கள் கூறினாள். மறுமுனையில் அர்ச்சுன், “யாழினி எனக்குக் கொழும்பில் உள்ள ஒரு அமெரிக்கன் கம்பனியிலிருந்து ஜொப் ஒஃபெர் வந்திருக்கிறது. அதை நான் ஏற்றுக் கொண்டு விட்டேன். ஆறு மாதத்திற்கு லீவ் எடுக்க முடியாது.*

*ஒவ்வொரு நாளும் அர்ச்சுன் வேலை முடிந்து தன் அறைக்கு வந்ததும் யாழினியைத் தொலைபேசியில் அழைத்துக் கதைப்பான். வேலையால் இரவு ஒன்பது மணிக்கு மேல் வந்தால் அவன் யாழினியை அழைப்பதில்லை.*

*இப்படியே ஆறு மாதம் கழிந்தது. அர்ச்சுனும் யாழினிக்கு வாக்கு கொடுத்தபடி ஒரு திங்களும் செவ்வாயும் லீவ் எடுத்துக் கொண்டு ஒரு சனிக்கிழமை காலை கொழும்பிலிருந்து யாழ் தேவி ரயிலில் புறப்பட்டு மதியம் ஒன்றரை மணிக்கு யாழ்ப்பாணத்தில் வந்திறங்கினான். கபிலனும் யாழினியுமாக ரயில்வே நிலையம் போய் அவனை அழைத்துக் கொண்டு வந்தனர். அதே நேரம் மங்களத்தின் அண்ணன் குடும்பமும் வந்திறங்கினார்கள். வீட்டில் மங்களம் முக்கிய விருந்தாளிக்காக தடல்புடலாக மதிய உணவு தயாரித்திருந்தாள்.*

*“அருச்சுன் வெல்கம்! வெல்கம்! உன்னைப் பற்றி எங்களுக்கு எந்த அறிமுகமும் தேவையில்லை ஏனென்றால் யாழினி உன்னைப் பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறாள்!” என அர்ச்சுனை வரவேற்றார் ரவிச்சந்திரன்.*

*“வாங்கோ தம்பி!” என அர்ச்சுனனின் முகத்தைப் பார்த்து வரவேற்ற மங்களம் அவன் முகத்திலிருந்த திருநீற்றுப் பொட்டைக் கண்டதும் ஒரு நொடி ஒருவரை நினைவூட்டியது. பின்பு மறந்தே போனாள்.*

*“ஹல்லோ அர்ச்சுன் வாழ்த்துக்கள்! கோல்ட் மெடலிஸ்ட்! கெட்டிக்காரன். அமெரிக்கன் கம்பனியில் வேலை எப்படி?” எனக் கபிலன் கைகொடுத்து வருங்கால மைத்துனனை வரவேற்றான்.*

*“வேலை கொஞ்சம் அதிகம்தான், சில நாட்களில் இரவு எட்டு மணி வரை வேலை செய்ய வேண்டி வரும். ஆனால் நல்ல சம்பளம். எனக்கு நல்லாப் பிடித்திருக்கிறது.”*

*வாங்கோ சாப்பிடலாம் என மங்களம் அழைக்க எல்லோருமாக மேசையிலிருந்து மதிய உணவு உண்டார்கள். சாப்பிட்டபடி எல்லோரும் ஊர் விசயம், அர்ச்சுன்னின் கொழும்பு வேலை, ரவிசந்திரனின் வியாபாரம் என பலதும் பேசினார்கள். மங்களம் அப்போது தான் அர்ச்சுன்னை உன்னிப்பாக அவதானித்தாள். அவன் சுருட்டைத் தலைமுடியும் அகன்ற நெற்றியும், அவன் நடை பாவனை எல்லாம் யாரையோ நினைவூட்டியது! அதே கண்களுக்கு இடையே அதே திருநீறுப் பொட்டும், அந்த மூக்கும்! மங்களத்தின் நெஞ்சைக் குளிர்ந்த கரம் ஒன்று நசுக்கியது போலிருந்தது. எனினும் முகத்தில் எதுவும் காட்டாது இயல்பாக நடந்து கொண்டாள்.*

*மதியம் உணவுக்குப்பின், அப் பெரிய வீட்டில், அந்த அந்த வயதை ஒத்தவர்கள் ஒன்றாய் கூடி, ஹாலிலும் விராந்தையிலும் கூடி பொழுதைக் கழித்தனர்.*

*அன்று மாலை அந்தி மயங்கி இருள் கவிந்துகொண்டிருந்தது. வானத்தில் ஒரு காக்கைக் கூட்டம் பறந்து மறைந்தது. இதை இரசித்தபடி ரவிச்சந்திரன், மங்களம், அருச்சுன், யாழினி நால்வரும் மொட்டை மாடியில் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.*

*இப்படியான சந்தர்ப்பத்திற்குக்கா காத்திருந்த அர்ச்சுன், “அங்கில் ரவி! நான் யாழினியை விரும்புகிறேன். என...க்..க். அவளை*

*கல்யாணம் கட்டிக் கொடுப்பீர்களா? .........நான் ஒரு அநா..... தை. எனக்குச் சொந்தம் என்று சொல்ல ஒருவருமேயில்லை. ஆகையால் நானே உங்களிடம் கேட்கிறேன்" என்றான்.*

*"அர்ச்சுன் நீ இனிமேல் அநாதை இல்லை. எங்கள் வருங்கால மருமகன். யாழினி உன்னைப்பற்றி எல்லா விசயமும் சொல்லியிருக்கிறாள். முக்கியமாக உன்னுடைய நல்ல குணங்கள். உன் படிப்பும் அறிவும். அதை உனக்குக் கிடைத்திருக்கும் வேலையிலிருந்து தெரிகிறது," என்றார் ரவிச்சந்திரன்*

*"ஓம் ஓம் தங்கப் பதக்கம் பெற்ற கெட்டிக்காரன்," என ஆமோதித்த மங்களம் "தம்பி நீ பிறந்த திகதியைத் தந்தால் உனக்கும் ஒரு சாதகம் எழுதிவிக்கலாம்," என்றாள்.*

*"ஓம் ஆன்டி எனக்குச் சாதகம் இல்லைத்தான்," என ஒரு காகிதத்தில், 10/12/1996 என எழுதிக் கொடுத்தான்.*

*அதை வாங்கிப் பார்த்த மங்களம் ஒரு கணம் திகைத்துப் போனாள். அதே திகதி!*

*இரவு உணவிற்கு, மங்களமும் சிவபாலனின் மனைவி மாலாவும் ஒன்றாய்ச் சேர்ந்து அப்பம், பால் அப்பம் கோழிக்கறி, தேங்காய்ப்பூ காரச் சம்பல் என சமைத்து மேசைக்கு கொண்டு வந்தார்கள். எல்லோரும் ஆகா என உணவைப் பாராட்டி உண்டார்கள். இரவு உணவுக்குப் பின்னும் பத்து மணி மட்டும் எல்லோரும் சாவகாசமாக இருந்து கதைத்தனர். முன் ஒழுங்கு செய்தபடி அர்ச்சுன் மங்களத்தின் அண்ணன் சிவபாலனின் வீட்டில் தங்குவதற்கு அவர்களுடன் காரில் ஏறி சண்டிலிப்பாயிற்குப் போய்விட்டான்.*

*மங்களத்திற்கோ இரவு நித்திரை வரவில்லை. அருச்சுனனின் முகமும், அந்த மற்ற முகமும் மனக்கண் முன் வந்தபடியே இருந்தது. படுக்கையில் புரண்டு புரண்டு கிடந்த மங்களத்தின் மனம் பல வருடங்கள் பின் நோக்கி ஓடியது.*

# அத்தியாயம் 4

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றி ஐந்தாம் ஆண்டின் மாபெரும் இடப்பெயர்வின் போது அண்ணன் சிவபாலன் குடும்பத்துடன் மங்களமும் கபிலனும் வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து சாகவகச்சேரியில் தங்கியிருந்தார்கள் அல்லவா. அங்குதான் மங்களம் முதல் முதலில் குணாவைச் சந்தித்தாள். குணா ஒரு அரசு சாரா அமைப்பிற்கு வேலை செய்து கொண்டிருந்தான். குணா, சிவபாலன் குடும்பத்திற்கும் அவன் கூட இடம் பெயர்ந்திருந்த எல்லோருக்கும் மிகவும் உதவியாகவிருந்தான். அவனும் மனைவியை இழந்த தனி மனிதன். அவர்கள் சாவகச்சேரியில் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு மேல் இருந்த காலத்தில் மங்களமும் குணாவும் அடிக்கடி சந்தித்துப் பழகியதில், அவர்களுக்கிடையே பரஸ்பரம் அன்பு உண்டாகியது. குணா,தான் மங்களத்தை மணக்க விரும்புவதாக சிவபாலனின் சம்மதத்தைக் கேட்டான். இளம் விதவையான மங்களத்திற்கு வாழ்வு கொடுக்க ஒருவன் முன் வந்திருக்கிறான் எனச் சந்தோசமாகச் சம்மதித்தான் சிவபாலன். அடுத்த வாரமே பக்கத்திலே இருந்த கோயிலில் அவர்களுக்குத் திருமணம் என முடிவானது. அதற்கிடையில் வேலை விசயமாக குணா யாழ்ப்பாணம் நகரத்திற்குப் போக

*வேண்டியிருந்தது. அப்படிப்போன குணாவிடமிருந்து ஒரு கிழமையாகியும் எந்தவிதச் செய்தியும் வராததால் அவன் வேலை செய்த அமைப்பிற்குப் போய் அடிக்கடி விசாரித்தனர். ஒரு மூன்று மாதத்தின் பின் குணா குறுக்குச் சூடு பட்டு இறந்து விட்டதாகச் செய்தி வந்தது. இந்தச் செய்தி கேட்டதும் மங்களம் அதிர்ச்சியாலும் மன உளைச்சளாலும் மயங்கி விழுந்து விட்டாள்.*

*குணாவின் மறைவும், நினைவும் மங்களத்தை மிகவும் வாட்டியது இனியும் மங்களத்தால் தன் நிலைமையை மறைக்க முடியாது என உணர்ந்ததும், தமையன் சிவபாலனிடம்,*

*“அண்ணா! நான் பெரிய தவறு செய்துவிட்டேன்!”*

*“தங்கச்சி என்ன சொல்லுறாய்!!”*

*“கல்யாணம் கட்டப்போகிறோம் தானே என்று நானும் குணாவும் எல்லை மீறி விட்டோம். இப்போது நான் நாலு மாத கர்ப்பிணி” என்றவள் தமையனின் தோளில் சாய்ந்து ஓவென அழுதாள். தொடர்ந்து*

*“அண்ணா! இந்தக் குழந்தையை பெத்தெடுக்க முடியுமோ தெரியாது. குணாவுக்கும் எனக்கும் கலியாணமே நடக்கவி ல்லையே. எங்கள் சொந்தங்கள் ஊரார் பழிச் சொல்லுக்கும் நான் ஆளாகி, எங்கள் குடும்பத்திற்கும் அவமானத்தைக் கொண்டு வந்துவிடுவேனே” என்றாள்.*

*தன் செல்லத் தங்கச்சி சொன்னதைக் கேட்டு சிவபாலன் கலங்கிப் போனான். ஆகையால் மங்களத்தினதும் அவர்கள் குடும்பத்தினதும் மானத்தைக் காக்க வேண்டிய செயலில் ஈடுபட்டான். நான்கு மாதக் கருவைக் கலைக்கப் போனால் மங்களத்தின் உயிருக்கே ஆபத்தாகி விடும் என்பதால் மட்டக்களப்பில் இருந்த தன் நண்பன் வீட்டிற்கு மங்களத்தை அழைத்துக் கொண்டு போய், அங்கேயே பிரசவத்திற்கும் ஏற்பாடு செய்தான். சிவபாலனின் மனைவி மாலாவை அதாவது மங்களத்தின் அண்ணியை விட மற்ற குடும்பத்தாருக்கு இந்த விசயம் தெரியாமல் கவனமாகச் செயல்பட்டனர். ஆண்*

குழந்தை பிறந்ததும் குழந்தையை மங்களத்திடம் காட்டிவிட்டு ஒரு ஆசிரமத்திலே சேர்க்கப்போவதாக சொன்னான் சிவபாலன். அணைத்து முத்தமிட்ட குழந்தையைத் தன்னுடனே வைத்திருக்க மங்களம் ஏங்கினாள். ஒரு குற்றமும் செய்யாத தன் சொந்த சிசுவை அநாதையாக விட அவள் மனம் ஒப்பவில்லை. ஆனால் அன்றைய காலகட்டத்தில் நிதர்சனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் தான் அவளை அந்த முடிவை எடுக்க வைத்தது. 1997 ஆண்டு தொடக்கத்தில் வடமராட்ச்சி ஓரளவுக்கு இயல்பு நிலைக்கு வந்திருந்ததால் இடம் பெயர்ந்த மக்கள் திரும்பிப் போய்க் கொண்டிருந்தனர். குழந்தை பிறந்து ஒரு சில நாட்கள் தான் ஆகியிருந்தது. ஆயினும் எல்லோருடனும் மட்டக்களப்பில் இருந்த மங்களத்தையும் கூட்டிக்கொண்டு தங்கள் சொந்த ஊருக்கே திரும்பிவிட்டார் சிவபாலன்.

எட்டு வருடமும் சென்று மறைந்தது. மங்களமும் நடந்தவற்றை ஓரளவுக்கு மறந்திருந்தாள். திடீரென, ஒருநாள் நரை விழுந்த அடர்ந்த தாடியும் பல நாட்களாக எண்ணையே காணாத செம்பட்டை முடியுடனும் சலவையைக் கண்டு பல நாளான சாரத்துடனும், இறந்துவிட்டான் என முடிவெடுத்திருந்த ரவிச்சந்திரன் அவள் வீட்டு வாசலில் வந்து நின்றான்.

அன்று மங்களத்தின் வாழ்வில் திரும்ப ஒளி வீசியது. ஆனால். பின் விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் செய்த பிழையால், இன்று அவள் பெற்ற பிள்ளைகள், தாங்கள் அண்ணன் தங்கை எனத் தெரியாமல் காதலராகச் சேர வைத்திருக்கிறது. விதியின் விளையாட்டை என்னவென்று சொல்லுவது.

மங்களம் தன் வாழ்க்கையில் மறந்திருந்த, இல்லை இல்லை மறைத்த கசப்பான மறுவாழ்க்கையை நினைத்து இரவு முழுவதும் நித்திரையின்றி கட்டிலில் புரண்டாள். பலதும் சிந்தித்தவள் ஒரு முடிவோடு காலை ஐந்துமணிக்கு முன் எழுந்து விட்டாள். விடியற் காலை நேரத்தில் வீட்டில் ஒருவரும் எழுந்திருக்கவில்லை, மாடியை விட்டு இறங்கி சமையல் அறைக்குள் போனவள் தமையன் சிவபாலனை கைபேசியில் அழைத்தாள்.

*மறுமுனையில் "என்ன.........விசயம்? இவ்வளவு விடியக் காலையில்?" என பதட்டத்துடன் கேட்டான் சிவபாலன்.*

*"அண்ணா நாங்கள் வேண்டாமென்று ஆசிரமத்தில் சேர்த்த குழந்தை யார் தெரியுமா?"*

*"தார்" எந்தக் குழந்தை*

*"அர்ச்சுன்தான் அந்தக் குழந்தையாக இருக்க வேணும்.*

*"என்ன சொல்லு.......றாய்!!"*

*"குணாவின் சாயலாகவே இருக்கிறான் அவனுடைய , நடை எல்லாம் குணாவை நினைவூட்டுகிறது. அர்ச்சுன் பிறந்த தினமும், எனக்குக் குழந்தை பிறந்ததும் ஒரே திகதி தான். குழந்தையை எந்த ஆசிரமத்திலே சேர்த்தீங்கள்...?"*

*"கல்லடி உப்போடையில் இருக்கும் இராமகிரிஷ்ன மிசனில்..."*

*"அர்ச்சுனும் அங்கேதான் வளர்ந்திருக்கிறான். அண்ணா சந்தேகமேயில்லை! நான் பத்து மாதம் சுமந்து பெத்த என் இரத்தமும் சதையும்தான் அர்ச்சுன்."*

*ஐ ஐ ஓ! அப்படியா தங்கச்சி. ஆனால் எப்படி அர்ச்சுன் தான் அந்தக் குழந்தை உன்னால் உறுதியாக சொல்ல முடியும். குழந்தைப் பிறந்த தினத்தை திரும்ப சொல்லு" என்றான்,*

*மங்களத்தின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. அவள் வாழ்க்கையில் இடிக்குப் பின் இடி. இப்போது இந்தப் பேரிடி! பேதை மங்களம் என்ன செய்வாள்?*

*மங்களத்தின் மனதில், பயம், குற்ற உணர்வு, அவமானம் என உணர்வுகள் எழுந்து முட்டி மோத அவளால் பேசமுடியவில்லை. இந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்தி பதில் சொல்ல சிறிதுநேரம் எடுத்தது. சிவபாலன் பொறுமையாகக் கைபேசியை பிடித்துக் கொண்டிருந்தான். மங்களம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஒரு முடிவோடு,*

*"1996ஆம் ஆண்டு டிசம்பர் பத்தாம் திகதி" மங்களம் தயக்கமில்லாமல் திகதியை சொன்னாள். அவள் பெற்ற மூன்று பிள்ளைகளின் பிறந்த தினத்தை அவளால் மறக்கமுடியுமா?*

“நான் மட்டக்களப்பு மிசனில் விசாரிக்கிறன். தங்கச்சி, இன்னும் கொஞ்சம் விடியட்டும், மிசனுக்கு டெலிபோன் பண்ணி, நீ தந்த திகதியையும் குடுத்து அர்ச்சுன் பெயரை யும் குடுத்து விசாரித்து சொல்லுறேன். நான் இடைக்கிடை அந்த மிசனுக்கு காசு அனுப்புற நான். அவர்கள் எனக்கு நிச்சயமாக உதவுவார்கள்.”

“அண்ணா எனக்கு நிச்சயமாகத் தெரியும். அருச்சுன் என் மகன்தான். அன்று ஆக்கப் பொறுத்த நான் ஆறப் பொறுக்காததால் வந்த விளைவு. அதன் பலாபலனை நானே எதிர்கொள்ள வேண்டும். சொந்த தங்கையை அண்ணன் திருமணம் செய்யமுடியாது! ஆகையால் முதலில் ரவியிடம், உனக்கும் எனக்கும் தெரிந்த ரகசியத்தைச் சொல்லி மன்னிப்பு கேட்கப் போறேன். அவர் மன்னிப்பாரோ தெரியாது! அதற்குப்பின் நீதான் அண்ணா இங்கே வந்து யாழினியிடமும் அர்ச்சுனனிடமும், ஓம் கபிலனுக்கும் உண்மையைச் சொல்லி இந்தக் கலியாணம் நடக்கக் கூடாது என்று சொல்ல வேணும். எனக்காகச் செய்வாயா?”

“மங்களம் இதற்கெல்லாம் முக்கிய சூத்திரதாரி நான்தானே. என் மறைசூழ்ச்சியாலே தான் இது நடந்தது. அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளுறேன்” என்றான்.

இரண்டு மணித்தியாலத்தில் ஒரு ஏழு மணி இருக்கும் சிவபாலன் மங்களத்தைத் தொடர்பு கொண்டு, “தங்கச்சி அருச்சுன் உன் மகன் தான் அது நிச்சயம்“ என்றான்.

வழக்கம்போல கணவருக்குக் கோப்பியைக் கலந்து படுக்கை அறைக்குக் கொண்டுப் போன மங்களம் அறைக்கதவைச் சாத்திவிட்டு கோப்பியை ரவியின் கையில் கொடுத்துவிட்டு, “உங்களிடம் ஒரு உண்மையைச் சொல்ல வேணும். நீங்கள் காணாமல் போயிருந்த வருசங்களில் நடந்தது. நான் செய்த மன்னிக்கமுடியாத செயல். உங்களுக்கு அதிர்ச்சியாகவும் இருக்கும்.”

“மங்களம் நீ என்னிடம் எந்த உண்மையும் மறைத்ததில்லையே...?”

“ஓம் ரவி,” என்றவள் தயங்கித் தயங்கி அவள் அனுபவித்து

*முடிந்த, மறந்திருந்த அத்தியாயத்தை இதயம் வலிக்கக் குற்ற உணர்வோடு எல்லா உண்மைகளையும் சொல்லி,*

*“நான் அவசரப்பட்டு, கட்டுப்பாடில்லாமல் நடந்து கொண்டதால் பிறந்த குழந்தை வேறு யாருமில்லை, அருச்சுன். என் அண்ணனே அதை உறுதிப்படுத்துவார். நான் உங்களுக்கு துரோகம் செய்துவிட்டேன். என்னை மன்னிப்பீர்களா?” என்றவள் கண்களில் கண்ணீர் வழிந்தோட ரவிச்சந்திரனின் காலில் விழுந்தாள். இதை பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த ரவிச்சந்திரனின் மனதிலும் முகத்திலும் அதிர்ச்சி, ஏமாற்றம், பரிவு எனப் பல உணர்வுகள் பொங்கி முட்டி மோதின. இறுதியில் அவரிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளி வந்தது. பின்பு அவர் காலடியிலிருந்த மங்களத்தின் தோளைப் பிடித்துத் தூக்கி அவளை தன் பக்கத்தில் இருத்தினார், “மங்களம் இராணுவம் பிடித்துக்கொண்டு போய் எட்டு வருசமாகியும் திரும்பி வராததால், நான் இறந்து விட்டதாகச் செஞ்சிலுவைச் சங்கம் உறுதிப்படிதியதை நம்பி நீ ஒரு துணையைத் தேடியதில் ஒரு பிழையுமில்லை. அவனை நீ மணந்து அவன் உயிரோடு இருந்தால் எங்கள் நிலைமை என்னவாக இருக்கும்.? எங்கள் மூவருக்குமே சங்கடமாக முடிந்திருக்கும். கடவுள் எல்லாம் ஒரு காரணத்தோடுதான் செய்கிறார். ஆனால் நான் திரும்பி வந்தபின் நடந்தவற்றை என்னிடம் நீ சொல்லியிருக்கலாமே! உன் மேல் உள்ள என் அன்பின் மேல் நம்பிக்கை இல்லாமலா மறைத்தாய்?” ரவிச்சந்திரனின் குரலில் ஒரு இறுக்கத்தை அவதனித்தாள் மங்களம்.*

*“அப்படி இல்லை எவ்வளவோ உடல் வேதனையும் மன அழுத்தங்களுக்கும் ஆளாகின உங்களிடம் இதைச் சொல்ல மனம் வரவில்லை. அந்தச் சம்பவத்தை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறக்க நினைத்தேன்,” எனத் தளதளத்த குரலில் பதிலளித்தாள் மங்களம். இரு கரங்களாலும் முகத்தை வழித்துத் துடைத்தபடி, “இனி அர்ச்சுன் அநாதை இல்லை. அவன் எங்கள் மகன்” என்றார் ரவிச்சந்திரன். கண்களில் நீர் திரையிட, இரு கரங்களையும் கூப்பியபடி தன் ரவியின் முன்னால் நின்றாள் மங்களம். மங்களத்தின் கூப்பிய கரங்களை தாழ்த்தி அவளை*

அணைத்தபடி ரவிச்சந்திரன், "இப்போது இந்த விசயங்களை, உண்மைகளை யாழினிக்கும் அருச்சுனனுக்கும் சொல்லுவது ஆர்?"

"அந்தப் பொறுப்பை அண்ணா ஏற்றுக் கொண்டிருக்கிறார்" என்றாள் மங்களம் முகத்தைத் துடைத்தபடி.

அன்று காலை பத்து மணிபோல சிவபாலனும் அர்ச்சுனும் காரில் மங்களம் வீட்டுக்கு வந்திறங்கினார்கள். அவர்கள் காரில் வந்து இறங்கிய சத்தம் கேட்டதும் கபிலனும், யாழினியும் அவர்களை ஆவலோடு வரவேற்றனர். மூவரையும் ஒன்றாகக் கண்டதும் சிவபாலனுக்கு ஒரு தைரியம் வரவும் தான் சொல்ல வந்த விசயத்தை சொல்ல இதுதான் நல்ல சந்தர்ப்பம் என நினைத்து,

"அப்பாவும் அம்மாவும் இன்னும் மாடியிலா?" எனக் கேட்டான்.

"கூப்பிடவா?" என கபிலன் கேட்டான்

"வேண்டாம். உங்கள் மூவருக்கும் ஒரு முக்கியமான விசயம் சொல்ல வேண்டும்" எனக் கூறி யாழினியையும் அருச்சுனனையும கபிலனையும் பக்கத்திலிருந்த அறைக்குள் அழைத்துக் கொண்டு போய் அமரச் சொல்லிவிட்டு, தொண்டையை செருமிப் பேச ஆரம்பித்தார்.

"ஒரு முக்கியமான விசயம் உங்கள் மூவருக்கும் அவசியம் தெரிய வேண்டிய உண்மை. கபிலன், யாழினி உங்கள் அப்பாவை 1990ஆம் ஆண்டில் இராணுவம் பிடித்துக்கொண்டு போய் என்ன ஆனார் என்று தெரியாது பின்பு இறந்துவிட்டார் என்ற முடிவுக்கு வந்தோம். இது உங்களுக்குத் தெரிந்த விடயம். உங்களுக்குத் தெரியாத ஒன்றும் இருக்கிறது. அதிர்ச்சியானதும் கசப்பானதும் ஆகும். இன்று இதை பகிரங்கப்படுத்தப்பட வேண்டிய நிலைபரம். 1995ஆம் ஆண்டின் இடப்பெயர்வின்போது நாங்கள் இரண்டு வருடம் சாவகச்சேரியில் போயிருந்தோம். அங்குதான் உங்களுடைய அம்மாவைக் குணா என்ற ஒருவர் விரும்பினார். அம்மாவும் அவரை விரும்பி அவர்கள் ஒன்றாக வாழ்ந்தார்கள். அவர்களுக்கு முறைப்படி நானே கலியாணம்

*செய்துவைப்பது என இருந்தேன். ஆனால் கலியாணத்திற்கு ஒரு கிழமைக்கு முன், அப்போதைய நாட்டின் நிலைமை உங்களுக்குத் தெரிந்ததுதானே, அவர் காணாமல் போய்விட்டார். எல்லா இடமும் விசாரித்தோம் மூன்று மாதத்திற்கு பின்தான் அவர் குறுக்குச் சூட்டில் இறந்துவிட்டதாகச் செய்தி கிடைத்தது. அப்போது உங்கள் அம்மா வயிற்றிலே ஒரு குழந்தையோடு இருந்தா. சொந்த பந்தங்களின் இழிச்சொற்களுக்கும் பேச்சிற்கும் பயந்து நான்தான் குழந்தை பிறந்தவுடனேயே மட்டக்களப்பில் உப்படி இராமகிரிஷ்ன ஆசிரமத்திலே சேர்த்துவிட்டேன். அவன் இப்போது தன் தாயிடம் வந்து சேர்ந்துவிட்டான் எனக் கூறியபடி அருச்சுனனை நேரே உற்றுப்பார்த்தார்.*

*“அப்படியென்றால் அந்தக் குழந்தை....?” என யாழினியும் கபிலனும் ஒருமித்துக் கேட்டபடி அர்ச்சுனனைப் பார்த்தார்கள்.*

*அர்ச்சுன், “மை கார்ட்!!!!” என்றான் தலையில் கைகளை வைத்தபடி.*

*மூவருக்கும் சிவபாலன் கூறியதை கேட்டதும் அருச்சுனன்தான் அந்தக் குழந்தை என மூவருக்கும் தெளிவாகப் புரிந்துவிட்டது. ஆனால் யாழினியால் மட்டும் இந்த உண்மையை ஜீரணிக்க முடியவில்லை.*

*“சிவா மாமா ஏன் இப்படி ஜோக் விடுகிறீர்கள். இதை நம்பச் சொல்லுகிறீர்களா அம்மா இப்படி ஒரு காரியம் செய்ய மாட்டா எனக்குத் தெரியும்,” என்றாள் யாழினி உரத்த குரலில். தொடர்ந்து*

*“மாமா இது உண்மை இல்லைத்தானே. பிளீஸ் உண்மை இல்லை என்று சொல்லுங்கோ,” என எழுந்து போய் அமர்ந்திருந்த சிவபாலனின் முன்னால் முழந்தாளில் இருந்து அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.*

*சிவபாலனுக்கு என்ன சொல்லுவதென்று தெரியாமல் யாழினியை அணைத்து அவள் முதுகை தடவி விட்டார்.*

*அதிர்ச்சியிலிருந்து விடுபட்ட கபிலன் எழுந்து வந்து தங்கையை அணைத்து, “மாமா சொல்லுவது உண்மையாகத்தான்*

இருக்க வேணும். சாகவச்சேரியில் குணா என்றவரை நான் சந்தித்தது இப்போது என் நினைவுக்கு வருகிறது. அப்போ எனக்கு பத்தோ பதினொரு வயதிருக்கும். குணா என்றவர் எங்களோடு மிகவும் நெருக்கமாகவே பழகினார், எங்களுக்கு மிகவும் உதவியாகவும் இருந்தார். தங்கச்சி! எனக்குப் புரியுது. இந்த விசயம் உனக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். ஆனால் மாமா சொல்லுவது உண்மை என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேணும்," என்றான் யாழினியை அணைத்தபடி.

தான் காதலித்தவன் தன் அண்ணன் என்கிற உண்மையை அவள் மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. விசயம் கேட்டவுடன் உண்மையை ஏற்க மறுத்த அவள் மனதில் இப்போது தாயின் மேல் கோபம் கோபமாக வந்தது. 'அம்மா எப்படிப்பட்ட இக்கட்டான நிலையில், வெளியே சொல்ல முடியாத நிலைமையால் இப்படி ஒரு காரியத்தைச் செய்தார் எனப் புரியும் நிலையில் அவள் இருக்கவில்லை. 'அம்மா தன் பிழையை மறைக்காமலிருந்திருந்தால் எனக்கு இந்த நிலைமை வந்திராது. அருச்சுன் என் சொந்த அண்ணன் என்று தெரியாமல் காதலித்திருக்க மாட்டேன்', என மனதுக்குள் நினைக்க நினைக்க யாழினிக்குத் தாயின் மேல் ஆத்திரமும் கோபமும் வர அந்தக் கோபம் அழுகையாக வெளி வந்தது.

அழுதபடி கீழ் வீட்டிலிருந்த தன் படுக்கை அறைக்குள் ஓடிப்போய் தன் உடைகள் சிலவற்றை ஒரு பாக்கில் போட்டுக் கொண்டு வந்தவள் நேரே சிவபாலனிடம் போய், "சிவா மாமா என்னை உங்கள் காரில் கூட்டிக் கொண்டு போய் மானிப்பாயில் அப்பம்மா வீட்டில் இறக்கிவிடுகிறீர்களா பிளீஸ். எனக்கு இங்கே இருக்க பிடிக்கவில்லை," என சிவபாலனிடம் கேட்டாள்.

யாழினியின் மன நிலைமையைப் புரிந்து கொண்ட சிவபாலன் மறுப்பு ஏதும் சொல்லாது, "யாழினி கொஞ்சம் பொறு கார் துறப்பை எடுத்திட்டு வாறேன்," என ஒரு சாட்டுச் சொல்லி விட்டு மாடிக்குப் போனவன், மங்களிடமும் ரவிசங்கரிடமும்

“நான் யாழினியை அப்பம்மா வீட்டே கூட்டிக்கொண்டு போறேன். அங்கு இரண்டு மூன்று நாள் இருந்தால் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வாள். இந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு வர அவளுக்கு நேரம் வேணும். நான் சொன்னவற்றைக் கேட்டு அர்ச்சுன் அப்படியே இடிஞ்சு போய் இருக்கிறான். நீங்கள் இரண்டு பேரும் தான் அவனுக்கு ஆறுதல் சொல்ல வேணும்,“ என்று சொல்லிவிட்டு, யாழினியை தன் காரில் ஏற்றிக் கொண்டு ரவியின் பெற்றோர் வீட்டிற்குப் புறப்பட்டு விட்டான் சிவபாலன்.

கபிலனுக்கும் அவன் மாமா சொன்ன விசயம் அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது. எதுவுமே பேசாது எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு திகைத்துப் போய் வெறித்த பார்வையுடன் இருந்த அர்ச்சுனனின் பக்கத்தில் போய் அமர்ந்தான் கபிலன்.

“அருச்சுன் எங்கள் எல்லோருக்கும் இது அதிர்ச்சியான செய்தி அதுவும் உனக்கு ஷொக்கிங் நியுஸ். உன்னால் இதை நம்ப முடியாமல் இருக்கும், ஏற்றுக் கொள்ளவும் கஷ்டமாக இருக்கும். அர்ச்சுன் நீ என் சொந்தத் தம்பி. உன்னைப் போல ஒரு தம்பி கிடைத்ததில் மிகவும் சந்தோசப்படுகிறேன். அப்பாவும் அம்மாவும் தங்களுக்கு இரண்டு மகன்கள் எனச் சந்தோசப்படுவார்கள்,” எனக் கூறியபடி அர்ச்சுனை தன் மார்போடு தழுவிக் கொண்டான்.

அர்ச்சுனனோ சிவபாலன் கூறியதைக் கேட்ட அதிர்ச்சியிலும், அதற்குப்பின் யாழினி அழுது கொண்டு வீட்டை விட்டுப் போனதையும் ஒரு சினிமா பார்ப்பது போல் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தவன், கபிலன் அவனை அணுகி அணைத்ததும் தான் அப்போதைய நிகழ்காலத்திற்கு வந்தான். அர்ச்சுனும் கபிலனை அணைத்தபடி, “கபிலன், எனக்குக் கவலையும் ஏமாற்றமும் தான் அத்துடன் நான் அனாதை இல்லை என்ற நற்செய்தி.... நீ மச்சான் இல்லை, இப்போது அண்ணன்.... சந்தோசம்..,“என்றான். அவன் குரல் கிணற்றுக்குள்ளிருந்து வரும் ஒலி போலிருந்தது.

அர்ச்சுன் இப்படிச் சொல்லி முடிக்கவும் அந்த அறைக்குள் ரவியும் மங்களமும் நுழைந்தார்கள். முதலில் ரவி அருச்சுனை

அணுகி, கபிலனையும் நோக்கி, இந்த சங்கடமான உணர்ச்சிமிக்க உண்மை விசயத்தை, மாமா உங்கள் மூன்று பேருக்கும் சொல்லும்போது, குற்ற உணர்வோடு தவித்துக் கொண்டிருந்த அம்மா இதை முகம் கொடுக்க முடியாமல் உங்கள் முன்னால் வரவில்லை. அவவைத் தனியே விட மனமில்லாமல் தான் நானும் கூடவே இருந்தேன். இன்று காலையில், அருச்சுன் தன் மகன் என அறிந்ததும், ஆயிர்த்து தொளாயிரத்து தொனண்ணூற்றி ஐந்திலிருந்து ஏழு வரைக்கும் நடந்த எல்லா விவரமும் உங்கள் அம்மா என்னிடம் இன்று காலையிலே சொல்லி விட்டா. இரண்டு பேரும் கவனமாகக் கேளுங்கள். உங்கள் அம்மா அன்று அந்த போர்க்காலச் சூழ்நிலையில் எடுத்த முடிவு முற்றிலும் சரி. அதை ஒருவரிடமும் ஏன் என்னிடமும் சொல்லாததும், சரி என நினைக்கிறேன். அவ இதைவிட வேறு எதுவும் செய்திருக்க முடியாது. அவ செய்ததை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். ஆனால் ,அருச்சுன் அதனால் நீ அனாதை ஆக்கப்பட்டாய். பச்சைக் குழந்தையாக உன்னை அநாதை ஆசிரமத்தில் விட்ட உன் அம்மாவை மன்னித்து விடு. அர்ச்சுன் இனி நீ எங்கள் மருமகனில்லை, எங்கள் மகன்," என அவனை அணைத்து உச்சி முகர்ந்தார்.

ரவிக்குப் பக்கத்தில் கண்களில் கண்ணீர் வடிய நின்ற, மங்களத்திற்குக் குற்ற உணர்வால், முதலில் பேச்சே வரவில்லை, பின்பு "அருச்சுனா மகனே! உன் அம்மாவை மன்னிப்பாயா?," என தான் பத்து மாதம் சுமந்து பெத்த மகனை, தன் இரத்தமும் சதையுமான மகன் அருச்சுனனை அணைத்து, அவன் நெற்றியிலும் கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்ட மங்களத்தின் மனதில் சந்தோசம், குற்ற உணர்வு, பாசம் என பலதும் முட்டி மோதின.

தாயும் தந்தையும் தன்னை அணைத்து முத்தமிடவும் குழம்பிப் போயிருந்த அருச்சுன் மனதில் ஒரு தெளிவு ஏற்பட்டது. காதலி யாழினி தன் இரத்த சம்பந்தத் தங்கை என அறிய வந்ததோடு இனி தான் அநாதை இல்லை, தன்னை ஈன்றெடுத்த தாயோடு ஒரு தந்தையின் அரவணைப்பும் கிடைத்ததையிட்டு அவனை சந்ததோசத்தின் எல்லைக்கே கொண்டு சென்றது.

அது மட்டுமா, அண்ணன், மாமா, மாமி என இரத்த உறவுகள் கிடைத்திருந்தது.

"அப்பா! அம்மா! என்னை ஆசீர்வதியுங்கள்," என்றபடி ரவியினதும் மங்களத்தினதும் காலடியில் விழுந்து வணங்கினான். "இனிமேல் உனக்கு எந்த குறையுமில்லை," என மங்களம் கூற இருவரும்சேர்ந்து அவனைத் தூக்கி விட்டனர்.

உப்படி இராமகிரிஸ்ண மிசனின் வளர்ப்பு அல்லவா?

"அர்ச்சுன் இனி இதுதான் உன் வீடு. நீயும் கபிலனும் ஒரு அறையைப் பாவிக்கலாம்," என்றார் ரவி, அர்ச்சுனனை மீண்டும் அணைத்தபடி,

"ஓம் அர்ச்சுன் இனி இதுதான் உன் பெற்றோர் வீடு. நீ எங்களோடுதான் இருக்க வேணும், இஞ்சாருங்கோ இன்றைக்கே ஒரு கட்டிலை வாங்கி கபிலன் அறையில் போட வேணும்," என்றாள் மங்களம்.

"அம்மா!!" என்றான் அர்ச்சுன். அம்மா என அவன் அழைத்தப் போது அவன் குரல் உணர்ச்சியோடு நடுங்கியது. சிறு வயது முதல் அம்மா என்று அழைக்கத் தாயில்லையே என ஏங்கியவனுக்கு இப்போது அம்மா என்று கூப்பிட்டவுடன் உணர்ச்சி வசப்பட்டு அவன் கண்கள் கலங்கிவிட்டது. கலங்கிய கண்களுடன் தொடர்ந்தான், "செவ்வாய்க்கிழமை மட்டும்தான் எனக்கு லீவ். செவ்வாய் காலையிலே யாழ் தேவியில் கொழும்புக்கு வெளிக்கிட வேணும்" எனறான்.

"ஓம் ஓம், உனக்குக் கொழும்பில் வேலை என்றதை மறந்தே போனேன். நல்ல உத்தியோகம் அல்லவா? கட்டாயம் சொன்ன நாளுக்கு நீ வேலைக்குப் போக வேணும்," என்றாள் மங்களம்,இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கபிலன், "நானே தம்பியை செவ்வாய்க்கிழமை காலை ரெயில் ஸ்டேசனுக்கு கூட்டிக் கொண்டு போய் பத்திரமாக ரயில் ஏத்திவிடுறேன்," என்றான்.

"அர்ச்சுன்! நீ தீபாவளிக்கு லீவ் போட்டுவிட்டு, யாழ்ப்பாணம் வந்திடு. குடும்பமே ஒன்றாய் சேர்ந்து தீபாவளி கொண்டாடலாம்,

என்றாள் மங்களம். தீபாவளியை தன் தாய், தந்தை, சகோதரரோடு உறவுகளோடு கொண்டாடுவதை எண்ணினான் அர்ச்சுன், இப்படி ஒரு குடும்பம் தனக்குக் கிடையாதா என எத்தனை நாள் ஏங்கியிருக்கிறான். இதை நினைத்தவனின் கண்கள் மீண்டும் கலங்கி விட்டது.

இதைக் கவனித்த கபிலன், அவனை அணைத்து, "தம்பி வாடா எங்கள் அறைக்குப் போவோம். நீ அடுத்தமுறை வரும் போது உன் உடுப்புகள் வைக்க ஒரு அலமாரியும் வாங்கி அறையில் வைத்து விடுறேன்" என தன் அறைக்கு அழைத்துப் போனான்.

கட்டுடை வீட்டில் இப்படி நடந்து கொண்டிருக்க, காரை ஓட்டிச் சென்ற சிவபாலன் யாழினியின் அப்பப்பா வல்லிபுரம், வீட்டில் போய் நிறுத்தினான். வழி நெடுக அழுதுகொண்டு வந்த யாழினி தன் பாக்கையும் எடுத்துக்கொண்டு காரை விட்டு இறங்கி, வாசல் கதவைத் திறந்துவிட்டு நின்ற வல்லிபுரத்திடமும் பொன்மணியிடமும் எதுவுமே சொல்லாமல் வீட்டுக்குள் போனவள் ஒரு அறைக்குள் புகுந்து கொண்டாள்.

"என்ன விசயம்? ஏன் யாழினி அழுகிறாள்?" எனப் பதை பதைப்போடு சிவபாலனிடம் கேட்டார் வல்லிபுரம்.

"உங்களுக்குத் தெரியும்தானே, ரவி எல்லாம் சொல்லியிருப்பாரே? யாழினி தன் கூடப் படித்த அர்ச்சுனை காதலித்தது. இவர்களும் கூட்டிக் கொண்டு வா சந்திப்போம் என்று சொன்னார்கள். அர்ச்சுன் நேற்று கொழும்பிலிருந்து யாழ் தேவியில் வந்திறங்கியிருந்தான். எல்லோருக்கும் பெடியனை நல்லா பிடித்துக்கொண்டது. ஆனால்..."

"ஆனால் என்ன!!" எனக் கவலைப்பட்டார்கள் வல்லிபுரமும் பொன்மணியும்.

"இதில் என் பிழையும் இருக்கிறது. இந்த விசயத்தை மூடி மறைக்கப் பார்த்தது தான் பெரிய பிழை. நாங்கள் எல்லோரும் 1995 இன் இடப் பெயர்வின் போது சாவகச்சேரியில் இருந்தோம் அல்லவா. அங்கே நீங்கள் குணா என்று ஒருவரைச் சந்தித்திருப்பீர்களே?"

"ஓம் ஓம் அவனைத்தானே மங்களம் கல்யாணம் கட்டுவதாக இருந்தது, பிறகு அவன் குறுக்குச் சூட்டில் இறந்து விட்டதாகச் சொன்னார்கள். இப்போ என்ன.........?" எனக் கேட்டார் பொன்மணி.

"இங்கே தான் மங்களம் பெரிய பிழை செய்துவிட்டாள். குணாவும் மங்களமும் எல்லை மீறியதால், குணா இறந்த போது மங்களம் கர்ப்பமாக இருந்தாள். நான் தான் அவளை மட்டக்களப்புக்குக் கூட்டிக் கொண்டு போனேன்."

இடையில் குறுக்கிட்ட பொன்மணி, "ஓம் ஓம் மங்களத்தினதும் உங்களதும் சொந்தக்காரரைப் பார்க்கப் போவதாகப் போனீர்கள்."

"அங்கே நண்பன் வீட்டில் மங்களத்திற்கு ஆண் குழந்தை பிறந்தது. இது எனக்கும் என் மனைவி மாலாவுக்கும் மட்டும் தான் தெரியும். காதும் காதும் வைத்தது போல் செய்து முடித்தோம். குழந்தையை மட்டக்களப்பில் ஒரு நல்ல ஆசிரமத்தில் சேர்த்து விட்டேன். அந்தக் குழந்தை வேறு யாருமில்லை, யாழினி மட்டக்களப்பு யூனியில் சந்தித்துக் காதலித்த அர்ச்சுன்தான்." என்றான் சிவபாலன். பல வருடங்களாகப் புதைத்து வைத்திருந்த இரகசியத்தை வெளியே சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வந்திருந்தது.

இதைக் கேட்ட வல்லிபுரமும் பொன்மணியும் அதிர்ச்சியில் வாயைப் பிளந்தபடி இருந்தார்கள்,

"ஐயோ கடவுளே அண்ணனும் தங்கையும் அல்லவா? இது தெரியாமல் யாழினி அவனோடு பழகியிருப்பாள். இதைக் கேட்டதும் யாழினிக்குப் பெரிய அதிர்ச்சியாகவும் ஏமாற்றமாகவும் இருந்திருக்குமே!. இந்த மட்டிலே தெரிய வந்ததே அதுவே போதும். இந்தப் போரினால் என்னென்னமோ எல்லாம் எங்கள் சனங்கள் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. தம்பி சிவபாலன் நீங்கள் அப்ப நடந்தவற்றை எங்களிடம் சொல்லீட்டீங்கள். இந்த திடீர் திருப்பம் யாழினியை மிகவும் தாக்கியிருக்கும். இதிலிருந்து வெளியே வர அவளுக்கு நாள்

எடுக்கும். நாங்கள் யாழினியைக் கவனித்துக் கொள்ளுகிறோம். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் போய் மங்களத்தையும் ரவியையும் கவனியுங்கள்," என்றார் வல்லிபுரம்.

யாழினியை அவளின் அப்பப்பா, அப்பம்மா பொறுப்பில் விட்டுப் போட்டு தன் காரில் ஏறிய சிவபாலன் பெருமூச் செறிந்தார். வல்லிபுரமும் பொன்மணியும் படித்தவர்கள், விவேகமானவர்கள். அவர்கள் யாழினியின் மனச் சோர்வு, கோபம் எல்லாத்தையும் தணித்து நடந்த யதார்த்தத்தை உணர வைப்பார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

காலையில் மங்களம் வீட்டிற்குப் போகு முன்னமே மனைவி மாலாவிடம் அர்ச்சுன் யார் எனச் சொல்லியிருந்தான் சிவபாலன். பக்கத்திலே இருந்த சண்டிலிப்பாயிலேதான் அவன் வீடு ஆகையால் நேரே காரில் தன் வீட்டுக்குப் போய், மனைவி மாலாவிடம் அன்று காலை நடந்த எல்லாவற்றையும் சொன்னான்.

"பாவம் யாழினி இந்த அதிர்ச்சிலிருந்து வெளியே வர நாள் எடுக்கும். அவளை நினைக்க எனக்குக் கவலையாக இருக்கிறது. மானிப்பாய் ஒரு எட்டுத்தானே, அவளைப் போய் பார்க்கவா?" எனக் கேட்டாள் மாலா.

"சிச்சிவேண்டாம் போயிடாதே. ஒரு இரண்டு மாதம் விட்டுப் பிடிப்போம்," என்ற சிவபாலன். அர்ச்சுனனின் உடுப்புப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு காரை நேரே மங்களத்தின் வீட்டை நோக்கி ஓட்டினான்.

யாழினியை அப்பம்மா வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய் என்ன நடந்தது, எப்படி இருக்கிறாள் எனக் கவலைப் பட்டுக் கொண்டிருந்த மங்களம் வாசலுக்கு வந்தாள். யாழினியை தன் பெற்றோர் வீட்டில் போய் பார்க்கலாமோ என நினைத்தபடி ரவியும் அங்கு வந்தான். கணவனும் மனைவியும் வாசலில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருக்கச் சிறிது நேரத்தில் சிவபாலன் அர்ச்சுனனின் உடுப்பு பெட்டியுடன் வீட்டுக்குள்ளே வந்தான்.

*"அண்ணா! யாழினி எப்படி இருக்கிறாள், இன்னும் அழுகிறாளா?" என ஆவலோடு கேட்டாள் மங்களம். அவள் பின்னால் ரவியும் அவன் பதிலுக்குக் காத்து நின்றான்.*

*"தங்கச்சி!, மச்சான்! அங்கே போனதும் நான் நடந்த முழு விபரத்தையும் எதுவுமே ஒளிக்காமல் ரவியின் அப்பா அம்மாவுக்குச் சொல்லி விட்டேன்" என்றான். இதைக் கேட்டதும் இருபத்தி ஐந்து வருடமாக வைத்திருந்த இரகசியம் இப்போது வெட்ட வெளிச்சத்திற்கு வந்துவிட்டது என மங்களம் மனதுக்குள் கூனிக் குறுகிப் போனாள்..*

*"அவர்கள் யாழினியை எப்படியும் சாந்தப்படுத்திவிடுவார்கள். யாழினி, இப்போது எதுவும் சொல்லிப் புரிய வைக்கிற நிலைமையில் இல்லை. நாங்கள் பொறுமையாக இருக்க வேணும். நீங்கள் இரண்டு நாள் பொறுத்து அவளைப் போய் பாருங்கோ. நான் சொன்னதைக் கேட்டுவிட்டு ரவியின் அப்பாவும், அம்மாவும் மங்களம் அன்று குழந்தையை ஆசிரமத்தில் விட்டது சரி என நம்புகிறார்கள். ஆகையால் அவர்கள் யாழினிக்கு அப்போதைய சூழ் நிலையை எடுத்துக் கூறுவார்கள் " என்றான் சிவபாலன்.சிவபாலன் கூறியதைக் கேட்டு சற்று ஆறுதல் அடைந்தவர்கள், சிவபாலனை வழியனுப்பி விட்டனர்.*

*ரவி அர்ச்சுனனின் பாக்குடன் கபிலனின் அறைக்குப் போகவும், மங்களம் சமையல் அறைக்குள் அன்றைய மதிய உணவைத் தயாரிக்கப் போனாள்.*

*அடுத்தநாள் திங்கட்கிழமை, கபிலனை வேலைக்கு வழி அனுப்பிவிட்டு, மங்களமும் ரவியும் அர்ச்சுனனுடன் பொழுதைக் கழித்தனர். இருபத்தி ஐந்து வருடமாகக் காணாமல் இருந்த மகனின் விருப்பு வெறுப்புகளை ஒரு அளவுக்கு அறிந்து கொண்டனர். அன்று மதியம் உணவு உண்ணும் போது, அர்ச்சுன்,*

*"அம்மா!... யாழினியால் இந்த அதிர்ச்சியை ஏற்றுக்கொள்ளக் கஷ்டமாக இருக்கும். நீங்கள் அவளை பருத்திக் கம்பளியால்*

போர்த்து, செல்லப்பிள்ளையாக வளர்த்திருக்கிறீர்கள். இப்படி ஒரு திருப்பத்தை ஏற்க நாள் எடுக்கும். என் நிலைமை வேறு., நான் பல கஸ்டங்களை அனுபவித்து வளர்ந்தவன். காதலியை இழந்தாலும் ஒரு தங்கையும், கூடவே ஒரு பாசமுள்ள அண்ணனும், அன்பான அப்பாவும் அம்மாவும் கிடைத்திருக்கிறார்கள். ஆனால் யாழினிக்கு இழப்பு மட்டும் தான். அதிலிருந்து வெளியே வர அவளுக்குக் கொஞ்சம் மாதங்களாகும். நான் அநாதை என வருத்தப்பட்டபோது எனக்கு ஆறுதல் சொன்னவளும் அவள் தானே," என்றான் அர்ச்சுன்.

"நீ சொல்லுவது போல் காலம் தான் யாழினிக்கு நல்ல மருந்து. நாங்கள் அந்த அவகாசத்தை அவளுக்கு குடுப்போம்," என்றார் ரவி.

செவ்வாய்க் கிழமை விடியற்காலையில் அர்ச்சுனனைக் கபிலன், ரவி மங்களமும் சேர்ந்து யாழ் புகையிரத நிலையத்திற்குக் கூட்டிச் சென்று கொழும்புக்கு வழியனுப்பி வைத்தார்கள்.

# அத்தியாயம் 5

*ஞாயிற்றுக்கிழமை அன்று யாழினியை ரவியின் பெற்றோர் வீட்டில் விட்டிட்டு சிவபாலன் புறப்பட்டுப் போன பிற்பாடு யாழினி இருந்த அறைக்குள் அப்பம்மா போனார். அவவைக் கண்டதும், ”அப்பம்மா! என ஓடி வந்து அவவைக் கட்டிப்பிடித்துக் கொண்டு” அப்பம்மா! நான் உங்கள் மடியில் படுக்கலாமா?” எனக் கன்னத்தில் கண்ணீர் வடிய கேட்டாள் யாழினி.*

*“ஓமடா செல்லமே” எனக் கட்டிலில் அமர்ந்த பொன்மணியின், மடியில் யாழினி தன் தலையை வைத்து படுத்துக் கொண்டவள் விம்மி விம்மி அழுதாள். அப்பம்மா அவள் தலை முடியைக் கோதி விட்டபடி, ”என் செல்லம் இப்போதைக்கு ஒன்றும் யோசிக்காமல் கண்ணை மூடித் தூங்கடா, என் செல்லம்,” என்றாள். யாழினி அப்படியே அப்பம்மா மடியில் தூங்கி விட்டாள். அவவும் பொறுமையாக அசையமல் இருந்தார். யாழினி சிறு வயதுக் குழந்தையாகவும் பின்பு வளர்ந்து மட்டக்களப்புக்குப் படிக்கப் போனது எல்லாமே அவர் மனக்கண் முன் படமாக ஓடியது. ஒரு மணத்தியாலமளவு அவள் தூங்கி எழுந்ததும். “இரு நான் உனக்குச் சாப்பிடச் சோறு கறி கொண்டு வாறன்,” எனக் கட்டிலை விட்டு எழும்பினார்.*

"அப்பம்மா நான் எப்போதும் போல் கிச்சனுக்கு வந்து சாப்பிடுறேன்," என்றவள் அவவுடன் சமையல் அறைக்குப் போனாள். அப்பப்பாவும் சேர்ந்து மூவரும் வழக்கம் போலச் சமையல் அறையில் சாப்பிட்டார்கள். யாழினி எதுவுமே பேசாமல் சாப்பிட்டாள். அவள் நிம்மதியாகச் சாப்பிடட்டும் என எந்த கேள்வியும் அவர்கள் கேட்கவில்லை.

அடுத்தடுத்த நாட்களில் யாழினி அறையிலே படுத்துப் படுத்தே கிடந்தாள். ஒழுங்காகச் சாப்பிடுவதும் இல்லை. ஒரு எண்ணம் வந்தால் சமையல் அறையில் வந்து சாப்பிடுவாள், இல்லையேல் அப்பம்மா அறைக்குக் கொண்டு வரும் சாப்பாட்டைக் காக்கா கொறிப்பதுபோல் கொறிப்பாள்.

யாழினி அப்பம்மா வீட்டிற்கு வந்து இரண்டு நாள் கழித்து மங்களம் தன் மாமி பொன்மணியைத் தொலை பேசியில் அழைத்து. "மாமி.! யாழினி எப்படி இருக்கிறாள். நாங்கள் உங்கே வர யோசிக்கிறோம், யாழினியை நினைத்து கவலையாய் இருக்குது," எனக் கேட்டாள்.

"ஓம் எனக்கு உங்களின் மன நிலை விளங்குது. யாழினி இப்பதான் எங்களோடு கதைக்கத் துடங்கியிருக்கிறா. ஒரு மூன்று, நாலு நாள் பொறுங்கோ. அவளோடு நாங்கள் கதைத்துப் போட்டு சொல்லுறோம்," என்றார்.

ஒரு வாரம் கழித்து, யாழினி அப்பம்மா மடியில் படுத்தபடி, "அப்பம்மா! அம்மா தனது வாழ்க்கையில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது, என்று எனக்கு முன்னமே சொல்லியிருந்தால், நானும் அர்ச்சுனனும் காதலித்திருக்க மாட்டோம். இந்த தவறு நடந்தேயிருக்காது. எனக்கு அம்மா மேலே கோபம் கோபமாக வருகிறது," என்றாள் மூக்கில் வடிந்த நீரைத் துடைத்தபடி.

"ஓம் செல்லம் நீ கேட்பது எனக்கு புரியுது. ஆனால் நீ அம்மாவின் அப்போதைய நிலைமையையும் யோசிக்க வேண்டும். குணா, அதுதான் அர்ச்சுனனின் தகப்பன் உன் அம்மாவை கல்யாணம் கட்டமுன் இறந்ததால், குழந்தை பிறந்ததும் அவவுடன் அந்தக் குழந்தையை வைத்திருக்க முடியவில்லை. உறவுகள் மற்றும்

ஊர் சனங்களின் பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் இருக்க வேறு வழியில்லாமல் ஆசிரமத்தில் கொடுத்திருக்கிறாள். எங்கள் உள் நாட்டுப் போரினால் இப்படியான பல விசயங்கள் நடந்திருக்கிறது. ஏன் கணவன் இறந்துவிட்டான் என உறுதிப்படுத்தியபின் திரும்பி வந்த வேறு பல சம்பவங்களும் நடந்திருக்கிறது. அது மட்டுமா இராணுவத்தால் கெடுக்கப்பட்ட இளம் பெட்டைகள் குழந்தை பிறந்ததும் அநாதை ஆசிரமத்திலே விட்டிருக்கிறார்கள். இதை எல்லாம் இந்த முப்பது வருசமா பார்த்தவள் நான். ம்...ம்." எனப் பெருமூச்சு விட்டார் பொன்மணி

அப்பம்மாவின் மடியை விட்டு எழுந்து அமர்ந்தவள், "அப்பம்மா இதைப் பற்றி நானும் ஏதோ கொஞ்சம் கேள்விப்பட்டிருக்கிறேன்," என்றாள்.

"யாழினி நீ போரின் முடிவில்தானே பிறந்தாய்."

தொடர்ந்து "உன் அம்மாவின் மாமியார் ஆன நானே அம்மாவின் இந்தச் செயல் பற்றி, அதுவும் இப்ப உன் மாமா சொல்லித்தான் தெரியவந்தது, இதை நான் குற்றம்... பிழை என்று சொல்லவில்லை. அவவுடைய இந்த முடிவுக்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம். உன் அம்மாவின் இடத்திலிருந்து யோசித்துப் பார் புரியும். உம்... ம்.. இதை எல்லாம் ஆறுதலாயிருந்து யோசி, செல்லம் உனக்கு உன் அம்மாவின் அன்றைய முடிவு விளங்கும். உனக்கு இது பெரிய அதிர்ச்சியாக இருக்கும், எனக்கு அது விளங்குது. ஆனால் அர்ச்சுன் உனக்கு இன்னுமொரு அண்ணனாக ஃப்றெண்டாக் கிடைத்திருக்கிறான் என்று மனதில் ஏற்றுக்கொள். இந்தக் கட்டத்திலாவது தெரிய வந்ததே. உங்கள் இரண்டு பேருக்கும் கல்யாணம் ஆனபின் தெரிய வந்திருந்தால்....? உன் நிலை என்னவாகி இருக்கும்," என்றார் மூச்சுத் திணற. எண்பத்தி ஐந்து வயது அப்பம்மாவுக்கு ஒரேயடியாகக் கதைத்ததால் மூச்சு வாங்கியது.

கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த யாழினி தான் தன் தாய் மேல் கோபப்படுவது அர்த்தம் இல்லை என உணரத்

தொடங்கினாள். நாளடைவில் அவள் தன் அறையில் அடைந்து இருப்பதவிட்டு வெளியே வரத்தொடங்கினாள்.

அப்பம்மா மங்களத்தை அழைத்து. "இப்ப யாழினி கொஞ்சம் பரவாயில்லை. அவளும் நாங்களும் மனம் விட்டுக் கதைத்தோம்," என்றாள் அடுத்த நாளே ரவியும் மங்களமும் அவளைப் பார்க்க வந்தார்கள். யாழினி பள்ளிக்கூட நாட்களில் அப்பப்பா வீட்டுக்கு ஒரு வாரமோ இரண்டு வாரமோ வந்து தங்குவாள், அப்போது எல்லாம் ரவியின் பெற்றோரையும் யாழினியையும் பார்க்கப் பெற்றோர் வருவது வழக்கம் அது போலவே இப்போதும் வந்தார்கள். வந்ததுமே மகள் யாழினியை இருவரும் மார்போடு அணைத்து கொஞ்சினார்கள்.

"வா யாழினி, இங்கு இருந்து ஆறுதலாகப் பேசுவோம் என மூவரும் அப்பப்பாவின் வரவேற்பறையில் போய் அமர்ந்தனர். முதலில் ரவி பேசத் தொடங்கினார் "யாழினி, இருபத்தி ஐந்து வருசத்திற்கு முன் நடந்ததையும், அம்மாவின் சூழ் நிலை பற்றியும் விபரமாக உன் அப்பம்மா சொல்லியிருப்பா. அர்ச்சுனுக்கும், கபிலனுக்கும் சொன்னது தான் உனக்கும் சொல்லுறேன்", என அவர்களுக்கு சொன்ன விவரத்தையும் சொல்லி, "உன் அம்மா எடுத்த முடிவைப் பிழை இல்லை என நானே ஏற்றுக் கொண்டு விட்டேன்." என்றார்

"ஓம் அப்பா, அப்பம்மா எல்லாம் சொல்லிவிட்டா" என்றாள் யாழினி

அடுத்து மங்களம் "யாழினி உன்னிடம் என் கடந்த கால வாழ்க்கையிலே நடந்ததை இது நாள் வரை சொல்லாததற்கு என்னை மன்னித்து விடு. அது எனக்கும் உன் மாமாவுக்கும் மட்டும் தெரிந்த ஒரு ரகசியம். இப்போது அர்ச்சுன் என் மகன் என்று தெரிய வந்தபின்தான் உன் அப்பாவுக்குமே சொன்னேன். அவரும் என்னை மன்னித்ததோடு, அர்ச்சுனை எங்கள் மகனாகவும் ஏற்றுக் கொண்டு விட்டார்," என்றாள் ஒரே மூச்சில்.

யாழினி பதிலுக்கு எதுவுமே சொல்லவில்லை. அவள் மனதில் பல விசயங்கள் ஓடிக் கொண்டிருந்தது. ஆயினும் அவர்கள்

இருவரோடும் சரளமாக கதைக்காவிட்டாலும் கேட்ட கேள்விகளுக்குப் பதிலும் சொல்லி வேறு விசயங்களைப் பற்றியும் கதைத்தாள்.

"அர்ச்சுன் கொழும்புக்குப் போய்விட்டானா?" என யாழினி கேட்க.

"ஓம் நாங்கள் மூவரும் ஸ்டேசன் வரை போய் ரயில் ஏத்தி விட்டோம்," என பதிலளித்தாள் மங்களம்.

அன்று இரவு அங்கு கழித்துவிட்டுக் காலையில் வீடு திரும்பினார்கள் யாழினியின் பெற்றோர்கள். அப்பப்பா காலையிலே காலாற அரசடி பிள்ளையார் கோயில் வரை நடப்பார். அப்போது சில வேளைகளில் யாழினியும் அவருடன் போய் வருவாள். சில நாட்களில் காலை பத்து மணி பூசையும் சாமி தரிசனமும் கிடைத்ததால் யாழினிக்கு ஒருவித மன நிம்மதியைக் கொடுத்தது.

இப்போது பொன்மணி, யாழினியிடம் அர்ச்சுனன் விசயத்தைப் பற்றிப் பேசுவதில்லை. ஊர் விசயம், யாழினி அடுத்து மேலே படிக்கப் போறதைப் பற்றியும் வேலைக்குப் போவது எனப் பல விசயங்களை பற்றிக் கதைத்தாள். ஒரு கிழமைக்குப் பின் ஒரு நாள் சமையல் அறை மேசையில், அப்பப்பா அப்பம்மாவோடும் இருந்து யாழினி சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, "அப்பம்மா! அப்பாவை ஆர்மி பிடித்துக் கொண்டு போனபோது அம்மாவுக்கு எத்தினை வயது?"

"அம்மாவுக்கா?..... கல்யாணம் கட்டும் போது, பதினெட்டு, ம்... ம்...ம்... கபிலன் ஒரு வருசத்திலே பிறந்து விட்டான் அவனுக்கு நாலு வயதாக இருக்கும் போது தான் ரவியை ஆர்மி பிடித்துக் கொண்டு போனார்கள். அப்படி என்றால்,......... பதினெட்டும் ஒன்றும்...... நாலும் சேர்த்தால் உன் அம்மாவுக்கு இருபத்தி மூன்று வயதிருக்கும்," என்றார் பொன்மணி.

"அப்படி என்றால் அப்ப அம்மாவுக்கு என்னுடைய வயதாகத் தான் இருந்திருக்கும். பாவம் அம்மா, அப்பா இல்லாமல் எவ்வளவு கஸ்டப் பட்டிருப்பா? எனக்கு இது எல்லாம் ஒருவரும் சொல்லுவது இல்லை," என்றாள் யாழினி.

*“நடந்து முடிந்ததைச் சொல்லி உங்களை எல்லாம் கஷ்டப்படுத்த வேண்டாம் என்றுதான்,” என்றார் அப்பப்பா .*

*இரண்டு மூன்று நாளுக்கு ஒரு முறை மானிப்பாயில் இருந்த தங்கள் மகள் யாழினியை பார்க்க ரவியும் மங்களமும் வருவார்கள்.*

*வரும் போது எல்லோருக்கும் மதிய உணவையும் சமைத்துக் கொண்டு வந்து விடுவாள் மங்களம். யாழினி இப்போது இயல்பு நிலைக்கு வந்து விட்டாள். அவளையும் குடும்பத்தையே உலுக்கிப் போட்ட விசயம் தெரிய வந்து இரண்டு மாதம் ஆகியிருந்தது.*

*இரண்டு மாதம் கழித்து யாழினியே தாய் மங்களத்தை தன் தொலைபேசியில் அழைத்துத் தான் வீட்டுக்கு வரப் போவதாகச் சொன்னாள். உடனே ரவியும் மங்களமும் சேர்ந்தே அவளை அழைத்துப் போக வந்து விட்டனர்.*

*“பாய்! பாய்! அப்பப்பா அம்மம்மா, என அவர்களைக் கட்டி அணைத்து கன்னத்தில் மாறி மாறி முத்தமிட்டு விடை பெற்றாள் யாழினி.*

*“நீ என்ன தூரவா போறாய்? பத்து நிமசத்திலே நீயும் வந்திடலாம் நாங்களும் தான் என்றார் அப்பப்பா.*

*படிப்பு முடிந்ததும் வேலைக்குப் போவது என முடிவெடுத்திருந்த யாழினி வீட்டிற்கு வந்ததும், தன் படிப்புக்குத் தகுந்த வேலைக்கு விண்ணப்பிக்கத் தொடங்கினாள். ஆனால் நாட்டின் நிலைமையாலோ என்னவோ எந்தவித பதிலுமோ ஒரு நேர்காணலுக்கோ அழைப்பும் வரவில்லை. இதைப் பற்றிக் கவலைப்பட்டு கொண்டிருக்கும் போதுதான் திருகோணமலையில் வேலையாக இருந்த வசீகரன் யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வந்திருந்தான். வந்திறங்கி வேலையைப் பொறுப்பெடுத்ததும் அடுத்த நாளே அவர்களைப் பார்க்க கட்டுடைக்கு வந்துவிட்டான். மாமா, மாமி முக்கியமாக யாழினி கபிலனையும் பார்க்க வந்தான். அன்று சனிக்கிழமை என்றபடியால் அன்று பொழுது அவர்களுடனே கழித்தான்.*

*யாழினி வேலை தேடிக் கொண்டிருக்கிறாள் எனத் தெரிய வந்ததும், "யாழினி ஏதாவது இண்டர்வியுவிற்கு அழைப்பு வந்திருக்கா?" எனக் கேட்டான்.*

*"இல்லை, ஒன்றுமே வரவில்லை. எந்தவித பதிலும் வருதில்லை. என்ன செய்வதென்று தெரியவில்லை. மேலே படிப்போமா என யோசிக்கிறேன்," என்றாள்.*

*"உன் ரெசுமேயே தா பார்க்கலாம்."*

*தன் ரெசுமேயை வசீகரனிடம் கொடுக்க அவன் அதை படித்துப் பார்த்து விட்டு. "உனக்கு நல்ல காலம் தான். எங்கள் கம்பனியில் ஒரு வேலை காலியாக இருக்கிறது. உன்னுடைய படிப்புக்கு ஏற்ற வேலை. பேசிக் லெவல் தான். ஒரு வேலை கிடைத்துவிட்டால் பிறகு மேலே போகலாம். என்ன சொல்லுறாய் யாழினி," எனக்கேட்டான்.*

*"எனக்கு ஒ கே" எனப் பதில் வரவும்,*

*"யாழினி, உடனே இந்த மெயிலுக்கு உன் விண்ணப்பத்தையும் ரெசுமேயும் அனுப்பி வை என தன் கைபேசியிலிருந்த அந்த கம்பனியின் மெயில் விலாசத்தை யாழினியின் கைபேசிக்கு அனுப்பிவிட்டான். யாழினியும் அன்றே அந்த வேலைக்குத் தன் விண்ணப்பத்தை அனுப்பி வைத்தாள்.*

*வசீகரன் தன் செல்வாக்கைப் பயன்படுத்தியதாலோ என்னவோ யாழினிக்கு ஒரு வாரத்திற்குள் நேர்காணலுக்கு அழைப்பு வந்தது. வசீகரன் வேலைப் பார்க்கும் அதே கம்பனியில் அவளுக்கு வேலையும் கிடைத்தது. பத்து கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த கம்பனிக்கு சில நாட்கள் வசீகரன் யாழினியை தன் காரில் அழைத்துக் கொண்டு போவான். இதனால் அவர்கள் இருவரும் நெருங்கிப் பழகினார்கள்.*

*வசீகரனுக்கு யாழினி, பிறந்த நாள் முதல் அவள் அழகு பின்பு அவள் குணம் எல்லாமே பிடித்திருந்தது. விடலைப் பருவம் வரவும் அது காதலாக மலர்ந்தது. யாழினி படிப்பு முடித்து மட்டக்கள்ப்பிலிருந்து வரட்டும் என பொறுமையாகக் காத்திருந்தான்.*

அப்போதுதான் அர்ச்சுனனைப் பற்றி தெரிய வந்தது. அவன் தகப்பனைப்போல நல்லவன் ஆகையால் யாழினியின் சந்தோசம்தான் முக்கியம் என நினைத்து குறுக்கே வராமல் இருந்துவிட்டான்.

இவர்கள் ஒன்றாய் பழகுவதையும், ஒன்றாய் வேலைக்குப் போவதையும் பார்த்து சிவபாலனின் குடும்பமும், மங்களத்தின் குடும்பமும் சந்தோசப்பட்டார்கள். "நாங்கள் இருவரும் கல்யாணம் கட்டப்போறோம்," என்று சொல்லும் நாளுக்காகக் காத்திருந்தார்கள்.

தீபாவளியும் வந்தது. அர்ச்சுன் சொன்னபடியே கொழும்பிலிருந்து ஒரு வார லீவில் தன் பெற்றோரையும், அண்ணன், தங்கையையும் பார்க்க வந்திறங்கினான். அந்த வருடம் கட்டுடை வீட்டில், ரவி மங்களம் குடும்பமும், சிவபாலன் குடும்பமும், அவன் தம்பி மோகன் குடும்பமும் யாழினியின் அப்பப்பாவும் அம்மம்மாவும் சேர்ந்து அமர்க்களமாக கொண்டாடினார்கள்.

★★★

# மாதவன் ஏமாந்தான்

*“இஞ்சாருங்கோ எந்த துணிவிலே எங்கட மகளின்ட கர்ப்பப்பை குழாயை, (ஃப்லோபியன் டியுப்) கட்டிப்போட்டு வந்தால்தான் இந்தக் கல்யாணம் நடக்கும் என்று சொல்லுவினம்,” என மன ஆதங்கத்தோடு கேட்டாள் மகாலஷ்மி.*

*“மகா, எங்கட மகள் சித்ராவுக்கு முப்பத்திரண்டு வயதாகிவிட்டது. அவளுக்கு ஏழாம் வீட்டிலே சனி. அவளின்ட சாதகத்தோடு, அருமையாக ஒன்று இரண்டு சாதகம்தான் பொருந்தும். இந்த மாப்பிள்ளையின் சாதகத்தோடு எங்கள் மகளின்ட சாதகம் நல்லா பொருந்துதாம் என்கிறார் தரகர் சங்கரன். அதுவும் சும்மாவா! அவுஸ்திரேலியா மாப்பிள்ளை அல்லவோ. அங்கே நல்ல உத்தியோகம், கைநிறைய சம்பாதிக்கிறார். மனைவி இறந்து மூன்று வயதுக் குழந்தை இருப்பதால், அந்த பிள்ளைக்கு ஒரு தாயும் தனக்கும் ஒரு துணையும் வேணுமென்று தான் இரண்டாந்தாரமாக ஒரு பெண்ணைக் கட்ட விரும்புகிறார் என்று தரகர் சொல்லுறார்,” என்றார் அவள் கணவர் மகாலிங்கம்.*

*“அதற்காக ஏன் தன்னை கட்டப்போற பெண்ணை இப்படி கர்ப்பப்பை குழாயைக் கட்டிப்போட்டுத்தான் கல்யாண*

மேடைக்கு வரவேணுமெண்டு ஒரே பிடியாக இருக்கிறார்? கல்யாணம் கட்டுறது பிள்ளை குட்டிகள் பிறந்து வம்சம் பெருகிறதுக்குதானே?"

"புதுசா வாற பெண்டாட்டிக்குப் பிள்ளை பிறந்தால், மூத்த தாரத்துப் பிள்ளையை நல்லாப் பார்த்துக்கொள்ள மாட்டாள், ஓர வஞ்சனையாக இருந்துவிடுவாளோ என்ற பயம்தான்," என தனக்குத் தெரிந்த உண்மை எல்லாவற்றையும் கொட்டினார் மகாலிங்கம்.

"அதற்காக இப்படி ஒரு நியாயமற்ற நிபந்தனையைப் போடலாமா?" எங்கள் மகளும் படித்து நல்ல வேலையிலே இருக்கிறாள். என்ன அவள் நிறமாகயில்லை, அதைவிட அவளுக்கு என்னக் குறை?" இந்த அநியாயத்தை தாங்கமுடியாமல் கேட்டாள் மகாலஷ்மி.

தந்தையும் தாயும் பேசியதைப் பக்கத்து அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தாள் சித்ரா. ஒரு வாரமாக இந்த சிட்னி மாப்பிள்ளை பற்றியக் கதைதான் வீட்டில். சித்ராவுக்கும் எல்லா விவரமும் பெற்றோர் சொல்லியிருந்தார்கள். அறையிலிருந்த நிலைக் கண்ணாடி முன் போய் நின்று சித்ரா தன் உருவத்தை நுணுக்கமாகவே ஆராய்ந்தாள். முகத்தில் கண், மூக்கு, உதடுகள் அந்தந்த இடத்திலிருந்தன. ஆனால் அந்த முக அம்சங்களில் ஒரு கவர்ச்சியுமில்லை வெறும் சாதாரண முகமாகவே அவளுக்கு பிரதிபலித்தது. முப்பத்திரண்டு வயதைத் தாண்டிய தன் உடம்பை இடம், வலம் எனத் திருப்பித் திருப்பி நிலைக் கண்ணாடியில் பார்த்தாள். ஒரு இளம் வயது கல்யாண யுவதியின் உடல் கட்டுக்கும் அவள் உடல் கட்டுக்கும் எவ்வளவு வித்தியாசம். இடையிலும் நாரியிலும் தாராளமாகச் சதை போட்டு, இரண்டு பிள்ளைகளைப் பெற்ற உடம்பு போல் அவளுக்குத் தெரிந்தது.

'அப்பாவும் அம்மாவும் தங்களுடைய ஒரே மகளைக் கட்டிக் கொடுத்து பேரப்பிள்ளைகளைப் பார்க்க ஆசைப்படுகிறார்கள். எங்கட மகள் வயதை ஒத்த சினேகிதிகள் எல்லோரும் கல்யாணம் கட்டி கணவர் குழந்தைகள் என வாழ்கிறார்கள்,

*எங்கட மகள் மட்டும் தனி மரமாக நிற்கிறாள். நாளைக்கு, நாங்களும் போய்விட்டாள் அவளுடைய கதி என்ன?' என அம்மா அப்பாவிடம் சொல்லி அழுவதை பல தடவை கேட்டிருக்கிறேன். இப்படி நினைத்துக்கொண்டிருக்க முன் தாழ்வராத்திலிருந்த தாயும் தந்தையும் சிட்னி மாப்பிள்ளையைப் பற்றித் திரும்பவும் பேசத் தொடங்கவும் கவனமாக கேட்டாள்.*

*"இந்த மாப்பிள்ளையின்ட சாதகமும் எங்கட சித்ராவின் ஏழுச் செய்வாய் சாதகத்தோடு நல்லா பொருந்துது. தவிர மாப்பிள்ளைன்ட பெற்றோர் இங்கேதான் இருக்கிறார்கள், அதனாலே அங்கே மாமா மாமி என்று எந்த பிச்சல் பிடுங்கலும் இருக்காது" என மகாலிங்ம் தன் கருத்தைச் சொன்னார்*

*"கல்யாணத்திற்கு முன் கர்ப்பப்பைக்குப் போகிற குழாயை கட்டிப்போட்டுத்தான் பெண் மணவறைக்கு வரவேணும் என்று சொல்லுவது, பிச்சல் பிடுங்கல் இல்லையா? இதனாலே அவளுக்கென்று ஒரு பிள்ளையும் எங்களுக்கும் ஒரு பேரப்பிள்ளை ஒன்றுமே கிடையாமல் போயிடும்," எனச் சேலைத் தலைப்பை உதறி இடுப்பில் செருகியபடி உள்ளே செல்ல எழுந்தாள் மகாலஷ்மி.*

*"கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்றால் எப்படி? இப்படி எல்லாம் பார்த்தா எங்கள் மகள் சித்ராவுக்குக் கல்யாணமே நடக்காது. அவள் கன்னியாகத் தனித்து வாழவேண்டியதுதான்" என்றார் மகாலிங்கம். மகாலிங்கம் சொல்லி முடிக்கவும் அவரது கைபேசி 'அன்பே சிவம்' என ஒலித்தது. மறு முனையில் தரகர் சங்கரன்தான் பேசினார்.*

*"ஐயா நாளைக்குப் புதன் கிழமை நல்ல நாளாம். உங்களையும் சந்தித்து பெண்ணையும் பார்த்து மற்ற விசயங்களையும் பேசலாமா என்று மாப்பிள்ளை கேட்கிறார். அவருக்கு லீவு இன்னும் இருபது நாளில் முடிந்துவிடும். சிட்னி போகவேணும். அதற்கிடையில் ஆகவேண்டியதைச் செய்து கல்யாணத்தையும் வைக்கவேணும்தானே?" என்றார் தரகர்.*

*"ஒருக்கா என்ட.........மகளின்ட மு.........டிவை கேட்டு......... விட்டுச் சொல்லுறேன்" என இழுத்தார் மகாலிங்கம்.*

“ஓம் ஓம் மகளின்ட முடிவு முக்கியம். ஆனால் நாளைக்குப் பின்னேரம் ஐந்து மணிக்குள்ளே முடிவை சொல்லிவிடுங்கோ. இன்னுமொரு பகுதிக்கும் இந்த மாப்பிள்ளையைப் பிடித்திருக்கு. சும்மாவா சிட்னி மாப்பிள்ளை அல்லவா?” என்றார் தரகர்.

கைபேசியில் தகப்பன் தரகருக்குச் சொன்ன பதிலை பக்கத்து அறையிலிருந்த சித்ராவுக்கும் கேட்டது. ‘அடுத்து அப்பா என்னிடம் வந்து உன் முடிவு என்னம்மா’ என கேட்கப்போறாரே? எத்தனை கல்யாணத் தரகர்கள், எத்தனை மாப்பிள்ளைகள் என்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள்? பெண் சுமாராகவும், நிறமாகவுமில்லை எனவும் சீதனத்தை ஒரு ஐந்து லட்சம் கூட்டிக் குடுத்தால் மாப்பிள்ளை வீட்டாருக்குச் சம்மதமாம் என்றும் தரகரிடமிருந்து அடுத்த நாள் பதில் வரும். ஏன்? கல்யாணத் திகதியும் முடிவான பின் சீதனம் கூட்டிக்கேட்டு என் கல்யாணம் நின்று போகவில்லையா? எந்தச் சீதனுமும் வேண்டாம், படித்திருந்தால் போதும். தன் மகனுக்கு தாயாகவிருந்து பாசத்தோடு பார்த்துக்கொண்டால் போதும் என இந்த வெளியூர் மாப்பிள்ளை கேட்கிறார். எனக்கும் வயது ஏறிக்கொண்டு போகுது. பேசாமல் இவரையே கட்டிக் கொண்டு சிட்னிக்குப் போய் வாழலாம். அப்பா அம்மாவுக்கு திருப்தியாக இருக்கும்’ என தன் மனதுக்குள்ளே முடிவெடுத்து கொண்டாள்

“அம்மா! சித்ரா இங்கே வாம்மா?” எனத் தந்தை அழைக்கவும், சித்ரா பதட்டப்படாமல் அவர் அமர்ந்திருந்த முன் தாழ்வாரத்திற்குப் போனாள்.

“சிட்னியிலிருந்து வந்திருக்கும் மாப்பிள்ளை மாதவனுக்கு நாளை ஐந்து மணிக்கு முன் எங்கள் முடிவை சொல்லவேணும் என்று தரகர் சொல்லுகிறார். உனக்கு மாப்பிள்ளை போட்டிருக்கும் நிபந்தனைகள் சொல்லியிருக்கிறோம்தானே. அவனோடு வாழப் போறது நீ, ஆகையால் அவரைக் கட்ட உனக்கு விருப்பமா இல்லையா? நீயே முடிவெடு. நாங்கள் உன்னைக் கட்டாயப் படுத்தமாட்டோம்,” என்றார் மகாலிங்கத்தார். ஏற்கனவே சித்ரா தன் மனதில் முடிவெடுத்திருந்தபடியால்,

*“அப்பா எனக்கு சிட்னி மாப்பிள்ளையைக் கட்ட சம்மதம்,” எனப் பட்டென்று பதிலளித்தாள்.*

*திகைப்பில் ஒரு கனம் வாயைத் திறந்தபடியிருந்த மகாலஷ்மி, “ஏண்டி! இவரைக் கட்டினால் உனக்கென்று ஒரு பிள்ளை பிறக்காதே,” என்றாள் கீச்சிட்ட குரலில்.*

*“முப்பத்திரெண்டு வயதைத் தாண்டிய எனக்கு இனி பிள்ளை பிறக்கும் என்று என்ன உத்தரவாதம். ஒரு பிள்ளைக்குத் தாயாக இருக்கிற வாய்ப்புக் கிடைக்குதே, அதுவே போதும்.” முகத்திலோ குரலிலோ எந்த உணர்ச்சியுமின்றி சாதாரணமாகப் பதிலளித்தாள் சித்ரா.*

*இருதய நோயாளியான மகாலிங்கத்துக்கு மனதிலிருந்த வேதனையோடு சித்ராவின் பதிலால் இருதயம் வலித்தது, அந்த வலி நெஞ்சிலே பரவத்தொடங்கியது. சட்டென்று சேர்ட் பொக்கட்டிலிருந்த சிறு மருந்து புட்டியை எடுத்து நாக்கிற்கு கீழ் தெளித்து விட்டுச் சாய்ந்து அமர்ந்துகொண்டார். நெஞ்சு வலி முற்றாய் போனபின் ஒரு இரண்டு மணித்தியாலம் கழித்து தரகரைக் கைபேசியில் அழைத்து, “எங்கள் எல்லோருக்கும் சம்மதம், மாப்பிள்ளையிடம் நாளைக்கே வந்து எல்லா விசயங்களையும் பேசி முடிவெடுக்கலாம் என சொல்லிவிடுங்கோ,” என்றார்.*

*அடுத்த நாள் காலை பத்து மணிக்கு மேல் நல்ல நேரம் ஆகையால் மாதவன் தன் பெற்றோருடனும் தன் மூன்று வயதுக் குழந்தை றோசானுடனும் கூடவே தரகரும் வெள்ளவத்தையின் ஃபசல்ஸ் லேனில் இருந்த மகாலிங்கத்தின் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களை மகாலிங்கமும் அவர் மனைவியும் வாசலுக்கு வந்து வரவேற்றார்கள். உள்ளே வந்தவர்கள் அந்தச் சிறு வரவேற்பறையில் நெருக்கமாக அமர்ந்து கொண்டனர்.*

*மாப்பிள்ளையின் பெற்றோர், மகாலிங்கத்திடம் எப்படியிருக் கிறீர்கள் எனச் சுகம் விசாரித்தபின் வாயே திறக்கவில்லை.*

*குழந்தை றோசானை தன் மடியில் இருத்திக் கொண்டு அமர்ந்திருந்த மாதவன், “அங்கில்! அன்டி! தரகர் எல்லா*

விவரமும் சொல்லியிருப்பார் தானே," எனக் கல்யாணப் பேச்சைத் தொடக்கினான்.

"ஓம் ஓம், மகளுக்கும் எல்லாம் தெரியும்."

"அது நல்லம்... என்றாலும் அவவுக்கு முன்னாலே எல்லாத்தையும் கதைத்து முடிவெடுக்கிறது முக்கியம்தானே,"

"அம்மா சித்ரா, சித்ரா! மாப்பிள்ளை உன்னையும் வைத்து கொண்டுதான் கல்யாண விசயங்கள் கதைக்க விரும்புகிறார். இங்கே வாம்மா?" என அழைத்தார்.

இளம் சிவப்பு நிறத்தில் ஒரு பட்டுப் புடவையும் அதற்கு ஒத்துப் போகிற அதே நிறத்தில் கோடிட்ட ரவிக்கையும் அணிந்து, எப்போதும் போல் தனது அலை அலையான கூந்தலை வாரி இளைத்த ஒற்றைப் பின்னல் மார்பில் தவழ மெல்ல நடந்து வந்து எல்லோருக்கும் கோப்பி கொடுத்துவிட்டு காலியாக இருந்தக் கதிரையில் அமர்ந்து கொண்டாள், சித்திரா. மாதவன் சித்ராவின் தோற்றத்தை கவனித்ததாகத் தெரியவில்லை. ஆனால் தன் மகனிடம், அவளைச் சுட்டிக்காட்டி,

"அங்கே பார் உனக்கு அந்த ஆன்டியைப் பிடித்திருக்கா?" என மகனிடம் கேட்க அவனும் 'ஓம்' எனத் தலையை ஆட்டினான்.

"அப்ப நீ கொண்டு வந்த சொக்கலட்டை ஆன்டிக்கு குடுக்கிறியா?" எனக் கேட்டார். குழந்தை மாதவனின் மடியை விட்டு இறங்கி, சித்ராவை அணுகி சொக்கலட் பெட்டியைக் கொடுத்தான். பெட்டியை வாங்காமல் சித்ரா குழந்தையைத் தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டு

"உன் பெயர் என்ன?"எனக் கேட்டாள்.

"றோசான்."

"உனக்கு சொக்கலட் பிடிக்குமா?"

"ஓம், இது உங்களுக்காக அப்பாவும் நானும் சிட்னியிலிருந்து வாங்கிக் கொண்டு வந்தனாங்கள்," என்றான்.

"அப்படியா?" என்றவள் சொக்கலட் பெட்டியை திறந்து ஒரு சொக்கலட்டை எடுத்து றோசானின் வாயில் வைத்துவிட்டாள்.

*"குழந்தை உங்கள் மகளோடு ஒட்டிக் கொண்டான். பிறகு என்ன? மிகுதியைப் பேசி முடிக்கவேண்டியது தான்," என்றார் தரகர்.*

*"ஓம் பேசலாமே. எங்கள் சித்ரா பள்ளிப் படிப்பு முடிந்ததும், ஒரு வருடம் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் படித்து முன் பள்ளி கற்பித்தல் மேம்பட்ட சான்றிதழ் பெற்று, இப்போது கொழும்பிலே புனித பிரிஜெட்ஸ் கல்லுரியில் முன்பள்ளி ஆசிரியராக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு பிள்ளைகளென்றால் கொள்ளைப் பாசம்." என்றார், மகாலிங்கம்.*

*"அப்படியா?" என்ற மாதவன் எல்லோர் முன்னாலும், "சித்ரா! நான் கேட்டிருக்கும் சிறிய ஒபரேசனின் பின் விளைவுகள் தாக்கங்கள் பற்றி சரியாகப் புரிந்து கொண்டு, என்னைக் கல்யாணம் கட்ட சம்மதமா எனச் சொல்லுங்கோ?" என நேரடியாகவே கேட்டான்.*

*சித்ராவும், "எல்லாத்தையும் தெரிந்து, யோசித்து தான் நான் சம்மதிக்கிறேன்," என பதிலளித்தாள்.*

*"எனக்கு சித்ராவை நல்லா பிடித்திருக்கு. என் மகனுக்கு நல்ல தாயாக இருப்பாள் என நம்புகிறேன். எனக்குச் சீதனமாகப் பணமோ வீடோ வேண்டாம். உங்கள் மகளை மட்டும் எனக்குக் கட்டித்தந்தால் போதும். ஸ்பெசல் லைசன்ஸ் எடுத்து கல்யாணத்தைக் கச்சேரியில் பதிவு செய்திடலாம். மற்ற விசயத்தைப் பற்றி நான் டொக்டருடன் எல்லா ஒழுங்கும் செய்திருக்கிறேன். இன்னும் இரண்டு நாளில் அந்த ஒபரேசனை செய்திடலாம்", என்றான் மாதவன். மகாலஷ்மிக்கோ அவன் ஒரு வியாபார ஒப்பந்தம் பேசும் தோரனையில் பேசுவதாகப் பட்டது.*

*"எல்லோருக்கும் சந்தோசம்தானே? இன்னும் இரண்டு வாரத்திலே 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு நல்ல முகூர்த்தம் அண்டைக்குக் கலியாணத்தை வைத்திடலாம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்ற தரகர், தனக்குக் கிடைக்கப் போகின்ற கனமான தரகை நினைத்து வாயெல்லாம் பல்லாக இளித்தார்.*

மாதவனும் அவன் பெற்றோரும் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர். சித்ராவின் பக்கத்திலிருந்து தந்தை மகாலிங்கம் சம்மதம் தெரிவித்தார்.

மகாலஷ்மியோ ‘மாப்பிள்ளைக்கு எது நடக்காவிட்டாலும் பரவாயில்லை அந்தக் கர்ப்பத்தடை மட்டும் நடந்திட வேணுமெண்ட முடிவோடுதானிருக்கிறார். இதோடு எங்கள் பரவணியே இல்லாமல் போயிடுமே, இது என்ட மனுசனுக்கு புரியுதில்லையே’ என மனதுக்குள் புழுங்கினாள்.

மகாலிங்கம் தனது தகுதிக்கு ஏற்ப செலவு செய்து மகளின் கல்யாணத்தை நடத்தினார். மாதவனும் இது இரண்டாவது கல்யாணம் என்றபடியால் பணமிருந்தும் அமர்க்களப்படுத்தாமல் கல்யாணத்தை எளிமையாக நடத்துவதையே விரும்பினான்.

கல்யாணம் நடந்து மூன்றாம் நாளே மாதவன் தன் மகனோடு சிட்னி போய்விட்டான். இரண்டு மாதத்தில் சித்ராவுக்கு மாதவனின் மனைவி என்ற அடிப்படையில் அவுஸ்திரேலியா வீசா கிடைத்தது. மாதவன் அனுப்பிய சிங்கப்பூர் விமான டிக்கட்டில் ஆர்வத்தோடும் ஒரு வித கிளர்ச்சியோடும் சிட்னியில் போய் இறங்கினாள். சித்ராவை ஆவலோடும் அன்போடும் மாதவன், குழந்தை றோசான் மற்றும் மாதவனின் நண்பர்களும், அவர்களது குடும்பங்களும் வரவேற்றனர்.

வெள்ளவத்தை ஃபசசெல்ஸ் லேனில் இரண்டு அறை வீட்டில் நினைவு தெரிந்த நாள் முதல் குடியிருந்த சித்ரா, கணவர் மாதவனின் இரண்டு அடுக்கு வீட்டைப் பார்த்து வியந்தாள். வீட்டுக்குள் போனதும் வரவேற்பறை, அதை ஒட்டினாற் போலச் சாப்பிடும் அறை அதற்கு பின்னால் குடும்ப அறை. படிக்கட்டில் ஏறிப் போகவும் மேல் மாடியில் நான்கு படுக்கை அறைகள் என விசாலமான வீடாகவிருந்தது.

சித்ரா படிக்கட்டில் ஏறிப்போன போது சுவரில் மாதவனினதும் அவர் முதல் மனைவி ரேவதியினினதும் கல்யாணப் போட்டோவும் அதற்கு அடுத்தாற்போல, மாலை அணிந்திருந்த ரேவதியின் போட்டோ தொங்குவதையும் கவனித்தாள். ரேவதி

*நல்ல நிறமாகவும் சினிமா நடிகை போல் அழகாகவுமிருந்தாள். 'இவ்வளவு அழகான மனைவியை அவர் ஆழமாகக் காதலித்திருப்பார் போலும். எனினும் அவள் இழப்பிற்குப் பின் தன் மகனுக்கு ஒரு தாய் வேணுமென்பதற்காக என்னைக் கல்யாணம் செய்திருக்கிறார்,' என்பதையும் உணர்ந்தாள்.*

*சிட்னி வாழ்க்கையும் சிட்னி குளிரும் எல்லாமே சித்ராவுக்குப் புதிதாகவிருந்தது. மாதவன் பொறுமையாக சிட்னி வாழ்க்கையைக் கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்கு அறிமுகப்படுத்தி சித்ராவை அன்போடு அவளது விருப்பு வெறுப்புகளை மதித்து நடந்து கொண்டான். அவளுக்குக் கல்யாண சுகத்தையும் கொடுத்து தானும் அந்த சுகத்தை அனுபவித்தான். சித்ராவுக்கும் மாதவன் மேல் அன்பும் பாசமும் வளர்ந்தது. றோசானை தன் சொந்த மகனாகவே பாசத்தோடு பார்த்துக் கொண்டாள். குழந்தை றோசானும் அம்மா என்ற உணர்வோடு அவளோடு ஒட்டிக் கொண்டான். இப்படியே இரண்டு வருடங்கள் உருண்டோடின.*

*குழந்தை றோசான் முதலாம் வகுப்பு பள்ளிக்குப் போகத் தொடங்கியபின்,*

*"சித்ரா, விருப்பமென்றால் நீ உனக்குப் பிடித்த வேலை ஒன்றைத் தேடிக் கொள்," என மாதவன் சொன்னான். சித்ராவும் தனது முன்பள்ளி கற்பித்தல் சான்றிதழையும் பத்து வருடமாகப் படிப்பித்த அனுபவத்தையும் காட்டி ஒரு பள்ளிக்கூடத்தில் முன்பள்ளி ஆசிரியர் ஆனாள்.*

*மாதவன், சித்ரா, றோசான் குடும்ப வாழ்க்கை மிகவும் சந்தோசமாக ஓடிக் கொண்டிருந்தது. அவர்கள் மகன் றோசானுக்கு பதினேழு வயது முடிந்திருந்தது. சமீபத்திலே றோசான் தனது கைகளிலும் கால்களிலும் உணர்வு இல்லாதது போலவும் உடம்பும் ஒரே சோர்வாகவும் இருக்கிறது எனப் பெற்றோரிடம் சொன்னான். அவர்கள் ஃப்லு காய்ச்சல் என நினைத்து பனடோல் மாத்திரை கொடுத்தார்கள். ஒரு மாதம் கழித்து, தன் பார்வையும் மங்கலாக தெரிகிறது என்றான். உடனே மாதவனும் சித்ராவும் தங்கள் குடும்ப வைத்தியரிடம்*

றோசானைக் கூட்டிக் கொண்டு போய் காட்டினார்கள். றோசானைச் சோதித்த வைத்தியர் அவனை நரம்பியல் நிபுணரிடம் அனுப்பிவைத்தார். நரம்பியல் நிபுணர் பல சோதனைகள் செய்துவிட்டு இரண்டு நாள் கழித்து நிபுணர் மாதவனையும் சித்ராவையும் வரவழைத்து,

"உங்கள் மகனுக்கு எம் எஸ் அதாவது மல்டிபில் ஸ்களீரோசிஸ் என்கிற நரம்பியல் நோயாக இருக்கலாம். இந்த வியாதிலே இரண்டு வகை இருக்கிறது இது தீங்கற்றது போல் தெரிகிறது. உங்கள் குடும்பத்தில் உங்கள் தாத்தா பாட்டி சகோதர்கள் யாருக்காவது இந்த வியாதி வந்திருக்கா?"

"இப்படி இந்த வியாதியாலே எனது குடும்பத்திலே எவராவது பாதிக்கப்பட்டதாகக் கேள்விப்படவில்லை." என்றான் மாதவன்.

"உங்கள் மனைவி?" என அருகில் நின்ற சித்ராவைப் பார்த்தார் டொக்டர்

"றோசான் என் முதல் தாரமான ரேவதியின் மகன். றோசானின் அம்மா இறந்து பதிநாலு வருசமாகிறது."

"முதல் மனைவியின் உடன் பிறந்தோர் யாராவது இருந்தால் அவர்களுடைய டி.என்.ஏ (மரபணு) உங்கள் டி.என்.ஏ யும் வைத்து இது தீங்கற்ற எம் எஸ்ஸா அல்லது வேறு வியாதியா என அறிந்திடலாம்" என்றார் நிபுணர்.

மாதவனும் சித்ராவும் றோசானுக்கு என்ன வருத்தமோ? பெரிய வருத்தமாக இருக்கக்கூடாது என கவலைப்பட்டு ஒருத்தருக்கு ஒருத்தர் ஆறுதல் சொன்னார்கள்.

ஒரு வாரம் கழித்து டி.என்.ஏ. பரிசோதனை முடிவுகள் வந்ததும் நரம்பியல் நிபுணரைச் சந்திக்கும்படி அழைப்பு வர மாதவன் மட்டும் போனான்.

"மாதவன் இந்த வியாதி உங்கள் இறந்துபோன மனைவி ரேவதியின் பரம்பரையிலிருந்துதான் றோசானுக்கு வந்திருக்கிறது. இது நிச்சயமாகத் தீங்கற்ற அதாவது பினைன் மல்டிபில் ஸ்களீரோசிஸ் *(Benign Multiple Sclerosis)* மிகவும் சாதுவானது

*என்பது உங்களுக்கு ஒரு ஆறுதலாக இருக்கும். ஒழுங்காக மருந்துகளை எடுத்தால் அவனால் சாதாரண வாழ்க்கை வாழலாம்” என்றார் நிபுணர்.*

*“தாங்க் கோர்ட், சந்தோசம் டொக்டர். உங்கள் ஆலோசனைப்படி நடக்கிறோம்,” என்றான் மாதவன்.*

*தொடர்ந்து நிபுணர், “மாதவன்… இந்தச் சோதனைகளால் இன்னுமொரு விசயமும் தெரிய வந்திருக்கு, உங்களுக்கு அதிர்ச்சியாகவிருக்கும். உங்கள் மகன் றோசானின் டி.என்.ஏ. உங்கள் டி.என்.ஏ உடன் ஒத்து போகவேயில்லை. அதாவது றோசான் உங்கள் மகனில்லை.”*

*“டொக்டர் விளயாடுகிறீர்களா?” எனக் கேட்டபடி மாதவன் எழுந்து நின்றுவிட்டான்*

*“மாதவன் எனக்கும் இது அதிர்ச்சியாகவிருந்தது, ஆகையால் இரண்டாம் முறை சோதனையைச் செய்வித்தேன். ஆயினும், மன்னிக்க வேணும் மாதவன், றோசான் உங்கள் மகனேயில்லை. இதுதான் உண்மை.”*

*இதைக் கேட்டதும் மாதவன் கதிகலங்கிப் போனான்.*

*‘ரேவதியும் நானும் ஒருவரை ஒருவர் காதலித்துத்தானே சிட்னியில் கல்யாணம் கட்டினோம். கல்யாணமாகி சரியாக ஒன்பது மாதத்தில்தானே றோசான் பிறந்தான். அப்போ! ரேவதி என்னைக் கல்யாணம் கட்டும்…….போது கர்…ப்பமாக இருந்தாளோ? எனக்கு…எ…..ன…க்கு என் ரத்தமும் சதையுமான ஒரு பிள்ளையில்லயா?’ “ஐயோ!” எனத் தலையில் கையை வைத்துக்கொண்டு, அங்கேயே அமர்ந்துவிட்டான்.*

2022 ஆண்டில் இலங்கையின் ஞானம் சஞ்சிகை போட்டியில் தேர்வாகிய சிறுதை.

பின்பு ஏப்ரல் மாதம் 2023 கணையாழியிலும் வெளிவந்தது.

பின்பு செம்மலர் சஞ்சிகையிலும் வெளிவந்தது.

# பிரியாவும் ஜேம்சும்

*அவுஸ்திரேலியாவின் நியுவ் சவுத் வேல்ஸ் மாநிலத்தின் கிராவின் புறநகரின் 'புனித அந்தோனியார்' ஆரம்பப்பள்ளிக்குள் நுழைந்த பிரியா, தன் மகள் கீர்த்தியின் முதலாம் வகுப்பை அடைந்ததும்,*

*"வாடா குஞ்சு, வீட்டைப் போகலாம்," எனக் கீர்த்தியை அன்போடு தூக்கிக் கொஞ்சியப் பிரியாவை உற்று நோக்கி புதிதாக பார்ப்பது போல் பார்த்தாள் கீர்த்தி. திரும்பி நன்சிக்கு பக்கத்தில் நின்ற அவளது தாயாரையும் பார்த்தாள். "இன்றைக்கு என்ன செய்தீங்கள்? கைவேலை செய்தீங்களா?" எனக் கேட்டபடி நன்சியைத் தூக்கிக் கொண்டுபோன அவளது தாயையும் பிரியாவையும், மாறி மாறிப் பார்த்தாள். அவளது சின்ன மூளைக்கு எதுவுமே புரியாது குழம்பியது. அந்தச் சின்ன மூளைக்கு ஏதோ புரிகிற மாதிரி இருந்தது ஆனால் புரியாத மாதிரியும் இருந்தது.*

*வீட்டுக்கு வந்ததும் குளிக்கும் தொட்டியில் பதமான சூட்டுக்கு வெந்நீரை, நிரப்பி கீர்த்தியைக் குளிப்பாட்டி, அவளுக்குப் பிடித்த 'பணானாஸ் இன் பிஜாமாஸ்' பிரிண்ட் போட்ட, பிஜாமாவைப் போட்டு விட்டு,*

"எங்கள் கீர்த்தி இளவரசி நல்ல வாசனையாக இருக்கிறாள்," எனக் கீர்த்தியை முகர்ந்தபடி சொன்னப் பிரியாவை கீர்த்தி கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தாள். பிரியா கிச்சனுக்கு போகவும், அறையிலிருந்த விளையாட்டுப் பொருட்களில் கீர்த்தியின் கவனம் லயித்துப் போக, முற்பள்ளியில் அவளது சின்ன மூளையில் எழுந்த சந்தேகம், கேள்வி எல்லாமே மறைந்து போய்விட்டது,

"கீர்த்திக் குட்டி, டினர் ரெடி!" எனப் பிரியா கிச்சனிலிருந்து அழைக்கவும், வாசற் கதவைத் திறந்து கொண்டு அவளது ஜேம்ஸ் டடி வரவும் சரியாகவிருந்தது. அவரைக் கண்டதும் கீர்த்தி ஓடிச்சென்று ஜேம்ஸ் மேல் தாவி அவர் கைகளுக்குள் தஞ்சமானாள். தந்தையைக் கொஞ்சியவளின் முகத்தில் ஒரே சந்தோசம். ஏனோ அவளுக்கு ஜேம்சோடு இருப்பதில் ஒரு தன்னம்பிக்கையும் மகிழ்ச்சியும்.

சிக்கின் துண்டுகளும், நிறைய கொலி ஃப்லவர், புரோக்களி மரக்கறிகளும் சேர்த்துப் பிரியா சமைத்துக் கொடுத்த பஸ்டா சிக்கின் பேக்கை கிச்சன் மேசையடியிலிருந்த உயர்ந்த கதிரையில் அமர்ந்து ருசித்து ருசித்துச் சாப்பிட்டாள் கீர்த்தி.

"யமி, பஸ்டா சிக்கின், எனக்கு பிடிச்ச கோலிஃப்லவர்," என முள்ளுக் கரண்டியால் ஒவ்வொன்றையும் எடுத்துக் காட்டினாள் கீர்த்தி.

"ஓம் அதற்குள்ளே நிறைய அன்பும் போட்டுச் செய்திருக்கிறேன்," என்ற பிரியாவை கட்டி அணைத்து முத்தமிட்டாள், கீர்த்தி.

இரவு உணவுக்குப்பின் கீர்த்தி தன் அறையிலிருந்த பொம்மைகளோடு விளையாடப் போய்விட்டாள். ஜேம்சும் பிரியாவும் கிச்சனில் வேலைகளை முடித்தனர். கீர்த்தியின் படுக்கைக்குப் போகும் நேரம் வரவும் பிரியா கீர்த்தியின் அறைக்கு வந்து,

"கீர்த்தி உன்னுடைய பெட் டைம் வந்துவிட்டது வா," எனக் கீர்த்தியைத் தூக்கிக் கொண்டு போய் பாத்ரூமில் பல் துலக்கிவிட்டுத் திரும்ப அறையில் படுக்கையில் கீர்த்தியை

*வளர்த்தி விட்டு சைட் டேபில் மேலிருந்த 'கம் பாக் அல்பி' come back Alfie என்ற புத்தகத்தை எடுத்து,*

*"நேற்று கதையிலே எந்த இடத்திலே விட்ட நாங்கள் குஞ்சு, சொல்லு பார்ப்போம்?" எனப் பிரியா கீர்த்தியின் தலையை கோதியபடி கேட்க,*

*"நீ வேண்டாம். ஜேம்ஸ் அப்பா தான், எனக்குக் கதை வாசிக்க வேணும்," என்றாள் கீர்த்தி கீழ் உதட்டை பிதுக்கியபடி.*

*"சரி செல்லம், ஜேம்சைக் கூப்பிடுறேன்," என்று சொல்லிவிட்டு, ஜேம்ஸ்! ஜேம்ஸ்! என உரத்த குரலில் அழைக்கவும் ஜேம்சே அறைக்கு வந்து விட்டான். "நீ தான் கதை வாசிக்க வேணுமாம்," எனச் சொல்லிவிட்டு, கிச்சனுக்கு போன பிரியா தங்கள் இருவரது இரவுச் சாப்பாட்டைத் தயார் பண்ணியபடி, 'நாங்கள் எடுத்த முடிவு சரியோ? கீர்த்திக்கு உண்மை தெரிய வரும் போது எப்படி எடுத்துக்கொள்வாளோ? சமீபத்திலே என்னோடு ஒட்டத் தயங்குகிறாளே,' என்ற பயமும் மனதில் எழுந்தது.*

*கதையை வாசித்துவிட்டு "குட் நைட் மை பெற்," எனக் கீர்த்தியின் நெற்றியில் முத்தமிட்டு விட்டு அறை மின் விளக்கை அணைத்தான் ஜேம்ஸ்.*

*கிச்சனுக்கு வந்த ஜேம்ஸ், பிரியாவை அணைத்து உதட்டில் முத்தமிட்டவன் வைன் போத்தலைத் திறந்து இரண்டு வைன் கிளாசில் ஊற்றவும், பிரியா இரவு உணவை மேசைக்கு எடுத்து வைக்கவும் சரியாகவிருந்தது.*

*"இன்றைக்கு வேலை எப்படி ஏதாவது விசேசமா. நீ வழக்கம் போலில்லாமல் சோர்வாக இருக்கிறாய்?" என ஜேம்ஸ் பிரியாவிடம் கேட்டான்*

*"வேலை எப்பவும் போலே தான். உன் வேலை எப்படி?" என பிரியாவும் கேட்க இருவரும் அன்று தங்கள் வேலை இடத்தில் நடந்த விசயங்களைப் பற்றிக் கதைத்தனர். தனது மனதில் எழுந்த குழப்பத்தை ஜேம்சுக்குச் சொல்லுவோமா வேண்டாமா எனத் தடுமாறியது பிரியாவின் மனம். எனினும் அதைப் பற்றிப் பேசவில்லை.*

*கீர்த்திக்கு ஒரு வயதாகும் வரை முதலில் பிரியா ஆறு மாதமும் ஜேம்ஸ் ஆறு மாத காலமும் மகப்பேறு விடுப்பில் (லீவில்) இருந்தார்கள். இருவரும் மருத்துவர்கள். ஒரே மருத்துவமனையில் வேலை செய்ததால் அங்கே இருந்த குழந்தைகள் காப்பகத்தில் கீர்த்தியை விட்டு விட்டு வேலைக்குப் போவது மிகவும் வசதியாகவிருந்தது. கீர்த்திக்கு ஐந்து வயது ஆனதும் அவளைப் புனித அந்தோனியார் ஆரம்பப்பள்ளியில் சேர்த்திருந்தார்கள். பிரியா ஒரு மருத்துவ நிலையத்தில் பகுதி நேர பொது மருத்துவராக வேலை செய்வதால், கீர்த்தியைப் பள்ளிக்குக் கொண்டு போகவும் திரும்ப கூட்டிக் கொண்டு வரவும் கீர்த்தியின் தேவைகளைப் பார்த்துக் கொள்ளவும் வசதியாகவிருந்தது.*

*கீர்த்தி சந்தோசத்தோடும் ஆர்வத்தோடும் ஆரம்பப் பள்ளிக்குப் போய் வந்தாள். பள்ளியில் நடந்ததைப்பற்றி உற்சாகத்துடன் சொல்லுவாள். காரில் ஏறி வீடு வந்து சேரமட்டும் தன் புதிய சினேகிதர்களைப் பற்றி பிரியாவிடம் ஓயாமல் சொல்லுவாள். நாட்கள் வாரங்களாகி மாதங்களாகியது, இரண்டு வருடங்களும் உருண்டோடின.*

*ஆனால் சமீபத்தில் கீர்த்தி முன்னம் போல் இல்லாது சற்று அமைதியாகவே காரில் அமர்ந்திருந்தாள். பிரியாவிற்கு, கீர்த்தி தன்னை பார்க்கும் பார்வையில் பல கேள்விகள் இருப்பது போல் ஒரு உணர்வு ஏற்பட்டது. ஒரு நாள் கீர்த்தி உறங்கியபின், ஜேம்சும் பிரியாவும் இரவு உணவிற்க்குப் பின் கையில் வைன் கிளாசுடன், நிதானமாக இருந்து இருவரும் கதைத்துக் கொண்டிருந்தனர். அப்போது பிரியா தன் மனதில் எழுந்த சந்தேகத்தைப் பற்றிச் சொல்ல முடிவெடுத்து,*

*“ஜேம்ஸ்! கீர்த்தி என்னை இடை இடையே ஒரு கேள்விக்குறியோடு பார்க்கிற மாதிரி இருக்கிறது. இந்த ஆரம்பப் பள்ளிக்குப் போகத் தொடங்கியபின் தான் இது எல்லாம்.”*

*“பிரியா! கீர்த்தி ஒரு குழந்தை. அவளுக்கு வித்தியாசம் காட்டத் தெரியாது. நீ தான் அவள் அப்படிப் பார்க்கிறாள் இப்படிப் பார்க்கிறாள் எனக் கண்டதையும் நினைத்து கவலைப்படுகிறாய்,”*

என ஜேம்ஸ் பிரியாவிற்கு ஆறுதல் சொன்னான்.

ஆயினும் பிரியாவின் மனக்குழப்பம் தீரவில்லை. நாளுக்கு நாள் கீர்த்தி, பிரியாவிடம் ஒட்ட விருப்பப்படாதது போன்ற உணர்வுதான் ஏற்பட்டது. ஆரம்பப் பள்ளியிலிருந்து அழைத்து வந்து குளிப்பாட்டி இரவு உணவு சமைத்துக் கொடுத்து, படுக்கைக்குப் போடுவது எல்லாமே பிரியாதான். ஆனால் சமீபத்தில் அதைக் கீர்த்தி விரும்பாது, ஜேம்ஸ் தான் தன்னை குளிப்பாட்ட வேணும் என அடம்பிடித்தாள். வீட்டில் இருக்கும் போது சதா ஜேம்சோடு ஒட்டிக் கொண்டிருந்தாள். இப்படியே ஒரு வருடம் ஓடியது.

அன்று ஜேம்சுக்கு நேரத்தோடு வேலை முடிந்ததால் அவனே பள்ளிக்கூடம் முடிந்ததும் கீர்த்தியை காரில் ஏற்றிக் கொண்டு வீட்டை நோக்கு ஓட்டினான். பின்னால் குழந்தை இருக்கையில் அமர்ந்திருந்த கீர்த்தியிடம்,

“கீர்த்தி பிரின்சஸ்! இன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் என்ன எல்லாம் நடந்தது சொல்லு,” என காரின் நிழற் கண்ணாடியில் அவளைப் பார்த்தபடி கேட்டான்.

“டடி! என்னுடைய ஃப்ரெண்ட் நன்சியை அவளுடைய அம்மா தான் கூட்டிக்கொண்டு போக வருவா. என்னை எப்போதும் பள்ளியில் கொண்டு போய் விடுவதும் பிறகு கூட்டிக் கொண்டு வருவதும் பிரியா தானே.

“ஓம் பிரின்சஸ்.”

“இன்றைக்கு நீ வந்தது எனக்குச் சந்தோசமாக இருக்கு, ஒவ்வொரு நாளும் நீயே என்னைக் கூட்டிட்டுப் போக வந்தால் சந்தோசமாகவிருக்கும்,” என்றாள் கீர்த்தி.

“ஏன் கீர்த்தி உன்னைக் குளிக்கவார்ப்பதும் உனக்கு சாப்பாடு தீத்துவதும், ஏன் உனக்குக் காய்ச்சல் வந்து படுக்கையில் இருக்கும் போது நித்திரை முழிச்சு பார்த்துக் கொள்ளுவதும் பிரியா தனே,” என்றான் ஜேம்ஸ் ரோட்டைப் பார்த்து காரை ஓட்டியபடி.

*“அப்பா, எனக்கு அம்மா இல்லையா? நன்சியிண்ட அம்மா மாதிரி எனக்கு ஒரு அம்...மா.......... இல்லையா? அப்ப எனக்கு இரண்டு அப்பாவா?” எனக் கேட்டக் கீர்த்தியின் குரலில் ஏக்கம் தொனித்தது.*

*திடீரென கீர்த்தி இப்படிக் கேட்டதும் இதை எதிர்பாராத ஜேம்ஸ் திகைப்பில் நடு றோட்டில் பிரேக்கைப் போட்டு கிரீச்சென்ற சத்தத்தோடு காரை நிறுத்திவிட்டான். நல்லவேளை பின்னால் எந்த வாகனமும் வராததால் விபத்து ஏதும் ஆகாது தப்பிவிட்டான். உடனே ஜேம்ஸ் காரை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு, இறங்கிப்போய் கீர்த்தியை அணைத்து, கலங்கியிருந்த அவள் கண்களைத் துடைத்துவிட்டான்.*

*“கீர்த்தி டார்லிங் நீ வளர்ந்துவிட்டாய். உனக்கு ஏழு வயதாகி விட்டது. நீ பெரிய பிள்ளை. கேள்வி எல்லாம் கேட்கிறாய். வெரி குட்! கெட்டிக்காரி. வீட்டுக்குப் போனதும் உனக்கு எல்லாத்தையும் பிரியாவும் நானும் விளக்கிச் சொல்லுறோம்” என்றான்.*

*முகத்தில் குழப்பத்தோடு, குழந்தை கீர்த்தி, தலையை மட்டும் ஆட்டினாள்..*

*வீடு போய்ச் சேர்ந்ததும், ஜேம்ஸ், தானே கீர்த்தியைக் குளிக்க வார்த்துவிட்டான். பிரியா சமைத்துக் கொடுத்த மீன் கறியையும் சோற்றையும் கீர்த்தி விரும்பிச் சாப்பிட்டாள்.*

*பின்பு ஜேம்ஸ் ஒரு சோபாவில் அமர்ந்து, கீர்த்தியை தன் மடியில் இருத்திக்கொண்டு பக்கத்தில் பிரியாவும் நெருக்கமாக அமர்ந்திருக்க,*

*“கீர்த்திச் செல்லம்!, நீ இண்டைக்கு காரிலே எனக்கு அம்மா இல்லையா எனக் கேட்டாய் தானே. அதைப் பற்றி இப்போது கதைப்போமா? கேட்டான் ஜேம்ஸ்.*

*இருவரின் முகங்களைப் பார்த்துவிட்டு “சரி,” எனப் பதிலளித்தாள் கீர்த்தி.*

"செல்லம்! இந்த உலகத்தில் எல்லோரும் வளர்ந்து பெரியவர்களானதும் ஒரு துணையைத் தேடுவார்கள். அதிகமான ஆண்கள் பெண்களை விரும்பி கலியாணம் கட்டுவார்கள். ஆனால் சில ஆண்கள் ஆண்களை விரும்பி அவர்களைக் கல்யாணம் கட்டுவார்கள். அதேப் போல் சில பெண்கள் பெண்களை விரும்பி கல்யாணம் கட்டுவார்கள்.

கீர்த்திக் குஞ்சு, நானும் பிரியதர்சனும் பள்ளிக்கூடத்தில் ஒரே வகுப்பில் படிக்கும் போது ஃப்ரெண்ட்சானோம். பிறகு யூனிவசிட்டியிலும் ஒன்றாய் தான் படித்தோம். அங்கு தான் ஒருத்தரை ஒருத்தர் விரும்பி காதலிக்கத் தொடங்கினோம். பின்பு நாங்கள் இருவரும், கல்யாணமும் கட்டிக் கொண்டோம். உனக்கு அம்மா இல்லை. ஆனால் உன்னை மிகவும் நேசிக்கிற உன்னை லவ் பண்ணுகிற அப்பாக்கள் பிரியாவும் நானும் இருக்கிறோம்." என்றான் ஜேம்ஸ்.

"புரிகிறதா குஞ்சு நாங்கள் தான் உன் பெற்றோர்கள். நீ எங்கள் பிள்ளை. உன்னை நாங்கள் மிகவும் நேசிக்கிறோம்" என்று பிரியாவும் சொன்னான்.

"எங்களுக்கென்று ஒரு குழந்தை வேணுமென்று ஆசைப்பட்டோம். ஆனால் ஆண்களான நாங்கள் இருவரும் சேர்ந்து ஒரு குழந்தையை உருவாக்க முடியாது. எங்கள் வயிற்றில் பிள்ளை வளர முடியாது. ஒரு பெண்ணிண்ட வயித்திலே தான் குழந்தை வளர முடியும்," என்றான் ஜேம்ஸ்.

"ஆ அப்போ நான் எப்படி பிறந்தேன்?"

"அதற்கு சில நடைமுறைகள் இருக்கிறது. இதைப் பற்றி இன்னுமொரு நாள் கதைப்போம் செல்லம். இப்ப உண்ட படுக்கிற நேரம் வந்திட்டுது". என்று கீர்த்தியை அவள் படுக்கைக்குத் தூக்கிக் கொண்டு போனான் பிரியா.

ஒரு கிழமைக்குப் பின் மூவரும், ஒரு ஞாயிற்றுக் கிழமை மதியம் வீட்டின் பின் விறாந்தையில் அமர்ந்திருந்தார்கள். பிரியா கீர்த்தியை தன் மடியில் இருத்தி, அவளது தலையைக் கோதியபடி,

*“எங்களுடைய கீர்த்தி பிரின்சஸ் எப்படி எங்களுக்குக் கிடைத் தாள் என்பதைப் பற்றிக் கேட்க விருப்பமா? எனக் கேட்டான்.*

*“ஓம் ஓம்” என ஆவலோடு ஜேம்சினதும் பிரியாவினதும் முகத்தை ஆவலோடு பார்த்தாள் கீர்த்தி.*

*“கீர்த்திக் குஞ்சு நான் கேக் செய்வதை பார்த்திருக்கிறாய் தானே. ஏன் நீ கூட எனக்கு உதவி செய்திருக்கிறாய் இல்லையா?” எனக் கீர்த்தியின் நாடியை கையால் நிமிர்த்தியபடி கேட்டான் பிரியா.*

*“ஓம் ஒரு அழகான டெடி பெயார் கேக் செய்தோமே,” என்றாள் கீர்த்தி*

*“அப்படி கேக் செய்வதற்கு பட்டர், மா சீனி முட்டை எல்லாத்தையும் சேர்த்து ஒவனில் வைப்போமே. ஒரு மணித்தியாலத்தில் வெந்ததும் தானே வெளியே எடுப்போம்?”*

*“ஓ.....ம்” என பதிலளித்தாள் கீர்த்தி.*

*“அதைப் போல ஒரு குழந்தை உருவாக்க ஒரு பெண்ணின் முட்டையும், ஒரு ஆணின் விந்துவும், தேவை. ஆண்களாகிய எங்களுக்கு பிள்ளை உண்டாக்கிற முட்டையும், வயிற்றில் கர்ப்பப்பையும் இல்லாததால் எங்களால் உன்னை உருவாக்கிச் சுமக்கவும் முடியவில்லை. ஆகையால் நன்கொடையாக முட்டை வங்கியிலிருந்து ஒரு முட்டையும், ஜேம்சின் விந்துவையும் சேர்த்து டொக்டர்கள் ஒரு வாடகைத்தாயின் வயிற்றில் வைத்தார்கள். அந்த வாடகைத்தாயின் வயிற்றில் நீ பெரிசாக வளர்ந்து வர,...... டெடி பெயார் கேக் பேக் பண்ணின மாதிரி ஒரு மணித்தியாலம் இல்லை ஒன்பது மாதம் பொறுமையாகக் காத்திருந்தோம். எங்கள் பிரின்சஸ் நீ வெளியே வந்ததும் நாங்கள் இருவரும் மிகவும் மிகவும் சந்தோசப்பட்டோம். உன் அழகைப் பார்த்து சொக்கிப்போனோம். நாங்கள் உன்னைக் கட்டி அணைத்து...” என்றான் பிரியா.*

*“இதைப்போலேதான்!” எனச் சொன்ன ஜேம்சும் பிரியாவும் கீர்த்தியைக் கட்டி அணைத்து முத்தம் கொடுக்க முற்பட்டனர்.*

*“ஸ்டொப்!! ஸ்டோப்! இருவரும் வன் அட் ஏ டைம் தான் என்னைக் கொஞ்சலாம் பிளிஸ்!,” என இரு கைகளையும் சேர்த்துத் தட்டிக் கல கலவெனச் சிரித்தாள் கீர்த்தி.*

தமிழ் நாட்டின் செம்மலர் சஞ்சிகையில் நவம்பர் 2022 வெளியான சிறுகதை.

இலங்கையின் மறுமலர்ச்சி சஞ்சிகையின்
போட்டியில் 2022 தேர்வு செய்யபட்ட சிறுகதை.

கனடா, `பதிவுகள்` இணையத்திலும் ஜனவரி 2023 வெளிவந்தது.

# சுவர்ணபூமி

*சிட்னியின் சர்வதேச விமான நிலையத்திலிருந்து பாங்கொக் செல்லும் தாய்லாந்து ஏர்லைன்ஸ் விமானத்தில் என் மகனும் நானும் ஏறி இருக்கைகளில் அமர்ந்தோம். நானோ 'எல்லா தடங்கல்களையும் ஒருபடியாகக் கடந்து பயணத்தைத் தொடங்கிவிட்டேன், அப்பாடா!' என பெருமூச்சு விட்டேன். பக்கத்திலிருந்த என் எட்டு வயது மகனின் நெற்றியில் முத்தமிட்டு. "குகன் குஞ்சு, நாங்கள் இன்னும் பத்து மணித்தியாலத்தில் பாங்கொக் போய் இறங்கிவிடுவோம்."*

*"அம்மா அப்போது இரவு ஏழரை மணியாகிவிடுமே?" எனக் கேட்டான்.*

*"ஓமடா ஆனால் நீ மறந்திட்டியா, சிட்னியில் சூரியன் உதித்து மூன்று மணி நேரத்திற்குப் பின்தான் பாங்கொக்கில் சூரியன் உதிக்கும் ஆகையால் மாலை நாலரை மணியாகத் தான் இருக்கும்." என்றேன்.*

*விமானம் மேலே எழுந்து பறக்கவும் குகன் யன்னலின் ஊடாக வெளியே தெரிந்த காட்சிகளை இரசித்தபடி அமர்ந்திருந்தான். விமானப் பணிபெண் குகனுக்கு கலரிங்*

புத்தகமும், பென்சில்களும் கொடுத்தாள். அவன் ஆவலோடு கலர் பண்ணத் தொடங்கவும் என் இருக்கையைச் சாய்த்து அமர்ந்து கண்களை மூடிக் கொண்டேன். என் கடந்த கால வாழ்க்கை மனக்கண் முன் திரைப்படமாக ஓடியது.

பன்னிரண்டு வயதில் என் பெற்றோருடன் 1988ஆம் ஆண்டில் போரினால் பாதிக்கப்பட்டுச் சிதைந்த எமது தாய் நாடான சிறிலங்காவை விட்டு சகல வாய்ப்புகளும் நிறைந்த சிட்னி நகரத்திற்குக் குடிபெயர்ந்தோம். இங்கு பள்ளிக்கூடம் போகும் போது மேலே பறக்கும் வானூர்திகளிலிருந்து செல் அடிக்கிறார்கள் என உயிருக்குப் பயந்து பங்கர்களுக்குள் ஓடத் தேவையில்லை. நிம்மதியாகப் படிப்பிலே கவனம் செலுத்தக் கூடியதாகவிருந்தது. பள்ளிக்கூடத்தின் இறுதி ஆண்டுப் பரீட்சையில் உயர்ந்த மார்க்கோடு தேறியதால் எனக்கு நியுவ் சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வர்த்தகமும் நிதியும் படிக்க இடம் கிடைத்தது. நான்கு வருட முடிவில் தனிச்சிறப்புடன் தேறியதால் எனக்கு வெளிவிவகாரமும் வர்த்தகமும் துறை இலாகாவில் வேலையும் கிடைத்ததது. அங்கு வேலை செய்யும் போது அந்த இலாகாவின் பரிந்துரையினால் பகுதிநேரமாகச் சர்வகலாசாலையில் படித்து சர்வதேச உறவில் முதுகலைப் பட்டமும் பெற்று அதே இலாகாவில் பதவி உயர்வும் கிடைத்தது.

அப்போது எனக்கு இருபத்தைந்து வயது முடிந்திருந்தது. நான் பொது நிறமென்றாலும், மூக்கும் முழியுடனும், அழகாகத்தான் இருந்தேன். என் பெற்றோர், சிட்னியில் வசிக்கும் தங்களுக்குத் தெரிந்த, ரகுவரனை என் வருங்காலக் கணவராகத் தேர்ந்தெடுத்தார்கள். சாதகம், மற்றப் பொருத்தங்கள் பார்த்தபின் என்னையும் ரகுவரனையும் அறிமுகம் செய்து வைத்தார்கள். ரகுவரன் எ.எம்.பி என்ற பெரிய நிறுவனத்தில் கணக்காளராக இருந்தார், ஆறு அடி உயரமாகவும் நிறமாகவும் இருந்தார்

ஆறு மாதமாக நாங்கள் அடிக்கடி சந்தித்துப் பேசிப் பழகியதில் இருவருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடித்துக் கொண்டதால் எங்கள் திருமணம் இனிது நடந்தது. வாடைகைக்கு ஒரு

அபார்ட்மெண்ட்டை எடுத்துக் கொண்டு இருவரும் குடி புகுந்தோம்.

எங்கள் வாழ்க்கை சந்தோசமாக ஓடியது. சரியாக பத்து மாதத்தில் குகனும் பிறந்தான். ஒரு வருடம் பிள்ளைப் பேறு லீவில் இருந்தேன். பின்பு குகனை அம்மாவுடன் விட்டுவிட்டு வேலைக்குப் போனேன்.

ரகுவரன் எப்போதாவது கூட்டாளிகளோடு சேர்ந்து மது அருந்துவார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இப்போது தினமும் வேலை முடிந்ததும் கூட்டாளிகளோடு குடிப்பதற்குப் பப்புக்குப் போய் மது அருந்திவிட்டு இரவு பத்துப் பதினொரு மணிக்கு மேல் வீடு திரும்புவது வழமையாகியது. காலையில் எழுந்து வேலைக்குப் போக இயலாமல், லீவ் போடுவார். இதனால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். குடிப்பழக்கத்தை விடச் சொல்லி நானும் எல்லோரும் சொல்லிப் பார்த்தோம். ஆனால் அவர் கேட்கவில்லை. இது மட்டுமில்லை இவர் கசினோவுக்கும் சூதாடப் போவார். போக்கர் மெசினில் சூதாடிக் காசெல்லாம் இழந்து வீடு வந்து சேர்வார். மது வாங்கக் காசில்லாமல் என்னிடம் வந்து கேட்பார். நான் காசு கொடுக்க மறுத்தால் என்னை அடித்துத் துன்புறுத்துவார். இங்கே அவுஸ்திரேலியாவில் தானே டொமஸ்டிக் வயலன்ஸ் சட்டத்தின் கீழ் காவல் அதிகாரிகளிடம் புகார் கொடுக்கலாம். எனது பெற்றோர் அதைத்தான் செய்தார்கள். காவல் துறையினர் வீட்டுக்கே வந்து ரகுவரனிடம், ‘மேலும் வன்முறை செய்தால் கைது செய்யப்படுவார்,’ என எச்சரிக்கை கடிதம் கொடுத்தார்கள் ‘என்னால் அவருடன் இனிமேல் ஒன்றாக வாழ முடியாது,’ எனக் கூற, அபார்மண்ட் வாடகை நான் கட்டுவதால், ரகுவரனை வேறு வீட்டுக்குப் போகுமாறு கூறினார்கள், ரகுவரனும் தன் பெற்றோர் வீட்டிற்குப் போய்விட்டான்

ரகுவரனிடம் இணக்கமான விவாகரத்துக் கோரினேன். ரகுவரன் அதைத் தர மறுத்ததால் குடும்ப நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து ஒரு வருடத்திற்குப் பின்தான் விவாகரத்து கிடைத்தது. வேலையில்லாததாலும் குடிப்பழக்கத்தோடு

சூதாடுவதாலும் ரகுவரனால் நான்கு வயது மகனைப் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ள தகுதியற்றவர் என நீதிமன்றம் தீர்மானித்து, தாயான என்னிடம் குகனைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப் பட்டது. மாதத்தில் ஒரு நாள் பொது இடத்திலே குகனை, ரகுவரன் சந்திக்கலாம், என்றும் அப்போது நான் சற்றுத் தள்ளி இருந்து கண்காணிக்கலாம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

விவாகரத்துக்குப் பின்னும் நான் வேலைக்கும் போய் வரும் போது என்னிடம் காசு கேட்டுத் தொந்தரவு கொடுத்தார். ரகுவரனைப் பார்க்க பரிதாபமாகவிருந்ததால், முதலில் என் கைப்பையில் இருந்த காசைக் கொடுத்தேன். இப்படியே கொடுத்துக் கொண்டிருக்க முடியுமா?' ஆகையால் மறுத்து விட்டேன். 'காசு கொடுக்காவிட்டால் குகனைத் தூக்கிக்கொண்டுபோய் விடுவேன்,' என என்னை மிரட்டினான். காவல் துறையிடம் முறையிட்டேன். அவர்கள் "இப்படி உன் முன்னாள் மனைவியை மிரட்டினால் உன்னைக் கைது செய்ய வேண்டிவரும்," என எச்சரித்தனர்.

எனினும் வேலைக்குப் போகும் வழியில் என்னுடன் சுமுகமாகப் பேசி, நாங்கள் இருவரும் ஒன்றாய் சேர்ந்து வாழலாமா எனக் கேட்டான்.

அவருடைய இந்தத் தொந்தரவுகளைப் பொறுக்க முடியாமல் தாய்லாந்தின் அவுஸ்திரேலியா தூதரகத்தில் ஒரு வேலைக்கு விண்ணப்பித்தேன். வேலையும் கிடைத்து, இப்போது தாய்லாந்தின் தலை நகரமான பாங்கொக்கிற்கு என் மகனுடன் விமானத்தில் பறந்து கொண்டிருக்கிறேன். இந்தப் பயணத்தை மேற்கொள்வதற்கு நான் பட்ட கஷ்டம் அப்பப்பா!. முதலில் குகனுக்குக் கடவுச்சீட்டு எடுக்க வேண்டியிருந்தது. அதற்குக் குகனின் தந்தையின் கையொப்பம் வேண்டியிருந்தது. ரகுவரன் கையொப்பம் கொடுக்க மறுத்து விட்டார். ஆகையால் வக்கீல் மூலம் தான் ஒரு மாதம் கழித்து கையொப்பம் வைத்தார்.

இங்கு அவுஸ்திரேலியாவில் ஒரு பெற்றோர் மற்றப் பெற்றோரின் சம்மதம் அல்லது நீதிமன்றத்தின் உத்தரவு இல்லாமல்

*தங்கள் குழந்தையுடன் வேறு நாட்டிற்கு இடம்பெயரவோ வேலையாகவோ போக முடியாது. ஆகையால் எனது உத்தியோக நியமனமான கடிதத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து குகனை என்னுடன் தாய்லாந்துக்கு அழைத்துக்கொண்டு போக அனுமதி கோரினேன். அனுமதியும் கிடைத்தது, ஆனால் ஒரு வருடத்திற்கு ஒரு முறை குகனைச் சிட்னிக்குக் கூட்டிக் கொண்டு வந்து தந்தையுடன் சில பொழுதுகள் கழிக்க விட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி கிடைத்தது. இதற்குமே ஆறு மாதம் எடுத்தது.*

*இதற்குப் பின்தான் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடு எல்லாம் செய்து விமான நிலையம் வரை அப்பாவும் அம்மாவும் வந்து வழியனுப்பி விட்டார்கள். குடியேற்றப் பகுதியிலிருந்த அதிகாரியிடம் குகனை என்னுடன் வெளியூர் கூட்டிக் கொண்டு போகலாம் என்ற அனுமதியைக் காட்டினேன். அதை உள்ளே கொண்டு போனவன் அரை மணித்தியாலத்திற்கு வெளியே வரவில்லை. எங்களைத் தடுத்து நிறுத்தப் போகிறார்களோ? எனக்கு வியர்த்துக் கொட்டிவிட்டது. வெளியே வந்தவர் பார்ஸ்போர்ட்டுகளை ஸ்டாம்ப் பண்ணித் தந்தார். குகனும் நானும் ஃப்லைய்ட்டை தவற விட்டிடுவோமோ என கைப் பைகளை இழுத்துக் கொண்டு ஓடாத குறையாக போய் விமானத்தில் ஏறினோம்.*

★★★

*பக்கத்திலே அமர்ந்திருந்த என் மகன் குகனை அணைத்துக் கொஞ்சியபடி, ”செல்லம். எங்களுக்கு மதிய உணவு கொண்டு வரப் போகிறார்கள் போலிருக்கிறது,” எனவும் விமான பணிப்பெண் அவன் உணவை டிரே மேல் வைத்தாள். குகன், ”கபுங்கா கா,” எனத் தாய்லாந்து மொழியில் நன்றி சொல்லத் தாதியும் புன்னகைத்தபடி ஆங்கிலத்தில் நன்றி சொன்னாள். என்னுடைய உணவும் வரச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது,*

*“அம்மா பாங்கொக் ஏயர் போர்ட்டுக்கு என்ன பெயர்?” எனக் கேட்டான்.*

*''2006 ஆம் ஆண்டில் புதிதாகக் கட்டிய விமான நிலையத்தின் பெயர் சுவர்ணபூமி,'' என்றேன்.*

*"அம்மா! பூமி எங்கள் தமிழ் சொல்லுத்தானே?" எனக் கேட்டான்.*

*குகனுக்கு வீட்டில் தமிழ் கற்றுக் கொடுப்பதோடு சனிக் கிழமைகளிலும் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்புவேன். அவன் நன்றாகத் தமிழ் பேசுவான். இங்கு பாங்கொக்கில் நான்தான் இனி அவனுக்குத் தமிழ் படிப்பிப்பேன்.*

*"ஓமடா இதைக் கட்டியவர் தாய்லாந்தின் முன்னாள் மன்னன் இராமா IX. அவர் பெயர் பூமிபோல் அடுலியடெஜ், (Bhumibol Adulyadej). தனது பூமிபோல் பெயர், பௌத்த தங்க இராச்சியத்தைக் குறிப்பிடுவதால் சுவர்ணபூமி என்ற பெயரை ஏயர் போர்ட்டுக்கு வைத்திருக்கிறார். அது மட்டுமில்லை இன்று தாய்லாந்து பௌத்தர்கள் பெரும்பான்மையாகக் கொண்ட நாடாக இருந்தாலும் தாய்லாந்தின் கலாச்சாரம் மற்றும் சின்னங்களின் பல கூறுகளில் இந்து மதத்தின் தாக்கங்களையும் பாரம்பரியத்தையும் நாங்கள் இங்கு காணலாம்," என்றேன். குகன் "அப்படியா?" என்றான் எதோ எல்லாம் புரிந்ததுபோல்.*

*விமானம் தரை இறங்கியதும், எங்கள் கைப் பைகளை இழுத்துக்கொண்டு வெளியேறினோம். வாசலில் நின்ற ஏயர் ஹோஸ்டசர்கள் இரு கைகளையும் கூப்பி எனக்கு "சுவாடிகா" என்றும் குகனுக்கு "சுவாடிகிராப்" எனக் கூறி வழியனுப்பினார்கள். நாங்களும் "கப்புங்கா," என்று கூறிவிட்டு இறங்கினோம்.*

*குடி நுழைவையும் சுங்க இலாகாவையும் கடந்து எங்கள் பெட்டிகளை ரொலியில் வைத்துத் தள்ளிக்கொண்டு போனோம். கண்கள் விரிய பாங்கொக்கின் புதிய விமான நிலையத்தை இரசித்தபடி இருவரும் நடந்தோம். எங்கள் முன்னால் உயரத்திலிருந்த பிரமாண்டமான சிற்பத்தைப் பார்த்து இருவரும் வியந்துபோனோம். பாற்கடலில் இருந்து அமிர்தத்தைப் பெறுவதற்காக மந்திர மலையை மத்தாகவும், விஷ்ணு பகவான்*

ஆமை அவதாரமாக மலையைத் தாங்கி நிற்க, வாசுகி எனும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு ஒரு புறத்தில் தேவரும் மறுபுறத்தில் அரக்கரும் சேர்ந்து கடைவதைச் சித்தரிக்கும் சிற்பம் அது. மந்திர மலையின் மேல் தாமரைப் பூவின் நடுவில் விஷ்ணு பகவானின் அழகிய சிற்பம் அலங்கரித்தது. "அம்மா! இது என்ன சிற்பம்" எனக் கேட்ட குகன் குறுக்கும் நெடுக்குமாக ஓடி சிற்ப வேலையை இரசித்தான். குகனின் கையைப் பிடித்துக்கொண்டு எக்ஸ்லேட்டரில் ஏறி அருகில் போய்ப் பார்த்தோம். அந்நேரம் தாய் ஏயர் லைன்ஸ் குழுவினர் சிற்பத்துக்கு மலர்கள் வைத்து விஷ்ணு பகவானின் அருள் வேண்டி வணங்கி விட்டுப் போனார்கள். நாங்களும் வணங்கி விட்டு, நிலையத்தை விட்டு வெளியேறினோம்.

வெளியே தாய்லாந்தின் ஈரப்பதமான வெப்ப வானிலை எனக்குச் சிறீலங்காவை நினைவூட்டியது. அவுஸ்திரேலிய தூதரகத்திலிருந்து வண்டியுடன் ஒரு ஓட்டுநர், என் பெயர் கொண்ட பலகையோடு நின்றான். அவன் அருகே போய் "சுவாடிக் கராப், மதுபாஷினி," என்றேன். அவனும், "சுவாடி கா! யெஸ் யெஸ் என் பெயர் சக்டா," என ஆங்கிலத்தில் சொன்னான். எங்கள் ரொலியைச் சக்டா தள்ள நாங்கள் அவன் பின்னால் போய் காரில் ஏறினோம்..

குகனும் நானும் தங்குவதற்கு வாடகைக்கு எடுத்திருந்த அபார்மெண்ட் ஒரு பத்து மாடிக் கட்டிடத்தில், எட்டாவது மாடியிலிருந்தது அங்கே போய் இறங்கினதும். எங்களையும் எங்கள் பெட்டிகளையும் மின்தூக்கியில் ஏற்றி அபார்ட்மெண்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தான், சக்டா.

"நாளைக்கு வெள்ளிக்கிழமை உங்கள் இருவரையும் சர்வதேச பள்ளிக்கூடத்திற்கு அழைத்துக் கொண்டு போகுமாறு பணித்திருக்கிறார்கள். காலை ஒன்பது மணிக்கு வந்திடுவேன்," என விடை பெற்றான் சக்டா. தாய்லாந்து போவது என முடிவானதும் அவுஸ்திரேலியத் தூதரகமே குகனுக்கு பாங்கொக்கின் சர்வதேச பள்ளிக்கூடத்தில் நாலாம் வகுப்பில் இடம் முன் பதிவு செய்திருந்தார்கள்

*சக்டா அடுத்த நாள் காலை எங்கள் இருவரையும் காரில் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துப் போனான். முதலில் பள்ளிக்கூடத்தின் அதிபரைச் சந்தித்தோம். அவர் எங்களை அழைத்துக் கொண்டு போய் பள்ளிக்கூடத்தைச் சுற்றிக் காண்பித்து குகனின் வகுப்பு ஆசிரியரையும் அறிமுகம் செய்து வைத்தார். எங்களுக்கு அந்த பள்ளிக்கூடம் நனறாகப் பிடித்துக் கொண்டது.*

*"திங்கட்கிழமை சந்திப்போம்." என விடை பெற்றோம்.*

*பள்ளிக்கூடம் மதியம் மூன்று மணிக்கு முடிந்ததும் குகனை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து அவனுக்குச் சாப்பிட ஏதாவது கொடுத்து, பின் நான் வேலை முடிந்து வீடு திரும்பும் வரை குகனோடு கூட இருக்க ஒரு பெண்ணை தூதரகம் மூலம் ஒழுங்குபடுத்தியிருந்தேன். அந்தப் பெண்ணின் பெயர் அஞ்சலி. இந்தியப் பெண்ணோ என நினைத்தேன். ஆனால் வெள்ளிக்கிழமை எங்களை காண வந்தது ஒரு தாய்லாந்து பெண். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தாய்லாந்துக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு உண்டு என்பது தெரிந்ததே. அதன் தாக்கம் தான் இது.*

*திங்கட்கிழமை காலையில் குகனைப் பள்ளிக்கூடத்தில் இறக்கி விட்டு, பின்பு தூதரகத்தில் போய் இறங்கினேன். தலைமை தூதுவர் கிரிஸ் கேர்டிஸ் என்னை வரவேற்று,*

*"குட் மோர்னிங்! மதுபாஷினி. நீங்கள் தங்குமிடம், உங்கள் மகனின் பள்ளிக்கூடமும் பிடித்திருக்கா?" என ஆங்கிலத்தில் கேட்டார்.*

*"எல்லாம் பிடித்திருக்கு. நன்றி," என்றேன்.*

*நாட்கள் சந்தோசமாக ஓடியது. தூதரகத்தில் வேலை செய்தவர் கள் சிலர் எனது சிநேகிதர் ஆனார்கள். சனி ஞாயிறுகளில் அவர்களோடு சயனிக்கும் புத்தர் கோவில், மரகத புத்தர் எனப் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம்.*

*ஒரு நாள் எனது அபார்ட்மெண்ட் வாசற் கதவைத் திறக்கும் போது, பக்கத்து வாசலில் நின்ற பொலீஸ் சீருடை அணிந்தத்*

*தாய் மனிதர் என்னிடம் வந்து,*

*"சுவட்டி கா! என கைகளைக் கூப்பி வணங்கிவிட்டு. "என் பெயர் அரூண், பொலீஸ் இலாகாவில் இருக்கிறேன். நீங்கள்தான் இந்த அபார்மெண்ட்டுக்கு புதிதாகக் குடிவந்திருப்பவரா? சந்தித்ததில் சந்தோசம்," என்றான் ஆங்கிலத்தில்.*

*நானும் "ஓம், என் பெயர் மதுபாஷினி. இங்கு அவுஸ்திரேலிய தூதரகத்தில் வேலை செய்யிறேன்," என்றேன்.*

*"ஏதேனும் உதவி வேணுமென்றால் தயங்காமல் கேளுங்கள்," எனக் கூறி விடை பெற்றான். அதற்குப் பின் அரூணை மின்தூக்கியிலும், யூனிட் வாசலிலும் குகனுடன் பல தடவை சந்தித்தேன்.*

*வழக்கமாக அவுஸ்திரேலியாவில் வெள்ளிக் கிழமைகளில் கோவிலுக்குப் போவேன். இங்கு என் சக ஊழியரிடம் கேட்டதில், அருகாமையில் இருக்கும் மகா மாரியம்மன் சிறப்பு வாய்ந்த கோவில் என அறிந்தேன், அன்று வெள்ளிக்கிழமை வீடுத் திரும்பியதும் குகனுடன் கோவிலுக்குப் புறப்பட்டேன். அபார்ட்மெண்ட் கதவைப் பூட்டிக்கொண்டு திரும்பவும், தன் வாசற் கதவைப் பூட்டியபடி திரும்பிய அரூண்,*

*"நான் மாரியம்மன் கோவிலுக்கு போறேன். நீங்களும் என்னுடன் வரலாமே," எனக் கேட்டான்.*

*"நீங்கள் இந்துவா?"*

*"ஓம் நான் பிறப்பாலே இந்து"*

*"நாங்களும் மாரியம்மன் கோயிலுக்குப் போகத் தான் கிளம்பிக் கொண்டிருக்கிறோம்," என்றேன். அரூண் வெள்ளை உடை அணிந்து, அவன் சற்று மஞ்சளும் வெள்ளை நிற தோலுடன் மேவி வாரிய நேரான கருத்த தலை முடியுடன் வாட்டசாட்டமாக எனக்குத் தோற்றமளித்தான்.*

*அரூணின் பி.எம்.டபிலியு (BMW) காரின் முன் சீட்டில் நானும் பின் சீட்டில் குகனும் ஏறிக்கொண்டோம்.*

கார் நகரவும் "எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது." என்றேன்.

"ஏன்?"

"பௌத்த நாடான தாய்லாந்தில் வாழும் மக்கள் எல்லோரும் பௌத்தர்கள் என அனுமானித்து விட்டேன், மன்னியுங்கள்"

"நான் அடிக்கடி கோவிலுக்கு போவேன். பாங்கொக்கில், விஷ்னு கோவில், கணேஷா கோவில் இருக்கிறது. ஒரு நாளைக்கு அந்தக் கோவில்களுக்கு உங்ளை கூட்டிக் கொண்டு போறேன்," என்றான்

அரூணை அடிக்கடி சந்தித்தேன். அரூண் பாங்கொக்கின் பொலிஸ் இலகாவில் உயர் பதவியில் இருக்கிறான், அவனுக்கு இப்போது நாற்பத்தி இரண்டு வயது, அவன் மிகவும் நேசித்த மனைவி சரிதா ஒரு கார் விபத்தில் ஐந்து வருடத்திற்கு முன் இறந்து விட்டாள், அவளின் நினைவு இன்னும் அவன் மனதில் இருப்பது அவனுடன் பழகிய நாட்களில் தெரிந்துகொண்டேன். நானும் என் பிறந்த மண்ணைப் பற்றியும், அவுஸ்திரேலியாவிற்குப் புலம் பெயர்ந்தது, என் படிப்பு, திருமணம், விவாகரத்து எல்லாவற்றையும் மனம் திறந்து அரூணுக்குச் சொன்னேன். குகனுக்கும் அரூணை நன்றாகப் பிடித்திருந்தது. சனி ஞாயிறுகளில் அரூணுக்கு இலாகாவில் வேலை இல்லாவிட்டால் எங்கள் இருவரையும் பாங்கொக்கைச் சுற்றிப் பார்க்கக் கூட்டிக்கொண்டு போவான். நான் அப்பா அம்மாவோடு வாட்ஸ் அப்பில் கதைக்கும் போது, பக்கத்தில் அரூண் இருந்தால் அவர்கள் அரூணுடன் கதைப்பார்கள்.

நாளடைவில் எங்கள் நட்பு காதலாக மாறிக் கொண்டு வந்தது. இங்கு ரகுவரனின் தொந்தரவு இல்லாமல், அரூணின் நட்பும் அவனது உறவுகளோடும் நண்பர்களோடும் பிளங்குவது எனக்கு இந்த பாங்கொக் நகரம் சுவர்ணபூமியாகத் தோன்றியது.

நாங்கள் பாங்கொக்கு வந்து ஒரு வருடம் ஆகியிருந்தது. நான் நீதிமன்றம் விதித்த நிபந்தனையை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்திலிருந்தேன்.

*ஆகையால் குகனின் பள்ளிக்கூட விடுமுறையுடன் நானும் மூன்று கிழமை லீவ் எடுத்துக் கொண்டு சிட்னி புறப்பட்டேன். அரூண் விமான நிலையம் வரை வந்து வழி அனுப்பி விட்டான்.*

*அங்கு கோர்ட்டின் நிபந்தனைப் படி எனது மேற்பார்வையில், ஒரு நாலு ஐந்து நாட்கள் பகல் பொழுதில் மட்டும் ரகுவரனுடன் குகனை இருக்க விட்டேன்.*

*மூன்று கிழமை முடியவும் குகனும் நானும் ஆவலோடு பாங்கொக் திரும்பினோம். மேலும் மூன்று மாதம் போயிற்று. ஒருநாள் வேலை முடிந்து என் அபார்ட்மெண்ட் வாசலை அணுகவும் திடீரென என் சுவர்ணபூமிக்குள் பூதம் நுழைந்தது போல் ரகுவரன் வந்து நின்றான்.*

*“என் மகனைப் பார்க்க வேணும்,” என்றவன், அபார்மெண்ட்டுக்குள் நுளையப் பார்த்தான். நான் கதவைத் திறக்கவில்லை.*

*“எனக்கு $20,000 ஆயிரம் டொலர் தா அல்லது நான் குகனைக் கொண்டு போய் விடுவேன்,” என மிரட்டினான்.*

*“இப்படி திடீரென வந்து கேட்டால் நான் எப்படிப் பணம் கொடுக்க முடியும். இரண்டு நாள் கழித்து வா,” எனச் சொல்லி அவனை அனுப்பிவிட்டேன்.*

*அன்று இரவே அரூணின் அபார்ட்மெண்ட் கதவைத் தட்டி ரகுவரன் வந்ததையும் அவன் அச்சுறுத்தலையும் சொன்னேன்.*

*உடனே அரூண், “காலையில் நான் வேலைசெய்யும் அம்ருவக் சித்தானிக்கு (பொலீஸ் நிலையம்) உங்களை அழைத்துக் கொண்டு போறேன். அங்கே உங்கள் முன்னாள் கணவர் காசு கொடு அல்லது, பிள்ளையைத் தூக்கிக் கொண்டு போய் விடுவேன் என மிரட்டுகிறார் என்ற புகாரோடு அவன் போட்டோவையும் குடுங்கோ. நானே இந்த கேசை எடுத்து நடத்துவேன்,” என்றான் அரூண்.*

*அடுத்த நாள் காலையில் குகனைப் பள்ளிக்கூடத்தில் இறக்கி விட்டு அரூணுடன் பொலீஸ் நிலையத்திற்குப் போய், அவர்*

சொன்னது போலப் புகாரைக் கொடுத்துவிட்டு, வேலைக்குப் போனேன்.

அன்று மதியம் என் மொபைலுக்கு அஞ்சலியிடம் இருந்து அழைப்பு வந்தது. "மம் குகனை பள்ளிக்கூடத்திலிருந்து கூட்டிக் கொண்டு வரப் போனால் அவனைக் காணவில்லை," என்றாள் பதட்டத்துடன்.

நான் ஏங்கிப் போனேன், உடனே பள்ளிக்கூட அதிபருடன் தொடர்புகொண்டு விசயத்தைச் சொல்லி குகனைத் தேடும்படி கேட்டுக்கொண்டேன். என் மேல் அதிகாரியிடமும் விசயத்தைச் சொல்லிவிட்டு, பள்ளிக்கூடத்தில் போய் இறங்கினேன். என்னைக் கண்டதும் பள்ளிக்கூட அதிபரும் குகனின் ஆசிரியரும் ஓடிவந்து, "குகன் கடைசிப் பாட நேரத்தில் ரொய்லட்டுக்கு போனவன், திரும்பிவரவில்லை", என்று, சொன்னார்கள்.

மிரட்டியபடி ரகுவரன் தான் குகனைக் கடத்திக் கொண்டு போயிருக்க வேணும் என முடிவெடுத்து, உடனேயே அரூணை அவர் மொபைலில் அழைத்து விசயத்தைச் சொன்னேன்.

"மது! கவலைப்பட வேண்டாம் அந்தக் கயவனைப் பிடித்து விடலாம். குகனைப் பத்திரமாக உன்னிடம் கொண்டு வந்து சேர்ப்பது என் பொறுப்பு. நீங்கள் வீட்டுக்குப் போங்கோ எங்கள் தாய்லாந்து டம்ருவட் (பொலிஸ்) அவனை தப்ப விடமாட்டுது," என்றான் குரலில் கண்டிப்புடன்.

தொடர்ந்து, "ரகுவரன் எந்த ஹோட்டலில் தங்கியிருக்கிறான் என குடிவரவு இலகா மூலம் அறிந்து வைத்திருக்கிறோம் ஆகையால் இன்னும் ஒரு இரண்டு மணித்தியாலத்திற்குள் குகனை மீட்டு, பத்திரமாக உங்களிடம் கொண்டு வந்து சேர்ப்போம்!" அவனது வார்த்தைகள் எனக்கு தைரியத்தையும் ஆறுதலையும் கொடுத்தது. அப்பார்மெண்டுக்குப் போய் வாசலைப் பார்த்தபடி காத்திருந்தேன்.

சொன்னபடி இரண்டு மணித்தியாலத்திற்குள் அரூணே போலீஸ் காரில் சைரன் ஒலிக்க குகனைப் பத்திரமாக என்னிடம் கொண்டு வந்து சேர்த்தார். அழுதபடி வந்த என் மகனைச்

சந்தோசத்தோடு கண்ணீர் வடிய மார்போடு அணைத்து கன்னத்தில் முத்தமிட்டேன். பக்கத்தில் நின்ற அரூணுக்கு நன்றி சொன்னதோடு அவரையும் அணைத்துக் கொண்டேன்.

ரகுவரனுக்குக் குகனை தன்னுடன் வைத்திருக்க உரிமை இல்லாத பட்சத்தில், குகனைக் கடத்தி, அவுஸ்திரேலிய நீதிமன்றம் நிபந்தனையை மீறிய குற்றத்திற்காகத் தாய்லாந்து காவல் துறை அவனைக் கைது செய்தது. அவுஸ்திரேலிய கோர்ட்டின் தீர்ப்பை மீறியதால் ரகுவரனை அந்த நாட்டின் நீதிமன்றத்தில்தான் விசாரிக்க வேண்டும் என்பதால், சிட்னி காவல்துறையிடம் ஒப்படைத்தார்கள்.

அங்கு வழக்கறிஞர் என் சார்பாக வாதாடி இனிமேல் ரகுவரனுக்கு தன் மகனைப் பார்க்கவோ அல்லது ஒரு பொழுதேனும் சேர்ந்து இருக்க முடியாது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும் நீதிமன்ற உத்தரவை மீறியதோடு குகனைக் கடத்திய குற்றத்திற்காகவும் ரகுவரனுக்கு நான்கு வருடம் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

குகனும் நானும் எங்களைக் காத்த வீரன் அரூணும் அவன் வாழும் சுவர்ணபூமியுயே எங்களது வாழுமிடமும் உலகமும் என முடிவெடுத்தோம்.

பெப்ரவரி மாத 2024 கணையாழி சஞ்சிகையில் வெளிவந்த சிறுகதை

# உங்கள் வாழ்வு நீள

**வி**டியற்காலை மேற்கு சிட்னியின் கொண்கோர்ட் மருத்துவமனையிலிருந்து, தந்தையின் அலைபேசிக்குத் தொடர்பு கொண்ட மாதினி, "அப்பா........! அ...ம்.....மா எங்களை விட்டுட்டு போய்விட்டா," என்றவள் தேம்பித் தேம்பி அழுதாள்.

மறுமுனையில் அவள் தந்தை சிவகுமார், நிதானமாக எந்தவித உணர்ச்சியுமில்லாமல், "உன் அம்மாவுக்குச் செய்ய வேண்டிய கடைசிக் காரியங்களைச் செய்ய உன்னட்ட காசு இருக்குமோ? இல்லாவிட்டால் சொல்லு, நான் தரலாம். எனக்கும் கொஞ்சம் கஷ்டம்தான், என்....றாலும். நீ பிறகு திருப்பித்தருவாய் தானே?" எந்தவித உணர்வோ கவலையோ இல்லாத அலுவலக ரீதியான பதில் தான் அவளது தந்தையிடமிருந்து வந்தது.

அம்மா திடீரென எப்படி இறந்தா? என தந்தை விசாரிப்பாரென ஆவலோடு எதிர்பார்த்தாள் மாதினி. மேலும் அப்பா அம்மாவைப் பார்க்க வந்தால், தாயின் இழப்பை அவர் தோள் மேல் சாய்ந்து அழுது தீர்க்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அம்மா எப்படி இறந்தா? எதனால்? எனக் கரிசனையோடு விசாரிக்காதவர் எப்படிப் பார்க்க வருவார். இப்படியான 'கல் நெஞ்சக்காரனா என் அப்பா?' என மனதுக்குள் வருந்தி ஆதங்கப்பட்டாள் மாதினி.

*மாதினிக்குப் பன்னிரண்டோ பதின்மூன்று வயதாக இருந்தபோது அவளிடம், அவள் தாய் ரேவதி மனம் திறந்து தன் இளம் வயதுக் காதலையும், அவளது இன்பமான மணவாழ்க்கையும் பின்பு ஏற்பட்ட சோக வாழ்க்கையையும் பற்றிச் சொன்ன கதைகள் இப்போது மாதினிக்கு நினைவு வந்தது.*

★★★

*மாதினியின் தாய் ரேவதி தன் பதின்ம வயது முதல் மச்சான் சிவகுமாரைத் தன் வருங்காலக் கணவராகவே நினைத்து நேசித்து வந்தாள். அவளுக்கு தன் மச்சான் சிவகுமார் மேல் கொள்ளை பிரியம். அவனை அவள் செல்லமாகக் குமார் என அழைத்தாள். ரேவதியின் வீட்டில் உள்ளோரும் சிவகுமார் வீட்டாரும் இருவரையும் இணைத்துப் பேசி கேலிப் பண்ணுவார்கள். இதைக் கேட்டு ரேவதி உள்ளூற சந்தோசப் படுவாள். ஆனால் வெளியில் தனக்குப் பிடிக்காதது போல் பாசாங்கு செய்வாள்.*

*சிவகுமார் குடும்பம் கொழும்பிலும் ரேவதி குடும்பம் யாழ்ப்பாணத்திலும் வாழ்ந்து வந்தார்கள். பள்ளிக்கூட விடுதலை நாட்களுக்கு அவள் மச்சான் குடும்பத்தார் எல்லோரும் யாழ்ப்பாணம் வந்து அவர்கள் வீட்டில் தங்குவார்கள். மறு விடுதலைக்கு ரேவதி குடும்பம் கொழும்புக்குப் போய் சிவகுமார் வீட்டில் தங்குவார்கள். இரு குடும்பமும் பள்ளிக்கூட விடுதலை நாட்களை இப்படியாக ஒன்றாகக் கூடி மிகவும் சந்தோசமாகக் களிப்பார்கள்.*

*சிவக்குமார் பல்கலைக்கழகத்தில் கணக்காளராகப் பட்டம் பெற்றவுடனே அவருக்கு ஒரு நல்ல வேலையும் கிடைத்தது. இரு குடும்பத்தாரின் ஆசியுடனும் சுற்றத்தாரின் வாழ்த்துகளுடனும் யாழ்ப்பாணத்தில் சிவகுமாருக்கும் ரேவதிக்கும் திருமணம் இனிது நடந்தேறியது. அன்று ரேவதி சந்தோசத்தின் உச்சியில் நின்றாள்.*

அவர்கள் இல்லற வாழ்க்கையை சந்தோசமாகக் கொழும்பில் ஆரம்பித்தார்கள். ஒரு வருடத்தில் மாதினியும் பிறந்தாள். மாதினிக்கு நான்கு வயதாக இருந்தபோது சிறீலங்காவின் உள் நாட்டுப் போரினால் தங்கள் எதிர்கால வேலை வாய்ப்பை பாதிக்கக் கூடும் என சிவக்குமார் நினைத்தான். ஆகையால் அவுஸ்திரேலியாவிற்குப் பொருளாதார திறன் இடப் பெயர்வின் கீழ் விண்ணப்பித்தான். அவனது விண்ணப்பம் ஏற்கப்பட்டதால் மூவரும் சிட்னி நகரத்திற்குக் குடிப் பெயர்ந்தார்கள்.

சிவக்குமார் படிப்பிலும் வேலையிலும் மிகவும் திறமைசாலி. சிட்னிக்கு வந்திறங்கிய இரண்டு மாதத்திற்குள் நல்ல நிறுவனத்தில் உயர்ந்த சம்பளத்துடன் வேலையும் கிடைத்தது. மூவரும் நான்கு ஐந்து வருடங்கள் மிகவும் சந்தோசமாக சிட்னியில் வாழ்ந்தார்கள். ஆனால் யார் கண் பட்டதோ தெரியவில்லை அவர்கள் சந்தோசம் நிலைக்கவில்லை.

மாதினிக்குப் பத்து வயதாக இருக்கும் போது தான், ரேவதி, சிவகுமாரின் நடவடிக்கையில் ஒரு மாற்றத்தைக் கவனித்தாள். வழமையாக வேலை முடிந்து இரவு ஏழு மணிக்கிடையில் வீடு வந்து சேர்ந்து விடுவான் சிவகுமார். ஆனால் இப்போது வேலை முடிந்து இரவு பத்து மணிக்கு மேல் தான் வீடு திரும்புவான். வெள்ளிக்கிழமைகளில் வேலைக்கு போனால் ஞாயிற்றுக்கிழமை மாலை தான் வீடு திரும்புவான். சிவகுமாரின் கைபேசிக்கு ரேவதி தொடர்புக் கொண்டால் எடுக்கமாட்டான். அப்படி எடுத்தாலும் சரியான வேலை, ஓவர் டைம் வேலை செய்கிறேன் என்பான். இப்படியே பல மாதங்கள் கடந்து போயிற்று. இப்போது இரவுகளில், சிவகுமார் தானும் ரேவதியும் உறங்கும் படுக்கை அறையில் ரேவதியுடன் உறங்காமல் மகள் மாதினியின் அறையில் போய் படுத்துக் கொண்டு அவளை ரேவதியின் அறைக்கு அனுப்பிவிடுவான்.

ரேவதியோ கணவர் சிவகுமாரிடம், “என்னிடம் என்ன குறை என்று சொல்லுங்கோ. நான் என்னைத் திருத்திக் கொள்ளுறேன். என்னை இப்படித் தள்ளி வைத்திடாதேங்கோ,” என்று பல முறை கேட்டிருக்கிறாள். ஆனால் அதற்கு சிவகுமாரிடமிருந்து பதிலே வருவதில்லை.

*மனைவி ரேவதி என்ன செய்தாலும் அதில் ஒரு குறை கண்டு பிடிப்பான் சிவகுமார். ரேவதியின் சமையலை மெச்சி மெச்சிச் சாப்பிட்ட கணவர் இப்போது அவள் சமையலில் குறை கண்டான். சுருங்கச் சொன்னால் சிவகுமாரின் இந்த மாற்றம் வெட்ட வெளிச்சமாகவே இருந்தது. தந்தையின் இந்த நடவடிக்கைகள் மாதினியையும் பாதிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. ரேவதியின் குடும்ப நண்பர்கள் பேச்சு வாக்கில் சிவகுமாரை ஒரு அழகான வெள்ளைக்கார பெண்ணோடு அடிக்கடி சிட்னி சிட்டியில் பார்த்ததாகவும் சொன்னார்கள்.*

*இறுதியில் சிவகுமார் ரேவதியிடம் நேராகவே, "எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை, நான் அமீலியா என்ற பெண்ணை காதலிக்கிறேன். நான் வேலை செய்யும் கம்பனியில் தான் அவளும் வேலை செய்கிறாள். எங்கள் இருவருக்கும் நாலு வருடத்திற்கு மேல் பழக்கம். எனக்கு உன்னிடமிருந்து விவாகரத்து வேணும். விவாகரத்திற்குப் பின் அவளைத் தான் கல்யாணம் கட்டப்போறேன்," எனச் சொன்னான்.*

*தன் கணவர் சிவகுமார் தான் தன் உலகம், தன் வாழ்க்கை என நம்பி இருந்த, ரேவதி இதைக் கேட்டதும் துடி துடித்துப் போனாள். தன் ஆசை மச்சான் தன்னை ஒதுக்கி விட்டு வேறு ஒரு பெண்ணை மணக்கப் போகிறார் என்ற உண்மையை அவள் மனம் ஏற்றுக் கொள்ள முடியாமல் துடித்தது.*

*"ரேவதி உன்னை நிலைக்கண்ணாடியில் ஒரு முறை பார்த்துவிட்டு இந்த போட்டோவையும் பார்?" என அவனும் அமீலாவும் சோடியாக எடுத்தப் போட்டோவைக் காட்டினான், சிவகுமார்.*

*போட்டோவில் சினிமா நடிகர் ஜெயம் ரவி சாயலோடு கம்பீரமாக சிவகுமாரும், பக்கத்தில் கோயில் சிலையின் உடற்கட்டுடன் தக தக என்ற சிவந்த நிறத்துடன் வசீகர அழகுடனும் அமீலாவும் நின்றனர். ரேவதி தன் தோற்றத்தையும் ஒரு நிமிசம் தன் மனக்கண்ணில் பார்த்தாள். அவளால் அமீலாவுடன் போட்டி போட முடியாது என்பது புரிந்துவிட்டது.*

*ரேவதிக்குத் தனது ஆசை மச்சான் குமார் என்றும் சந்தோசமாக வாழ வேண்டும் என்பதே அவள் விருப்பம். ஆகையால்*

மச்சானுக்கு என்னுடன் வாழ விருப்பமில்லாத போது அவர் விரும்பும் பெண்ணை மணந்து அவராவது சந்தோசமான இல்லற வாழ்க்கை வாழட்டும் எனப் பலதையும் யோசித்தவள், விவாகரத்துக்கு ஒத்துக் கொண்டாள். இங்கு தானே சிட்னியில் இருதரப்பினரும் சம்மதித்தால் குடும்ப நீதிமன்றத்திலே இழுபறி படாமல் விவாகரத்துக் கிடைத்துவிடும்.

ரேவதியினதும் சிவகுமாரினதும் விவாகரத்து நடந்தபோது மாதினிக்கு பத்து வயது இருக்கும். விவாகரத்தின் தீர்ப்பின்படி மாதினி தாயுடன் ஒரு கிழமையும், தந்தையோடும் ஒரு கிழமையுமாக மாறி மாறி இருக்கலாம். மேலும் வேலைக்குப் போகாத ரேவதிக்கு வருமானம் இல்லாததால், அவுஸ்திரேலியாவின் குடும்பச் சட்டத்தின் கீழ் முன்னாள் மனைவி ரேவதிக்கு, சிவகுமாரின் வருமானத்திற்கு ஏற்ப ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அவர்கள் குடியிருந்த சொந்த வீடும் நீதிமன்ற ஆணையின் படி ரேவதிக்குக் கொடுக்கப்பட்டது.

அதன் பின் சிவகுமார் தான் விரும்பிய இத்தாலி நாட்டை பூர்வீகமாகக் கொண்ட அமீலியாவை மணந்தான். வடக்கு சிட்னியிலிருந்த அமீலியாவின் பல மில்லியன் டாலர் பெறுமதி யான அழகான வீட்டில் அவளுடன் வாழச் சென்று விட்டான்.

விவாகரத்திற்குப் பின் ரேவதி நொடிந்து போனாள். சிவகுமார் தான் தன் மூச்சு, உலகம் என நினைத்திருந்தவளின் இதயத்தில் ஒரு பெரிய வெற்றிடமே ஏற்பட்டது. அவளைப் பொறுத்தவரையில் அது ஒரு போதும் நிரப்ப முடியாத வெற்றிடம். அவள் மன நிலைமையைப் பார்த்த அவளது நண்பர்கள்,

“நீ வீட்டிலே இருந்து உன் இழப்பை நினைத்துக் கொண்டு வருந்தாமல் ஒரு பகுதிநேர வேலைக்குப் போனால் உன் கவலையைச் சிறிதளவாவது மறக்கலாம்,” என அவளது நண்பர்கள் ஆலோசனை சொன்னார்கள். ரேவதியும் தனக்கும் மன நிம்மதியாக இருக்க உதவும் என ஒரு தமிழ் உணவகத்தில் பகுதி நேர வேலைக்குப் போய் வந்தாள்.

*மாதினிக்கு தந்தையின் புது வீட்டில் எல்லா வசதிகளும் இருந்தும், அவள் எதிர்பார்த்த அன்பும் ஆதரவும் அவர்களிடமிருந்து கிடைக்கவில்லை. தந்தையின் புது மனைவி அமீலாவுக்கும் மாதினிக்கும் அவ்வளவாக ஒத்துப் போகவில்லை. ஆகையால் மாதினிக்கு பன்னிரண்டு வயதானதும் தந்தையோடு ஒரு வாரம் மாறித் தங்குவதைத் தவிர்த்து தாயோடவே இருந்துவிட்டாள். சிவகுமாரும் மகளின் உறவைப் பெரிதாகத் தேடாத படியால், மாதினி தாயோடவே இருப்பது அவனுக்கு ஒரு இழப்பாகவே தெரியவில்லை. சனிக்கிழமைகளில் அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் மாதினி தந்தையின் வீட்டிற்குச் சென்று ஒரு பகல் பொழுது அவர்களோடு இருந்துவிட்டு வருவாள்.*

*இப்படியே அவர்கள் வாழ்க்கை எந்த திருப்பங்களும் இல்லாமல் ஆறு வருடம் ஓடியது. மாதினிக்கு சிட்னி பல்கலைக்கழகத்தில் வர்த்தகமும் கணக்கியலும் படிக்க இடம் கிடைத்தது. மிகவும் சந்தோசமாக மேற்படிப்பைப் படித்துக் கொண்டிருந்தாள். அன்று வழக்கம் போல் வார இறுதியில் தந்தை சிவகுமாரைப் பார்க்க அவன் வீட்டிற்குப் போனாள். வீடு பூட்டியிருந்தது. 'சிவகுமாருக்குச் சிறுநீரக வியாதி முற்றி மயங்கியவரைப் பக்கத்தில் இருக்கும் ராயால் நார்த்ஷோர் மருத்துவமனைக்கு அம்புயுலன்சில் கொண்டு போயிருக்கிறார்கள்', எனப் பக்கத்து வீட்டில் குடியிருந்த வெள்ளைக்காரப் பெண் சொன்னாள். இந்தச் செய்தி மாதினிக்கு அதிர்ச்சியாகவிருந்தது.*

*உடனே அப்பாவுக்கு ஏதோ என்னவோ எனக் கவலைப்பட்டுக் கொண்டு பஸ்ஸில் ஏறி அவரைச் சேர்த்திருந்த மருத்துவமனையில் போய்ப் பார்த்தாள். தந்தைக்குச் சிகிச்சை செய்யும் வைத்திய நிபுணரையும் சந்தித்து தந்தையின் நிலைமையைக் கேட்டறிந்தாள்.*

*"ஒரு வருடத்திற்கு மேல் உங்கள் அப்பா என்னிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டுதான் இருந்திருக்கிறார். அவர் அளவுக்கு மிஞ்சி கட்டுப்பாடில்லாமல் குடித்ததாலும், அவரின் நீரழிவு நோயும் கட்டுப்பாட்டில் இல்லாததாலும் இரண்டு கிட்னியும் அதாவது அவரது சிறுநீரகங்கள் தளர்வுற்றுப் பழுதாகிச் சரியாக இயங்காமலிருக்கிறது. ஒரு சிறுநீரகத்தையாவது மாற்று அறுவை*

சிகிச்சை செய்தால் தான் அவர் இன்னும் பல வருடங்கள் சாதாரண வாழ்க்கை வாழ முடியும். இவ்வளவு நாளும், நாங்கள் அவருக்கு டயலிசிஸ் கொடுப்பதால் இப்படியாவது இருக்கிறார். இப்படியே விட்டால் அவர் உயிருக்கு ஆபத்து. நாங்களும் அவருடைய கிட்னியோடு ஒத்துப்போகிற, இறந்த உறுப்பு தானம் செய்தவர்களின் மாற்று கிட்னி தேடிக் கொண்டிருக்கிறோம், ஆனால் அவர் உடம்போடு ஒத்துப்போகிற கிட்னி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அவருடைய உறவினர்கள் யாரேனும் கிட்னி கொடுக்க முன்வந்தால், அது இவருடைய கிட்னியோடு ஒத்துப் போனால் தான் அவரைக் காப்பற்ற முடியும்." என்றார் ஒரே மூச்சாக, சிறுநீரக நிபுணர்.

நிபுணர் கூறியதை மாதினி அப்படியே தாய் ரேவதியிடம் ஒப்புவித்தாள். இதைக் கேட்டதும் தாய் ரேவதி துடிதுடித்துப் போனாள். ஆனால் அதை மகள் மாதினிக்கு வெளியே காட்டவில்லை. அடுத்த நாளே மாதினியிடமும் எவரிடமும் சொல்லாது சிவகுமார் இருந்த மருத்துவமனைக்குப் போனாள். அங்கு தான் சிவகுமாரனின் சொந்தக்காரர் என்றும், அவருடைய மகள் சொல்லித்தான் வந்ததாகவும் தன்னுடைய சிறுநீரகம் ஒத்துக் கொண்டால் அதை சிவகுமாருக்குத் தானமாகக் கொடுக்க தயார் எனவும், கூறினாள்.

அன்றே வைத்தியர்கள் சிவகுமாரின் இரத்தத்தோடும் உடல் திசுக்களோடும் ரேவதியினது இரத்தமும் திசுக்களும் ஒத்துப்போகிறதா எனச் சோதித்து பார்த்தனர். ரேவதியின் சொந்தத் தாய் மாமனின் மகன் தானே சிவகுமார். ஆகையால் அவரின் இரத்தத்தோடும் உடல் திசுக்களோடும் ரேவதியினதும் ஒத்துப்போயிற்று. ரேவதி, தான் சிவகுமாரின் முன்னாள் மனைவி என்ற உண்மையை மறைத்து, தனது நடுப் பெயரான வாணியையும் தனது தந்தையின் பெயரான நாகராஜனையும் கொடுத்தாள். அன்றே மாற்று அறுவை சிகிச்சை செய்யும் நாளும் குறிக்கப்பட்டது.

அன்று மாலை மகள் மாதினி பல்கலைக்கழகத்தில் இருந்து வீடு திரும்பியதும் ரேவதி தன் சிறுநீரகத்தை தானம் செய்ய

*முடிவெடுத்திருப்பதை அவளுக்குத் தெரியப்படுத்தினாள். தாயின் முடிவைக் கேட்டதும் மாதினி துடித்துப் போனாள். ”அம்மா இதனால் உங்கள் உடம்புக்குப் பாதிப்புகள் வரலாமே? நான் இதற்கு ஒத்துக் கொள்ள மாட்டேன். வேண்டாம்! வேண்டாம் அம்மா!” எனக் கெஞ்சிப் பார்த்தாள் மாதினி.*

*ஆனால் ரேவதி தான் எடுத்த முடிவிலிருந்து பின்வாங்க மறுத்துவிட்டாள். சொன்ன திகதியில் ரேவதி தனது சிறுநீரகத்தை தான் நேசிக்கும் குமாருக்கு தானமாகத் தாரை வார்த்துக் கொடுத்தாள்.*

*அதற்குப் பின் ரேவதி சுகமாக எந்தப் பாதிப்பும் இல்லாமல் ஐந்து வருடம் வாழ்ந்தாள். ஆனால் விதி புற்று நோயாக அவளது ஒற்றை சிறுநீரகத்தைத் தாக்கியது. தன்னைக் கவனிக்காமல் மற்றவர்களுக்காக வாழ்ந்தவளது சிறுநீரகத்தின் புற்று நோய் பக்கத்திலிருந்த மற்ற உடல் உறுப்புகளுக்கும் பரவியதால் ரேவதியை வைத்தியரால் எவ்வளவோ முயன்றும் காப்பாற்ற முடியவில்லை.*

★★★

*ரேவதியின் இறுதிக் காரியங்கள் நடக்கவிருந்த நாளன்று விடியற் காலையில் சிவகுமார், மாதினியின் தொலைபேசிக்குத் தொடர்பு கொண்டு, “மகள் மாதினி, அம்மா தன் ஒரு கிட்னியை எனக்கு தானமாகக் கொடுத்ததை நீ எனக்குச் சொல்லவே இல்லையே! நேற்று எனது கிட்னி நிபுணரிடம் செக்கப்பிற்கு போயிருந்தேன். அப்போது நிபுணர் என்னிடம்,*

*‘உங்களது உடம்புக்கு ஒத்துப்போகிற கிட்னி கிடையாமல் தவித்தபோது, வாணி நாகராஜன் என்ற உங்கள் சொந்தக்காரப் பெண்ணுடைய கிட்னிதான் ஒத்துப்போனது, அதற்குப் பின் அவருடைய கிட்னியில் புற்று நோய் வந்து இறந்து போனார். நாளைக்கு மரணச் சடங்குகள் நடக்கவிருக்கிறது. நானும் போகலாம் என நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள்*

*போகவில்லையா?' என என்னிடம் கேட்டார் உடனே எனக்குப் புரிந்துவிட்டது. உன் அம்மா தான் அந்தப் புண்ணியவதியென்று. மாதினி நீ என்னைப் பல தடவை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்திருக்கிறாய், அப்ப கூட இதைப்பற்றிச் சொல்ல...?"*

*தந்தை கேட்டு முடிக்குமுன் மாதினி இடையில் குறுக்கிட்டு, "அப்பா! அம்மா உங்களிடமோ வேறு ஒருவரிடமோ சொல்ல வேண்டாம் என என்னிடம் சத்தியம் வாங்கியிருந்தவ. அதனால் தான் உங்களிடம் இதைச் சொல்லவில்லை," என்றாள் தயக்கத்துடன்.*

*ரேவதியின் இறுதி பயணச் சடங்கு நடக்கும் மக்குவாரி பார்க்கின் மொங்கொலியா சப்பலடியில், பாடை வாகனம் வந்து நின்றது. அதைத் தொடர்ந்து வந்த வாகனத்தை விட்டு, மாதினி கன்னத்தில் வடிந்த கண்ணீரைத் துடைத்தபடி இறங்கவும், திடீரென சிவகுமார் அமீலாவோடு அவளை நோக்கி ஓடி வந்தனர்.*

*"மாதினி, என் மனைவியின் இறுதிக் காரியங்களை நான் பங்கெடுக்க முடியுமா?" எனக் கொஞ்சாத குறையாக் கேட்டார்.*

*மாதினிக்கு ஆச்சரியத்தில் பேச்சே வரவில்லை. பின் தன்னை சுதாரித்துக் கொண்டு,*

*"அப்பா அம்மாவின் இறுதி காரியங்களை நீங்களே செய்யுங்கள். அம்மாவின் கடைசி காரியங்கள் நீங்கள் செய்வதால் அவவின் ஆத்மா மிகவும் சந்தோசப்படும்," என்றாள் குரல் தழுதழுக்க.*

*மாதினிக்கு, தன் தாயார் தன் கணவரோடு சேர்ந்து இருந்த போதும் விவாகரத்துக்குப் பின்னும் கணவர் சிவகுமாரின் அன்புக்காக ஏங்கினாள் என அவளுக்கு நன்றாகத் தெரியும். இப்போது அம்மாவைத் தள்ளி வைத்த கணவரே இறுதி காரியங்களைச் செய்வதால் தாயின் ஆத்மா நிம்மதியாக இறைவனடி சேரும் என்ற திருப்தியோடு தந்தையே எல்லாச் சடங்குகளையும் செய்ய அனுமதித்து நிம்மதி அடைந்தாள்.*

தை 21/2024 வீரகேசரியின் வார பத்திரிகையில் வெளி வந்த சிறுகதை

# உயர்ந்த மலை

*கேதீஸ் தன் நெருங்கிய வியட்னமீஸ் நண்பன் வின்சனுடன் சிட்னி சிட்டிக்குள் சுற்றிவிட்டு, சென்ட்ரல் ரயில் நிலையத்தின் டிக்கட் தடையடியில் வந்து நின்ற போது இரவு பதினோரு மணி இருக்கும். பர்சை எடுக்கக் காற்சட்டைப் பொக்கட்டில் கையைப் போட்டான். அவன் மனம் திக்கென்றது. இடது கையை இரண்டு பொக்கட்டுக்குள்ளும் போட்டு தேடினான். பர்ஸ் இருக்கவில்லை. டிக்கட் இல்லாவிட்டால் என்ன ஏதாவது குறுக்கு வழியாலே நிலையத்திற்குள் அவன் போய்விடலாம். பல தடவை அதைச் செய்திருக்கிறான். ஆனல் தொலைந்த அந்த பர்சிலே தானே ஆயிரத்து முந்நூறு டொலர் வைத்திருந்தான்?*

*"கேதீஸ்! வாடா. ஏன் நிற்கிறாய்," என ஆங்கிலத்திலே கூறிக் கொண்டு அவன் கையைப் பிடித்து இழுத்தான், வின்சன்.*

*பின் வாங்கிய கேதீஸ், "வின்ஸ், என் பர்சைக் காணவில்லை! அதிலே தானே ஐ போன் வாங்குவதற்கென்று பணம் வைத்திருந்தனான்." இதைச் சொல்லும் போது கேதீசின் முகம், வெளிறி வியர்த்து விட்டது.*

*"கேதீஸ் பதட்டப்படாதே! நாங்கள் போய் திரிந்த இடங்களில் தேடிப் பார்ப்போம்," எனக் கூறிய வின்சன் அவனை அழைத்துக்*

கொண்டு அவர்கள் போய் திரிந்த எல்லா இடமும் தேடினர். ஒரு மணித்தியாலம் போலத் தேடி பர்ஸ் கிடையாதபடியால், பக்கத்திலிருந்த கிங்ஸ் கொரஸ் பொலீஸ் நிலையத்தில் ஒரு புகார் போட்டுவிட்டு ரயிலில் ஏறி தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர்.

கேதீஸ், வீட்டிற்குப் போய்ச் சேர்ந்த போது விடியற் காலை இரண்டு மணியாகியிருந்தது. எந்தச் சத்தமும் போடாமல் மெதுவாக உள்ளே நுழைந்து படுக்கைக்குப் போனவன் மனதில் பலதையும் எண்ணி வருத்தப்பட்டான்.

கேதீசும் அவன் தங்கையும் தந்தையின் முகமே அறியாமல் வளர்ந்தவர்கள். கேதீஸ் இரண்டு வயதாகவும் தங்கை சுரபி எட்டு மாதக் குழந்தையாகவும் இருக்கும் போது அவர்கள் தந்தை, ஈழத்தின் உள் நாட்டுப்போரில் குண்டடிபட்டு இறந்து விட்டார். அதன்பின் அவுஸ்திரேலியாவிற்குக் குடிபெயர்ந்து இந்த தாராள மனிதாபிமான அவுஸ்திரேலிய அரசாங்கத்தால், தாய் வசந்தி, ஒரு மருத்துவ தாதியாகப் படித்து பயிற்சியும் பெற்று மருத்துவமனையில் வேலை செய்து, உழைத்து பிள்ளைகள் இருவரையும் நல்லபடியாக வளர்த்திருந்தாள். இப்போது கேதீசுக்கு 24 வயது. அவன் ஆசைப்பட்ட, ஐ போன் 13 வாங்க, அவன் தாய் இரவு பகலாக கடினமாக உழைத்துச் சேர்த்துக் கொடுத்திருந்த பணம் தான் அது. சிட்டியில் உள்ள பெரிய 'ஆப்பில்' கடையில், அவன் விரும்பிய ஐ போன் வாங்கலாம் என்ற எண்ணத்துடன் தான் வின்சடனும் மற்ற கூட்டாளிகளுடனும் சிட்டிக்குப் போயிருந்தான். ஆனால் அவன் விரும்பிய மாதிரி ஐ போன் கிடைக்கவில்லை. சிட்டியில் நண்பர்கள் கூடினால் கேட்கவா வேண்டும்? பல களியாட்டங்களில் பொழுதைப் போக்கிய போதுதான் பர்ஸ் தொலைந்திருக்கிறது.

'அம்மா பாவம், பணம் தொலைந்தது தெரிந்தால், அவர் ஏங்கிப் போய் விடுவாவே! இரண்டு வருடத்திற்கு முன் நான் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளில் நடந்த விபத்தில் எனது முழு வலது கையை இழந்தேன். இந்த பொருத்தப்பட்ட

*உணர்ச்சியில்லாத செயற்கைக் கையால் தான் பணத்தைத் தொலைத்தேன்.' அவன் மனதில் சுய பரிதாபம் மேலோங்கி நின்றது. இப்படித் தன் கடந்த கால வாழ்க்கையையும் பணம் தொலைந்ததையும் நினைத்தவனுக்கு அன்று இரவு நித்திரையே இல்லை.*

*காலையில் படுக்கையை விட்டு எழுந்தவன் தைரியத்தை வரவழைத்துகொண்டு நேரே தாயைத்தேடி சமையலறைக்குப் போனான். அதிகாலையிலே எழுந்து மூவருக்கும் மதிய உணவைச் சமைத்து, தன் மதிய உணவு டப்பாவை பாக்கில் போட்டு விட்டு, சமையலறையைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள் தாய், வசந்தி.*

*கேதீஸ் தன் இடது கையால் தாயின் கழுத்தை அணைத்தபடி "அம்மா நீங்கள் ஐ போன் வாங்கக் கொடுத்திருந்த காசை பர்சோடு தொலைத்துப் போட்டேன். எல்லாம் எனது இந்த செயற்கை கையால் தான்," என்றான் கண்கள் கலங்கியபடி.*

*வசந்தியின் இதயம் ஒருமுறை நின்றுவிட்டுப் படபடவென அடிக்கத் தொடங்கியது. அந்தப் பணத்தைச் சேர்க்க அவள் பட்டபாடுகள் நினைவுக்கு வந்தன. ஆனால், கலங்கிய கண்களோடு நின்ற மகனின் முகத்தைப் பார்த்ததும் அவள் தாயுள்ளம் இளகியது. அவனைக் கட்டி அணைத்து முதுகைத் தடவிய விட்டபடி,*

*"கவலைப்படாதே என்ன செய்வது உனக்கு ஐ போன் 13 கிடைக்கும் அதிர்ஷ்டம் இப்போதைக்கு இல்லை போல," என்றாள்.*

*அந்நேரம் படுக்கையை விட்டு எழுந்து நெட்டி முறித்துக் கொண்டு வந்த மகள் சுரபியிடமும் கேதீசிடமும்,*

*"எனக்கு நேரமாகிவிட்டது. மறந்திடாமல் இரண்டு பேரும் பிரேக்ஃப்ஸ்ட் சாப்பிடுங்கோ. லன்ச்சும் சமைத்திருக்கிறேன்." எனச் சொல்லிவிட்டு, அவசரமாக தனது வேலைக்குப் புறப்பட்டுப் போனாள் வசந்தி.*

*விபத்தில் வலது கையை இழந்ததோடு தன் இயலாமைத் தனத்தை எண்ணி கேதீசின் மனதில் சுய பரிதாபம் நிரம்பி வழிந்தது. தனக்கு எதுவுமே நல்லதாய் நடப்பதில்லை, தன்னையும் ஒரு ஆளாக மற்றவர்கள் மதிப்பதில்லை, என அவன் மனதில் எழுந்த உணர்வுகளால் உளச்சோர்வுக்குள் தள்ளப்பட்டிருந்தான். விபத்திற்குப் பின் சத்திர சிகிச்சை நடந்து அவனுக்குச் செயற்கை கை போட்டாலும், அவன் முன்பு இருந்த இயல்பு நிலைக்கு வரவேயில்லை. இந்த விபத்து கேதீஸ் மூன்றாம் வருடம் சர்வகலாசாலையில் விஞ்ஞானம் படித்துக்கொண்டிருந்த போது நடந்தது. செயற்கை கையால் தன்னால் எழுத இயலாது என்றும் இடது கையால் எழுதவோ கணினியை இயக்கவோ கஷ்டமாக இருக்கிறது எனச் சொல்லி அவன் கலாசாலைப் படிப்பை நிறுத்திவிட்டான். வலது கை விளங்காததால் இடது கையால் வேலைகள் செய்யக் கஷ்டப்பட்டான் அதனால் எந்த வேலைக்கும் போகபிடிக்காது, மன விரக்தியோடு. தாயிக்குச் சுமையாக இருந்தான்.*

*பர்சோடு பணம் தொலைந்த இரண்டு நாட்களுக்குப் பின் வீட்டில் மூவரும் இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கேதீசின் தொலைபேசி 'ஈழத்திருநாடே என் அருமை தாயகமே' என்ற ரிங் டோனில் ஒலித்தது, மறுமுனையில்,*

*"இது கிங்ஸ் கொரொாஸ் பொலீஸ் ஸ்டேசன் அதிகாரி, கேதீசா கதைக்கிறது?" என ஆங்கிலத்தில், கேட்டார்.*

*"யெஸ், கேதீஸ் தான் பேசுறேன்" எனப் பதிலளித்தான்.*

*"உங்கள் பர்ஸ் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது அதில் எவ்வளவு பணம் இருந்தது எனச் சொல்லமுடியுமா?"*

*"ஆயிரத்து முந்நூறு டாலரும் ஒரு பத்தோ பன்னிரண்டு டாலரும் இருந்தது," என்றான் கேதீஸ்.*

*"ஒகே, இரண்டு நாளைக்குள் நீங்களே வந்து பர்சையும் பணத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்," என்றார் அதிகாரி*

*"தாங்க் யு, தாங்க் யு வெரி மச்" என்று தொலைபேசியைத் துண்டித்தான்.*

*இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த தாய், வசந்தி,*

*“பாத்தியா கேதீஸ், இது தான் அவுஸ்திரேலியா! பர்சில் ஆயிரம் டாலருக்கு மேலே பணமிருந்தும் கவனமாக அதை பொலீஸ் ஸ்டேசனில் ஒருவர் கொடுத்திருக்கிறார் என்றாப் பாரேன். பிரமாதம்! கேதீஸ் நீ தாமதியாமல் போய் பர்சையும் பணத்தையும் எடுத்துக் கொள்” என்றார்,.*

*அடுத்த நாளே கேதீஸ் பொலீஸ் நிலையத்திற்குப் போய் பர்சைப் பெற்றுக் கொண்டான். பணத்தை எண்ணிப் பார்த்தான், $1300 டாலர் அப்படியே இருந்தது.*

*“தயவு செய்து இதைக் கண்டெடுத்துக் கொடுத்தவர் யார் என்று சொல்ல முடியுமா? நான் அவருக்கு நன்றி சொல்ல வேணும்,” என ஆங்கிலத்தில் கேட்டான்.*

*அதிகாரியும் பர்சைக் கண்டெடுத்தவர், ஒரு பெண், பெயர் கியாரா என்றும் அவளது தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்தார். ’கியாரா கேள்விப்படாத அபூர்வமான பெண்ணின் பெயராக இருக்கிறதே,’ என நினைத்தான் கேதீஸ்.*

*வீட்டிற்கு வந்ததும் அந்த தொலைபேசி இலக்கத்தை அழுத்தி, கியாராவுக்கு தன்னை அறிமுகப்படுத்தி நன்றி கூறிவிட்டு,*

*“என் பர்சைப் பத்திரமாக நீங்கள் பொலீசிடம் ஒப்படைத்தது எவ்வளவு பெரிய விசயம். நீங்கள் என் நினைவில் எப்போதும் இருப்பீர்கள்,” என ஆங்கிலத்தில் உணர்ச்சியோடு சொன்னான்*

*மறுமுனையில் படிக்கட்டில் பல மணிகள் உருளுவது போல் கிண் கிண்ணென்று அவளது சிரிப்பொலி ஒலித்தது.*

*“பர்சைத் தற்செயலாகக் கண்டெடுத்து, அதை பொலீசிடம் கொடுத்தேன். அவ்வளவும் தான்,” என ஆங்கிலத்தில் அவள் பதில் அதே சிரிப்பொலி போல் கணீர் என்ற குரலில் ஒலித்தது...*

*அவனையும் அறியாமலே கேதீஸ், “என் அம்மா இரவு பகலாகக் கஷ்டப்பட்டு உழைத்து நான் ஆசைப் பட்ட ஐ போன் 13 வாங்கக் கொடுத்த பணம். எல்லாம் இந்த வலது கையை இழந்த முடவனால் தான், அந்தப் பணம் தொலைந்தது,” என்றான்.*

*“என்ன முடவனா? வட் டு யு மீன்.?”*

*“இரண்டு வருடத்திற்கு முன் நான் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி எனது வலது கையை இழந்து, யுனிவேசிட்டி படிப்பையும் கைவிட்டு, திக்குத்திசை இல்லாமல் திரிகிறேன், என்றான்”. அவன் குரலில் ஒரு நடுக்கம் இருந்தது, அழுதுவிடுவான் போலிருந்தது.*

*“நோ நோ கேதீஸ்! நீ இந்த மனப்பான்மையிலிருந்து வெளியே வரவேண்டும். தொலைத்த பணம் கிடைத்துவிட்டது தானே. கவலைப்படாதே. ம்....அப்ப.......இதைப் பற்றி நாங்கள் ஒரு நாளைக்கு கபேயில் சந்தித்து காபி குடித்துக் கொண்டு கதைக்கலாமே?”*

*“ஓம் சந்திக்கலாமே,“ என்றான் உற்சாகத்துடன்.*

*இருவருக்கும் வசதியான நாளான ஒரு சனிக்கிழமை சட்ஸ்வுட்டில் இருந்த ’ஸ்டார்பக்ஸ்’ (Starbucks) கபேயில் காலை பத்து மணிக்கு சந்திப்பது என முடிவானது.*

*அன்று கேதீஸ் தன் உடைகளைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து அணிந்து கொண்டு, தன் நெளிந்த முடியை மேவி வாரிக் கொண்டான். அவனது இருபத்தி மூன்றாவது பிறந்த நாளுக்கு அம்மா பரிசாகக் கொடுத்திருந்த ரல்ஃபீப் லொரன் வாசனைத் திரவத்தையும் போட்டுக் கொண்டு புறப்பட்டான்.*

*கபேக்குள் போனவன் சுற்றும் முற்றும் பார்த்தான். கியாரா யாராகவிருக்கும் எனத் தெரியாமல் முழித்தான். கேதீசின் பர்சில் இருந்த ஓட்டினர் லைசன்ஸ் புகைப்படத்தைப் பார்த்த நினைப்பில் அவனை அடையாளம் கண்டு விட்டு, கியாராவே தன் கையைக் காட்டி, அழைத்தாள்.*

*அவளை அணுகிய கேதீஸ் “கியாரா?” எனக் கேட்டபடி முன்னால் இருந்த நாற்காலியில் அமரப் போனவன் திகைத்துப் போனான். அழகே உருவான கியாரா ஒரு சக்கர வண்டியில் அமர்ந்திருந்தாள். ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டு, கியாரா நீட்டிய கரத்தை குலுக்க தன் வலது செயற்கை கையை நீட்டியவன் சட்டென பின் வாங்கிவிட்டு இடது*

*கையால் அவள் கரத்தைப் பற்றிக் குலுக்கிவிட்டு, "ஹாய்! கிலாட்டு மீட் யு." எனக் கூறி அமரப் போனான். கியாரா அணிந்திருந்த அரை பாவாடைக்குக் கீழ் முழங்கால்களுக்கு அப்பால் இரண்டு கால்களும் இல்லாததைக் கண்டு மேலும் வியந்து போனான். வியப்பை வெளியே காட்டாது இருக்கையில் அமர்ந்து கொண்டவனின் மூளையில் ஒரு பொறி தட்டியது. 'சில வருடங்களுக்கு முன் ஒலிம்பிக்ஸ் மாற்றுத்திறனாளி கூடைப் பந்தாட்ட (basketball) போட்டியில் சாதித்ததாகப் பத்திரிகையின் முன் பக்கத்தில் போட்டிருந்த பெண் போல அல்லவா கியாரா இருக்கிறாள்?'. பெண்ணின் பெயர் அவன் நினைவுக்கு வரவில்லை.*

*அவள் முன்னால் அமர்ந்தவன் கியாராவை அவதானித்தான். வெள்ளை அவுஸ்திரேலிய பெண்ணாகத் தெரியவில்லை. ஆனால் சுமாரான வெள்ளை நிறத் தோல், கரிய விழிகள், அழகான வளைந்த புருவங்கள், சின்ன சப்பட்டை நாசியும், செம்பாடும் கறுப்பும் கலந்த சுருண்ட முடியை நெற்றியினின்றும் பின்னால் வாரிக் கட்டி, அழகு ததும்ப அமர்ந்திருந்தாள்.*

*"ஃப்லட் வைட்டா? அல்லது கப்பச்சீனாவோ?" என மென்சிரிப்போடு கேட்க, அவளின் சற்று எடுப்பான முன் வெண் பற்கள், சிவந்த உதடுகளுக்கு இடையே தெரிய அவள் அழகுக்கு அழகு சேர்த்தது.*

*"கப்பச்சீனோ பிளீஸ்," என்றான்.*

*இரண்டு கப்பச்சீனோ ஓர்டர் பண்ணிவிட்டு,*

*"கேதீஸ்! என் யூகிப்பு சரியாகத்தான் இருக்கும் என நினைக்கிறேன். நீ சிறீலங்காவைச் சேர்ந்த தமிழன் தானே?" கேட்டாள் கியாரா.*

*"யெஸ்" எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"*

*படிக் கட்டில் மணிகள் உருளும் அதே சிரிப்பு ஒலித்தது. "உன் தோலின் நிறத்தையும், உன் முக அம்சங்களையும் வைத்துத் தான். அது மட்டுமில்லை எனக்கு சில சிறீலங்கன் நண்பர்களும். இருக்கிறார்கள். கேதீஸ்! உன் பெயருக்கு ஏதாவது அர்த்தம்*

இருக்கா? எமது அவுஸ்திரேலிய பழங்குடி மக்களின் மொழியில் 'கியாரா' என்றால் உயர்ந்த மலை என்று அர்த்தம்."

"அப்படியா! எங்கள் இந்து தமிழர்களின் கடவுளான லார்ட் சிவாவைப் பல பெயர்களால் அழைப்பார்கள். அதில் ஒரு பெயர் கேதீஸ்வரன், நான் அதைச் சுருக்கி கேதீஸ் என வைத்திருக்கிறேன்," என்றான்.

"ஒரு விதத்தில் நீயும் என்னைப் போல் ஒரு மாற்றுத்திறனாளி தான். நீ யூனிவெசிட்டி படிப்பை விட்டுப்போட்டு இப்போது என்ன செய்யிறாய்?

ஒரு கணம் தாமதித்த கேதீஸ், தன் செயற்கைக் கையை உயர்த்திக் காட்டி, "இந்த முடவனால் என்னதான் செய்ய முடியும்," என அவனையும் அறியாமல் தன் இயலாமையை விளக்கினான்.

"கேதீஸ்! நீ முடவனுமில்லை, ஊனமுற்றவனுமில்லை.!! நீயும் என்னைப் போல் ஒரு மாற்றுத்திறனாளி! அதை முதலில் புரிந்துகொள். இது உன் மனதில் பதிந்து விட்டால் எதையும் சாதிக்கலாம். மேலும் நீ மன உறுதியோடும் கட்டுப்பாட்டோடும் கூடவே கடின உழைப்போடு இருந்தால் உயர் சாதனையாளர்கள் போல் நீயும் சாதிக்கலாம். நாங்கள் இருவரும் மாற்றுத்திறனாளிகள், எங்களிடம் பல தனித்திறமைகள் இருக்கின்றன. அதை வெளிக் கொணர்ந்து சாதிக்க வேண்டும்," என்றாள் குரலில் உறுதியோடு.

ஒரு கப் கப்பச்சீனோ இரண்டு கப்பச்சீனோவாகியது. நேரம் போவது தெரியாது இருவரும் பல விசயங்களைப் பற்றிப் பேசினர். இருவருக்கும் பிரபல பாடகரான கைய் செபஸ்டியனின் (Guy Sebastian) பாட்டு மிகவும் பிடித்திருந்தது.

"அவருடைய 'ஸ்டாண்டிங் வித் யு' அல்பம் எனக்கு மிகவும் பிடிக்கும்" என்றாள் கியாரா.

"எனக்கும் தான். அதோடு சில தமிழ்ப் பாட்டுகளும் பிடிக்கும் என்றான் கேதீஸ்..

"அப்படியா, எனது சிறீலங்கன் நண்பி அடிக்கடி ஒரு பாட்டுக் கேட்பாள். அதன் மெட்டு எனக்குப் பிடித்திருந்தது," என

*ஏ.ஆர்.ரஹ்மானின் சின்னச் சின்ன ஆசை மெட்டை முனகினாள்.*

*“சுப்பர்! எனக்கும் அந்தப் பாட்டுப் பிடிக்கும். அடிக்கடி போனில் கேட்பேன்.” என்றான் உற்சாகத்துடன்.*

*இருவருக்கும் பிடித்த உணவு வகைகளைப் பற்றிக் கதைத்த போது இருவருக்கும் இத்தாலிய நாட்டு பீட்சாவும், ஸ்பெயின் நாட்டுப் பயலா உணவும் பிடித்திருப்பது தெரிந்தது.*

*கியாராவிடம் விடை பெற்று வீட்டுக்குத் திரும்பியவன் உடனே தன் கணினியைத் திறந்து கியாராவின் பெயரைக் கூகுளில் தேடினான். ’கியாரா டானியல்ஸ் கூடைப்பந்தாட்ட சாம்பியன்’ என்ற தலைப்புக்குக் கீழ் அவன் சற்று முன் சந்தித்த கியாரா மென்சிரிப்போடு கூடைப்பந்தாட்ட உடையோடு சக்கர வண்டியில் காட்சியளித்தாள்.*

*தலைப்புக்குக் கீழ் எழுதியிருந்ததை அவசர அவசரமாக வாசித்தான். ’மார்ச் 2018 ஆண்டில் கொரியன் குடியரசு நாட்டின் பியொங்சாங் இல் நடந்த பாராலிம்பிக் கூடைப்பந்தாட்டப் போட்டியின் அணியின் இளைய உறுப்பினரான கியாராவின் திறமையால் அவுஸ்திரேலிய அணி வெற்றி கண்டது,’ என எழுதியிருந்தது. இதற்குக் கீழ் கியாராவைப் பற்றிய முழு விவரமும் போட்டிருந்தார்கள். அதையும் ஆவலோடு வாசித்தான் கேதீஸ்.*

*‘கியாரா அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடி பெண்ணுக்கும் டானியல்ஸ் என்ற அவுஸ்திரேலிய போத்துக்கேயருக்கும் 1998 ஆண்டில், மேற்கு அவுஸ்திரேலியாவின் போர்ட் ஹெட்லண்டில் பிறந்தாள். பிறக்கும் போதே முழங்காலுக்குக் கீழ் இரண்டு கால்களும் வளர்ச்சி இல்லாமல் தான் பிறந்தாள். அவளுடைய பெற்றோர் மற்ற உடன் பிறந்தோரோடு எந்தப் பாகு பாடும் சலுகையும் காட்டாமல் வளர்த்தார்கள். கியாரா சிறு வயது முதல் துடிப்போடும் கலகலப்பாகவும் இருந்தாள். நடக்கிற வயது வந்ததும் செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டது. எட்டு வயது மட்டும் பொருத்தப்பட்ட கால்களோடு நடந்தவள்*

*அது பிடிக்காது ஸ்கேட் போர்டில் (சறுக்குப் பலகையில்) எல்லா இடமும் போய் வந்தாள். பெற்றோர் சக்கர வண்டி வாங்கப் போன போது, கியாரா, 'எனக்கு வேண்டாம். அது ஊனமுற்றவருக்குத்தான், அதில் போவதற்கு எனக்குச் சங்கடமாக இருக்கிறது,' எனக் கூறி சறுக்குப் பலகையிலே எங்கும் போய் வந்தாள்.*

*அவளது பள்ளிக்கூடத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற விளையாட்டுகள் இருந்தது. பதினான்கு வயதில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்ற மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் நேரம் வந்தபோது, அவள் மனதில் எழுந்த ஏதோ ஒரு உணர்வு சக்கர வண்டி கூடைப்பந்தாட்டத்தில் சேரும் எண்ணத்தை ஏற்படுத்தியது. பல வருடங்கள் கியாரா கையை உந்தி உந்திச் சறுக்குப் பலகையில் பயணித்து அவள் உடம்பின் மேற்பகுதியும் இரு கரங்களும் உரம் பெற்றிருந்ததால் சக்கர வண்டி விளையாட்டில் சக மாணவர்களிற்குள் முன்னணியில் நின்றாள்.*

*விளையாட்டில் இவ்வளவும் சாதித்தவர் படிப்பிலும் சளைத்தவர், அல்ல. பி. ஏ பட்டம் பெற்று கியாரா இப்போது எம். பி. ஏ செய்து கொண்டிருக்கிறார்,' என ஒரே மூச்சாக வாசித்து முடித்தான்.*

*அப்பாடி பிறவி முதல் இரண்டு கால்களும் இல்லாமலே இந்த இளம் வயதில் இவ்வளவும் சாதித்திருக்கிறாளே!! கியாரா, நீங்கள் ஒரு அற்புதப் பிறவி! கேவலம் ஒரு கையை இழந்து விட்டேன் என்று சுய பரிதாபம் மேலிட்டு, படிப்பையும் பாதியில் விட்டு விட்டு வேலைக்கும் போகாமல், என் ஒற்றைத் தாயிக்கு (சிங்கில் மதருக்கு) பாரமாக இருக்கிறேனே,' என மனதுக்குள் தன்னை நொந்து கொண்டான்.*

*இரண்டு நாள் கழித்து கியாராவே அவனை தொலைபேசியில் அழைத்து, "ஹாய்! கேதீஸ்!, ஹவ் ஆர் யு? என்ன புது மொபைல் வாங்கி விட்டியா?" எனக் கேட்டாள்.*

*"இல்லை. ஐ போன் 13 இப்போதைக்கு எனக்குத் தேவையில்லை," எனச் சலிப்போடு சொன்னான்.*

*“சீயர் அப் கேதீஸ்!! எனக்குத் தெரிந்த ஒரு ஸ்பானிஷ் ரெஸ்டோர்ண்டிலே எங்கள் இரண்டு பேருக்கும் பிடித்த மிகவும் சுவையான பயாலா, இரவைக்குச் சாப்பிடலாம் வாரியா? பிளீஸ் வா எனக் குழைந்தாள்.*

*“ஓம் வாறேன்” என்றான் உசாராக.*

*கியாரா ரெஸ்டோரண்டின் பெயரையும் கூறி ஏழு மணிக்குச் சந்திப்போம் எனச் சொன்னாள்.*

*சரியாக இரவு ஏழு மணிக்கு ‘என்காசா’ என்ற ஸ்பனிஷ் ரெஸ்டோரண்டிற்குள் நுழைந்தான். அங்கு அவனுக்காகக் கியாரா காத்திருந்தாள்.*

*கியாராவைக் கண்டதும் கேதீஸின் உடம்பில் ஒரு புத்துணர்ச்சியே எழுந்தது.*

*“நான் தாமதித்து வந்துவிட்டேனா?” எனக்கேட்டபடி கியாரா முன் அமர்ந்தான்.*

*“உன்னைச் சந்திக்கிற ஆவலில் கொஞ்சம் முன்னமே வந்துவிட்டேன்” என்றாள் கியாரா, அவளுக்கே உரித்தான சிரிப்போடு.*

*இருவரும் சாப்பிட்டுக்கொண்டு, உணவுகள், சினிமா, தங்கள் தங்கள் குடும்பங்கள் பற்றியும் கதைத்தார்கள்.*

*கேதீஸ் அவனை அறியாமலே, “கியாரா! நானும் எனது தங்கை சுரபியும் இளம் வயதிலே தகப்பனை இழந்து விட்டோம். எமது தாய் தான் கஷ்டப்பட்டு வேலை செய்து எங்களை வளர்த்து இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்,” என மனம் திறந்து தன் குடும்பத்தைப் பற்றிச் சொன்னான்.*

*“கேதீஸ் உன் அம்மா இந்த இருபத்தி ஓராம் நூற்றாண்டில் மறுமணம் செய்யாமல் உங்களுக்காக வாழ்ந்திருக்கிறாள். ஷி இஸ் கிரேட்,” என்றாள் கியாரா.*

*“ஓம், அம்மா எங்களுக்காத் தான் வாழ்கிறா” என்றவனின் குரல் சற்று நடுங்கியது*

*சாப்பிட்டு முடிந்ததும் தன் மனதிலிருந்ததை சொல்லுவதற்குக்காக் காத்திருந்த கேதீஸ்,*

*“கியாரா! உங்களை முதலில் சந்தித்தபோது நீங்கள் பராலிம்பிக் ஸ்டார் என்று எனக்குத் தெரியாது. கூகுளுக்குள் போய் உங்களைப் பற்றி அறிந்து கொண்டேன். முழங்காலிற்குக் கீழ்க் கால்கள் இரண்டும் இல்லாமல் தன்னம்பிக்கையோடு இவ்வளவும் சாதித்திருக்கிறீர்கள். எனக்கு நீங்கள் ஒரு இன்ஸ்பிரேஷன் (inspiration). என் செயற்கை கையைப் பார்த்து இரும்புக் கைக்காரன், பையோனிக் மான் என யூனிவசிட்டியில் சக மாணவர் மாணவிகள், எனக்குப் பின்னால் தங்களுக்குள் கதைத்துச் சிரித்தார்கள். குரூப் படிப்பு நடக்கும் போது சக மாணவிகள் எனக்குப் பக்கத்தில் இருக்கத் தயங்கினர். சுருங்கச் சொன்னால் ஒரு சக மாணவனாகக் கருதாமல், வேறு உலகத்தை சேர்ந்தவனாகப் பார்த்தார்கள். அதோடு இடது கையால் கணினியை இயக்க மிகவும் கஷ்டப்பட்டேன். இதை எல்லாம் என்னால் தாங்க முடியாமல், யூனிக்குப் போகப் பிடிக்காமல் யூனி படிப்பை விட்டு விட்டேன். படிப்பை நிறுத்தியதோடு என் தன்னம்பிக்கையும் இழந்தேன்! என் எதிர்காலத்தையும் என் தாயின் நிம்மதியைக் கெடுத்துவிட்டேன்!.”*

*“கேதீஸ், எம்மை பழிக்கிறவர்களுக்கு நாம் வெற்றிகரமாக வாழ்ந்து காட்ட வேண்டும். உதாரணத்திற்கு என்னை எடுத்துக் கொள். ஐந்து வயதில் பள்ளிக்கூடத்திற்கு இந்தக் கால்களுடன் போன என்னை சக மாணவர்கள், உன்னைப் பார்த்தது போல் ஒரு காட்சிப் பொருளாகப் பார்த்தார்கள். வகுப்பில் நான் என் முழங்கால்களில் நடக்கும் போது சிலர் தங்கள் காலைப்போட்டு, இடறி என்னை விழவைத்து ரசித்தார்கள். ஆனால் நான் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. தொடர்ந்து படித்தேன்”*

*“என்ன! உங்கள் முழங்காலிலா பள்ளியில் நடந்து திரிந்தீர்களா?”*

*“ஓம், வீட்டில் எப்படி நடந்து திரிந்தேனோ அப்படியே பள்ளிக்கூடத்திலும் நடந்து திரிந்தேன். யாருடைய வாழ்க்கையில் போராட்டம் இல்லை. மலைபோல் பிரச்சனைகள் வந்தாலும் நாம் மனம் வைத்தால் அதைத் தகர்த்து எறிய முடியும்.*

இடையூறுகளை எதிர்கொண்டு வாழ்வதில் ஓர் மனத்திருப்தியும் பெருமையும் இருக்கிறது. உன் தாழ்வு மனப்பான்மையினின்றும் உளச்சோர்விலிருந்தும் நீ வெளியே வரவேண்டும். பாதியில் விட்ட உன் படிப்பை மீண்டும் மேற்கொள்ள வேண்டும்.”

”உன்னைப் பற்றி உன் சாதனைகளைப் பற்றி கூகுளுக்குள் போய் அறிந்தபின், எனக்கு ஒரு தன்னம்பிக்கை வந்தது. உடனேயே என் விஞ்ஞானப் படிப்பைத் தொடர்வதற்கு, நீ, எம். பி. எ செய்கிற அதே சிட்னி யூனிக்கு விண்ணப்பித்துவிட்டேன்.”

“ஓ கேதிஸ்! இது நல்ல செய்தி.”

“கியாரா!! என்னுடைய இந்த மாற்றுத்திறனாளி பயணத்தில் நீ என் கூடவே இருப்பாயா?”

“நிச்சயமாகக் கேதீஸ்!!” என மேசை மேலிருந்த அவன் இடது கையை ஆதரவாகப் பற்றியபடி கூறினாள். இருவர் கண்களும் ஒரு நிமிடம் சந்தித்தன. வார்த்தையால் சொல்லாததை அந்த நான்கு கண்களும் பேசின. சட்டென்று இருவரும் கண்களைத் தாழ்த்திக் கொண்டனர்.

“கேதீஸ் வருகிற சனிக்கிழமை மொஸ்மனில் உள்ள என் வீட்டுக்கு லஞ்சுக்கு வரமுடியுமா? உன்னைப் பற்றி என் பெற்றோரிடம் சொல்லியிருக்கிறேன். அவர்களும் உன்னைச் சந்திக்கப் பிரியப் படுகிறார்கள்.” எனக் கேட்டாள்.

“ஓம் கட்டாயமாக! நானும் என் அம்மாவிடம் உன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவவும் உன்னைச் சந்திக்க விருப்பப்படுகிறார். ஒரு ஞாயிறு என் வீட்டுக்கு நீயும் சாப்பிட வரவேனும் கியாரா?” எனத் தன்னம்பிக்கையோடு கேட்டான்.

“ஐ வில் லவ் இட்!! ஒற்றைத்தாயாக உன்னையும் உன் தங்கையும் இந்த நிலைக்கு வளர்த்துவிட்ட அந்தத் தைரியசாலி அம்மாவைச் சந்திக்க ஆவலோடும் ஆசையோடும் இருக்கிறேன்” கியாராவின் வார்த்தைகள் கேதீஸுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

கியாராவும் கேதீஸும் அடிக்கடி சிட்னி பல்கலைக்கழகத்தில் சந்திப்பதோடு நின்றுவிடாமல். இரண்டு குடும்பமும் சேர்ந்து

உல்லாசப் பயணங்கள் போவதுமாக நாட்கள் கடந்து போயின. நாட்கள் வருடங்கள் ஆயின. நண்பர்களாகப் பழகிய கேதீசுக்கும் கியாராவுக்குமிடையே காதல் மலர்ந்தது. கேதீசின் தாய் வசந்தி முதலில் இரண்டு காலில்லாத பெண்ணென்ற நினைப்போடு பரிதாபத்தோடுதான் பழகினார். ஆயினும் கியாரா இரண்டு கால்கள் இல்லாவிட்டாலும், சக்கர வண்டியில் அமர்ந்தபடி வீட்டு வேலைகளையும் செய்து, மேற்படிப்பையும் மேற்கொண்டு, விளையாட்டு வீராங்கனையாக அவள் சாதித்ததையும் பார்த்து, வசந்திக்கு, கியாரா மேல் மதிப்பும், மரியாதையும் ஏற்பட்டது.

கேதீஸ், இரண்டு வருடத்தில் தனிச் சிறப்போடு பட்டம் பெற்றுப் பெரிய நிறுவனத்தில் வேலைக்கும் போகத் தொடங்கி விட்டான். பேய்ஜீங்கில் 2022 மார்ச் மாதத்தில் நடைபெறும் பாராலிம்பிக் கூடைப்பந்தாட்டத்தின் அவுஸ்திரேலியாவின் அணிக்கு கியாரா தலைமை வகிப்பாரென்றும், விரைவில் அவருக்கும் கேதீஸ் என்ற மாற்றுத்திறனாளிக்கும் காதல் திருமணம் நடக்கவிருப்பதாக ஊடகங்களில் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. கியாராவின் அழகிய முகத்தில் சந்தோசப் பூரிப்போடும் அவள் பக்கத்தில் தன்னம்பிக்கையோடு கியாராவின் தோளைத் தனது செயற்கைக் கையால் அணைத்தபடி கம்பீரமாக நிற்கும் கேதீசினதும் புகைப்படங்கள் அவுஸ்திரேலியாவின் பத்திரிகைகளின் முன் பக்கத்தை அடிக்கடி அலங்கரித்தன.

2023 ஆண்டில் இலங்கையின் ஞானம் சஞ்சிகை நடாத்திய போட்டியில் சான்றிதழ் பெற்ற சிறுகதை.

தமிழ் நாட்டின் செம்மலர் சஞ்சிகையிலும் 2024ல் வெளிவந்த சிறுகதை

# ஒரு முன்னோடி

நியுவ் சவுத் வேல்ஸ் மாநிலத்தின் கம்டன் காவல்துறை அதிகாரியான சல்வாடோர் கட்டிடத்திற்குள் நுழைந்தான். அவனை எதிர்பார்த்து, அங்கு அமர்ந்திருந்த அந்தப் பெண் சல்வாடோராவின் கவனத்தை ஈர்த்தாள்.

கரிய முடியை வாரி பின்னால் ஒரு பெரிய முடிச்சாகக் கட்டியிருந்ததினால், அவளின் முகத்தின் ஒவ்வொரு அம்சமும் தனித்து கவர்ச்சியாகவிருந்தது. மாநிற முகத்தில், கரிய வட்ட அழகிய விழிகள், சற்று சப்பட்டையான நாசி, தாராள இதழ்களுடன் பிறை நெற்றியில் சிறிதாய் திருநீற்றுக் கீறும் அதன் நடுவில் ஒரு சிறிய சிவப்புப் பொட்டும் அலங்கரித்தது.

சிவத்தப் பொட்டையும், திருநீற்றையும் பார்த்ததும் அவள் ஒரு இந்தியப் பெண் என அனுமானித்தான் சல்வாடோர். ஆசனத்தை விட்டு எழுந்தவள், சல்வடோர் அமர்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்து வந்தாள். உடம்போடு ஒட்டிய நீல நிற ஜீன்சும், கட்டை கறுப்புத் தோல் ஜாக்கட்டுடன், அசல் விளம்பர மாடல் போல, தன்னம்பிக்கையோடு அவள் நடந்து வருவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். அவள் மேல் வைத்த கண் எடுக்காமலே அமரச் சொல்லிக் கைகாட்டினான். அவள்

*நெற்றியிலிருந்த திருநீற்றுக்கும் அணிந்திருந்த உடைக்கும் எவ்வித பொருத்தமும் இல்லையே என எண்ணினான்.*

*“உங்களுக்கு நான் எப்படி உதவலாம்” என ஆங்கிலத்தில் கேட்டான்.*

*“என் பெயர் சங்கீதா. நான் ஒரு டிராக்கி (truckie) நீண்ட பார வாகன ஓட்டுனர். எனது கூட்டாளியான நாய் வீரனைக் காணவில்லை, அதைப் பற்றி முறையிட்டு நாயைத் தேடித் தரும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.” என்றாள் சங்கீதா*

*அவளுடைய ஆங்கில உச்சரிப்பில் தொனித்த அசை அழுத்தத்திலிருந்து அவள் சிறீலங்கா நாட்டவள் என அவனுடைய பத்து வருட காவல்துறை சேவையின் அனுபவத்திலிருந்து அனுமானித்துக் கொண்டான்.*

*“இந்த போமில் என்ன இன நாய், அதன் நிறமும், எப்போது, எங்கே தொலைந்தது என்னும் விவரங்களையும் நிரப்பவும்,” என்றான்*

*அவள் நிரப்பிக் கொடுத்ததைப் படித்துவிட்டு, “நாயைக் கடத்தியிருக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறீர்கள்! உங்களுக்கு யார் மேலாவது சந்தேகமிருக்கிறதா?”*

*“ஓம். நான் நாலு வருடமாக கிங்ஸ் என்ற கம்பனியில் வாகன ஓட்டியாக வேலை பார்த்து வருகிறேன். ஆறு மாதத்திற்கு முன் இந்தக் கம்பனியில் வந்து சேர்ந்த இரண்டு இளம் ஓட்டுனர்கள் என்னைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு பெண்ணுக்கு இங்கு என்ன வேலையென ஏளனமாக நகைத்து இனவெறி வார்த்தைகளைக் கொட்டுவார்கள். ஒருநாள் இரவு எங்களைப் போன்ற ஓட்டுனர்கள் தங்கும் விடுதியில் நான் தங்கியிருந்த போது என் வீரனை அவர்கள் தூக்கிக் கொண்டு போகவும் வீரன் குரைக்கவும் அங்கு தங்கியிருந்த சக ஓட்டினரிடம் முறையிட அவர்கள் வீரனை விட்டு விட்டார்கள். அவர்கள் தான் இப்போதும் எனது வீரனைப் பிடித்து வைத்திருக்கிறார்கள் என நினைக்கிறேன். வீரனின் உயிருக்கு ஏதும் ஆபத்தோ*

*தெரியாது?" என்றவளின் கண்களில் இலேசான நீர்ப்படலம் மின்னியது.*

*சங்கீதாவின் வார்த்தைகளும், கலங்கிய கண்களும் சல்வாடோர் மனதைத் தொட்டது. இந்த நீண்ட வாகன ஓட்டுனர்களின் கூட்டாளியான நாய் அவர்களுக்கு எவ்வளவு நெருக்கமானதென்று அவனுக்குத் தெரியும். தங்கள் குடும்பத்தாரை விட இவர்கள் அதிக நேரம் நாயோடு தான் கழிப்பார்கள். காலுக்கு மேல் கால் போட்டு அமர்ந்திருந்தவன், காலை கீழே போட்டு விட்டு, முன்னால் நகர்ந்து,*

*"எனக்கு, உங்கள் வேலைக்கு வீரன் எவ்வளவு முக்கியம் என்று விளங்குகிறது. அந்த இரண்டு டிராக்கிகளின் பெயரையும் அவர்கள் தோற்றம்....?" அவன் சொல்லவந்ததை முடிக்கும் முன் குறுக்கிட்டு,*

*"அவர்கள் எனக்கு தொந்தரவு கொடுப்பதால் என் மொபைலில் அவர்களைப் படம் பிடித்து வைத்திருக்கிறேன்" என போட்டோக்களைக் காட்டினாள். அதை வாங்கிப் பார்த்து தன் கைபேசிக்கு அனுப்பிவிட்டு, "கவலைப்பட வேண்டாம். இது இப்போது என் பொறுப்பு. இரண்டு நாளில் உங்கள் நாய் வீரனைக் கண்டு பிடித்து உங்களிடம் சேர்த்துவிடுவேன்," என நம்பிக்கையோடு சொன்னான்.*

*ரோட்டில் நிறுத்தியிருந்த தன் காரில் ஏறி வீட்டை நோக்கி ஓட்டினாள் சங்கீதா. அவள் மனமோ பன்னிரெண்டு வருடங்களுக்கு முன் வசீகரனை மணந்து சிறீலங்காவை விட்டு அவுஸ்திரேலியாவிற்குக் குடியேறிய நாட்களைப் பின் நோக்கி ஓடியது.*

*அவுஸ்திரேலியாவில் குடியேறியபின், இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்து சுமார் எட்டு வருடமாக இருவரும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்தார்கள். ஆனால் சங்கீதாவின் வாழ்க்கையில் விதி விபத்தாக வந்து அவள் கணவரைக் காவு கொண்டு போயிற்று. சமையல், பிள்ளைகளின் கவனிப்பு என்று இருந்த சங்கீதாவின் மேல் இப்போது குடும்பத்தைக் கொண்டு*

நடத்தத் தேவையான வருமானம் தேடும் பொறுப்பாயிற்று. பத்தாம் வகுப்புக்கு மேல் படிக்காது, வீட்டில் பெற்றோருக்குச் செல்லப்பிள்ளையாக வளர்ந்தவள் சங்கீதா. அவள் படிப்பிற்கு அவுஸ்திரேலியாவில் ஒரு காரியாலத்திலும் வேலை கிடையாது என அவளுக்குத் தெரியும். சிறீலங்காவில் கார் ஓட்டும் லைசன்ஸ் எடுத்து தந்தையின் போக்குவரத்து நிறுவனத்தின் வாகனங்களை சில சந்தர்ப்பங்களில் ஓட்டியிருக்கிறாள். இங்கும் தங்கள் காரை ஓட்டியிருக்கிறாள். இப்போது அந்த அனுபவம் தான் அவளுக்குக் கைகொடுக்கும் என முடிவு செய்தாள். பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வதற்கு அவள் தாயும் சிறிலங்காவிலிருந்து வந்திருந்ததால் நம்பிக்கையோடு வேலை தேடத் தொடங்கினாள். விசாரித்ததில் அவுஸ்திரேலியாவில் பாரவாகனம் ஓட்டுபவர்கள் பற்றாக் குறை இருப்பதாகவும் அது ஒரு உத்தரவாதமான வேலையும் என அறிந்தாள். வரலாற்று ரீதியாக இது ஆண்களுக்கான வேலை. பெண்களுக்கு இந்த வேலை கிடைப்பது அரிது. ஆயினும் சங்கீதா தன்னம்பிக்கையோடு பாரவாகனம் ஓட்டுவதற்கு ஸ்டார் என்னும் நிருவனவனத்தில் பயிற்சி பெற்று லைசன்ஸ் எடுத்து வேலைக்கு விண்ணப்பித்தாள். உடனேயே அவளுக்கு கிங்ஸ் கம்பனியில் வேலைப் பயிற்சிக்கு இடம் கிடைத்தது. பின்பு அங்கேயே வேலையும் உறுதியாகிப் பொறுப்பேற்ற போது,

'நீங்கள்தான் இந்த கம்பனியின் முதல் பெண் ஓட்டுனர்' என வாழ்த்துச் சொல்லி வரவேற்றார் அவளை நேர்முகத் தேர்வு செய்த அதிகாரி.

சங்கீதா ஏற்றுக் கொண்ட வேலை மிகவும் கஷ்டமானது. சில இரவுகளில் கண்விழித்து வாகனம் ஓட்டவேண்டும். மூன்று நான்கு நாட்களுக்கு தன் குடும்பத்தாரை பார்க்கமுடியாமலும் இருக்கும். அதற்கு ஏற்ப அவளுக்கு, $125,000 ஒரு வருடச் சம்பளம். கையில் கிடைத்த முதல் சம்பளத்தில் 'லாப்ரடோர்' இன நாய் வீரனை, நீண்ட பயணத்திற்கு வேண்டிய பயிற்சி பெற்ற ஆறுமாதக் குட்டியாக வாங்கினாள். சங்கீதா நித்திரை முழித்து வாகனத்தை ஓட்டும்போது அயர்ச்சி தெரியாது இருக்கப் பக்கத்தில் இருக்கும் ஜீவனான வீரனோடுதான் கதைப்பாள்.

*இரவில் விடுதிகளில் தங்கும் போது அவளுக்கு வைரவரின் கரியநிற வீரன்தான் மெய்க்காப்பாலனாக இருப்பான். இப்போது அவளது கூட்டாளியான வீரனைக் காணவில்லை. 'கடவுளே அந்த பொலீஸ் அதிகாரி என் வீரனைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும்' என மனதார வேண்டிக் கொள்ளவும் வீடு வந்து சேரவும் சரியாகவிருந்தது.*

*நேரே குளியல் அறையில் போய் தலையில் தோய்ந்து விட்டு வரவும் "அம்மா! பொலீஸ் வீரனைக் கண்டு பிடித்து விடுவாங்களா?" என அவள் மகன்கள் ருக்சனும், ரூபனும் கேட்டபடி ஓடி வந்து அவளை அணைத்தனர். அவர்களை அணைத்து முத்தமிட்டுவிட்டு,*

*"என்ட செல்லங்கள் கவலைப்பட வேண்டாம் இரண்டு நாளில் வீரனைக் கண்டு பிடித்திடுவார்கள்," என்றாள் நம்பிக்கையோடு.*

*அடுத்த நாளே ஒரு சில விசயங்களை உறுதிப்படுத்த காவல்துறை அதிகாரி சல்வடோர், சங்கீதாவின் வீடு தேடி வந்து விட்டான். சுடிதார் உடுத்தி அலையலையாக முகத்தை வளைத்து வாரிவிட்டிருந்த நீண்ட கருங்கூந்தலோடு நிற்கும் இந்த சங்கீதாவா நேற்று காவல்துறையில் நின்ற சங்கீதா என ஆச்சரியப் பட்டான். அவனை உள்ளே அழைத்து அமரவைத்து, அவனுடைய கேள்விகளை உறுதிப் படுத்தவும் சங்கீதாவின் தாய், இஞ்சித் தேநீர் கொண்டு வரவும் சரியாகவிருந்தது.*

*"தாங்யு மா," எனக் கப்பை வாங்கி குடித்தபடி, "சங்கீதா, எனக்கு சில துப்புகள் கிடைத்திருக்கின்றன, அநேகமாக, இரண்டொரு நாட்களில், வீரனை எந்தப் பாதிப்புமின்றி மீட்டுவிடலாம். கவலைப்பட வேண்டாம்." என்றவன் சங்கீதாவின் தாயைப் பார்த்து, "மம்! உங்கள் மகள் தைரியசாலி! அவள் வேலை செய்யும் கம்பனியில் மிகவும் மதிக்கப்படுகிற ஒரே ஒரு பெண் ஓட்டுனர். அவளால் பெண்களுக்கே பெருமை," எனக் கூறி விடை பெற்றான்.*

*இரண்டு நாள் கழித்து வீரன் கிடைத்துவிட்டான் என பொலீஸ் இலாகாவில் இருந்து தொலைபேசி தகவல் வந்ததும்,*

*சங்கீதா போய் வீரனைப் பொறுப்பெடுத்துக் கொண்டாள். கம்பனி நடத்திய விசாரணையில், நாயைக் கடத்தியவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.*

*சங்கீதாவின் தன்னம்பிக்கையும் துணிச்சலையும் பார்த்து சல்வடோர் வியந்தான். கணவரை இழந்து வருமானமில்லாமல் தவித்தும், அரசாங்க உதவிப்பணத்தை எதிர்பார்க்காது, தனித் தாயாக இந்த கஷ்டமான வேலையைச் செய்து தன் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதைப் பார்த்து அவனுக்கு அவள் மேல் உயர்ந்த மதிப்பையும் ஒரு ஈர்ப்பையும் ஏற்படுத்தியது.*

*முப்பத்தைந்து வயது பிரமசாரியான சல்வடோர்,*

*“மா எனக்கு உங்களின் ஸ்பெசல் ஜின்ஞர் டீ கிடைக்குமா?”*

*என சங்கீதாவின் தாயிடம் கேட்டபடி, அடிக்கடி விடுமுறை நாட்களில் சங்கீதாவின் வீட்டிற்கு வரத் தொடங்கினான். சங்கீதாவும் அவனும் நேரம் போவது தெரியாது கதைப்பார்கள். அவளுடைய இரு மகன்களும் சல்வடோரின் மடியில் அமர்ந்து அவன் சீருடையில் தொங்கிய பதக்கங்கள், கிரீடமும், நட்சத்திரமும் போட்ட பட்டிகளையும் தொட்டு, ”இது என்ன? எதற்கு அங்கில்?” எனக் கேட்டு அவனோடு நெருக்கமானார்கள்.*

*சல்வடோர் சங்கீதாவின் பிள்ளைகள், ருக்சனையும், ரூபனையும் கிரிக்கட் பயிற்சிக்கு அழைத்துக் கொண்டு போவதோடு, வீட்டிலும் அவர்களுக்கு கிரிக்கட் பயிற்சி கொடுத்தான். சில நேரங்களில் சங்கீதாவும் அந்த ஆட்டத்தில் கலந்து கொள்வாள். சங்கீதாவின் வாழ்க்கையில் மீண்டும் வசந்தம் வீசத்தொடங்கியது.*

இலங்கையின் வீரகேசரி வார பத்திரிகையில்
2021 ஆம் ஆண்டில் வெளிவந்த சிறுகதை

# இருளிலிருந்து வெளிச்சத்திற்கு

இலங்கையிலே நாவலபிட்டியாவின் புறநகரில் ஒரு சிறுகுடிலில் அண்ணன், இரண்டு தங்கைகள் மற்றும் தாய் பிரேமாவதியுடனும் வாழ்ந்து வந்தான் கிரிபண்டா. அவன் தந்தையைக் கண்டதேயில்லை.

அம்மா கொடுக்கிற அரை வயிற்று உணவுடன் பள்ளிக்கூடம் போவான் கிரிபண்டா. பசி வயிற்றைக்கிள்ள, அவனால் படிப்பில் கவனம் செலுத்தமுடிவதில்லை. பள்ளிக்கூடம் போகிறேன் எனத் தாயிடம் கூறிவிட்டு பாதி நாட்கள் ஊர் சுற்றுவான். காலப்போக்கில் டவுனுக்குப் போய் அவனிலும் வயது கூடிய கெட்ட இளைஞர்களுடைய சகவாசத்தால் கடைகளுக்குள் புகுந்து பொருட்களை திருடி ஏதாவது வாங்கிச் சாப்பிடுவான். இந்தச் சில்லறைக் களவுகளுக்கு அகப்படாமல் தப்பி வந்தவன் பெரிய களவுகளுக்கும் துணிந்து விட்டான். ஒரு நாள், ஒரு பெண்ணின் கைப்பையை பறித்துக் கொண்டு ஓடினான். ஆனால் பொலீஸ்காரனிடம் அகப்பட்டு இளையோர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான். நீதிபதி கிரிபண்டாவை சிறார் தடுப்பு மையத்தில் ஆறுமாதக் காவலில் வைக்க வேண்டும் எனத் தீர்ப்பளித்தார். தாயும் மகனும் ஒருவரை ஒருவர் அணைத்து,

கண்களில் நீர் வழியப் பிரிந்தனர். அதன்பின் மையத்தில் இருக்கும்வரை அவனைத் தாய் பார்க்க வரவேயில்லை.

தடுப்பு மையத்தில் உளவியல் நிபுணர் கிரிபண்டாவை சோதித்து கிரிபண்டாவின் மனதில் மோசமான எண்ணங்கள் இல்லை என்றும் பசிக்கொடுமையாலும், கெட்ட சகவாசத்தாலும் இந்தக் களவுகளைச் செய்திருக்கிறான். ஆகையால் இளைஞர் தடுப்பு மையத்தில் கல்வித்துறை நடாத்தும் கல்வி மற்றும் பயிற்சி துணையலகுகளில் அவன் வயதுக்கும் அறிவுக்கும் ஏற்ற கல்வியை அளிக்கும்படி பரிந்துரைத்திருந்தார்.

மையத்தில் வயிறும் மனமும் நிறைய, அவன் படிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கினான். பக்கத்து விகாரையிலிருந்து புத்தபிக்கு கல்கமுவ குணசேன தேரோ ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மையத்திலிருந்த இளைஞருக்குப் புத்த சமய நீதி, மற்றும் தார்மீக நெறிமுறைகள் பற்றியும் நல் ஒழுக்கம் பற்றியும் போதிப்பார். கிரிபண்டா, தேரோவின் போதனைகளைக் கிரகித்து விளக்கங்கள் கேட்பான். இது குணசேனா தேரோவை கவர்ந்தது.

ஆறுமாதத்தில் கிரிபண்டா விடுதலையானான். தன்னை அழைத்துப்போக தாய் வருவாள் என ஆவலோடு காத்திருந்தான், ஆனால் அவள் வரவேயில்லை, குணசேனா தேரோ தான் வந்தார்.

“கிரிபண்டா! என்னுடைய விகாரையின் துறவிப் பள்ளியில் சேர்ந்து பணி செய்ய விருப்பமா?” எனக் கேட்டார்.

“புதுஹமுதுருவோ! நான் உங்களுடைய சீடானாகவே வருகிறேன்” என அவர் காலடியில் விழுந்து வணங்கினான். தேரோவும், தான் கிரிபண்டாவை பொறுப்பெடுப்பதாகக் கையொப்பம் வைத்து அவனை அழைத்துச் சென்றார்.

துறவிப்பள்ளி மாணவர்களோடு வெள்ளை நிற சாரமும் மேற் சட்டையும் அணிந்து கிரிபண்டா விகாரையைச் சுத்தமாக வைத்திருப்பது முதற்கொண்டு மற்றும் கடமைகளிலும் ஈடுபடுவான். காலை நான்கு மணிக்கு

எழுந்து குளித்துவிட்டு பிக்குகளுடன் தியானம் செய்வான், பின்பு ஒரு மணித்தியாலம் பிரித் (வேதம்) ஓதுவான். ஆறு மணிக்கு வெறுங்காலுடன் அன்னதான கிண்ணத்தை ஏந்தியபடி சென்று, சுற்றுவட்டாரங்களில் உள்ள மக்கள் தானமாகக் கொடுக்கும் உணவை உண்டுவிட்டு, 'பிரிவீனா' பள்ளிக்கூடத்திற்குப் போவான். அவனது பதினேழாவது வயதில், தலைமுடியை மொட்டையடித்து எளிமையையும் பற்றின்மையையும் குறிக்கும் காவி வஸ்த்திரம் அணிந்து, பதவி ஏற்பு வைபவத்தில், 'நாவலபிட்டிய ஆனந்தா தேரோ' என்னும் பெயருடன் பிக்குவாக நியமனமானார்.

விகாரையில் நல்ல மதிப்பும், பிரிவீனாவில் கெட்டிக்காரன் என்ற பெயரும் ஆனந்தா தேரோவுக்குக் கிடைத்தது. பிரிவீனாவின் உயர்தரப் பரீட்சையில் தேறி பேராதெனிய பல்கலைக்கழகத்தில், பிக்குகளுக்கான 'சங்கராமய' விடுதியில் தங்கி சமஸ்கிருதம், புத்தசமயம், தத்துவம், சரித்திரம் முதலிய பாடங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். பட்டம் பெற்றதும், ஸ்ரீ ஜயவார்த்தனாபுர பல்கலைக்கழகத்தில் புத்த சமய, சரித்திர விரிவுரையாளராக நியமனமானார்.

புத்தர் வகுத்த 'விநாய' விதிப்படி, முற்றும் துறந்த ஆனந்த தேரோ தனது ஏழைக் குடும்பத்தை ஆதரிக்கலாம். ஆகையால், தன் முதல் மாத சம்பளத்துடன், எட்டு வருடத்திற்குப் பின் தாயையும் சகோதரிகளையும் பார்க்கப் போனான். மெலிந்து, கறுத்து, கிழிந்த சேலையுடன் இருந்த தாயைப் பார்த்து தன் அம்மாவோ என ஐயப்பட்டான். அவர் காலில் விழுந்து,

"அம்மே! என்னை ஆசீர்வதியுங்கள். என் முதல் மாத சம்பளத்தை உங்களிடம் கொடுக்கிறேன் இனியும் என் சம்பளம் உங்களுக்குத்தான். நான் முற்றும் துறந்தவன். என் வாழ்க்கை தொண்டு செய்வதும் பல்கலைக்கழகமும்தான்" என்றான்

இரு தங்கைகளும், "புது ஹாமுதுருவோ! எங்களை ஆசீர்வதியுங்கள்!" என அவர் காலில் விழுந்தனர்.

"நீங்கள் நல்லாப் படிக்கவேணும். இனிமேல் அரைவயிற்று உணவோடு பள்ளிக்கூடம் போக வேண்டியதில்லை" என்றான்.

"எங்களோடு தங்கலாமே? என தாய் கேட்க,

"இல்லை அம்மே, எனது வாழுமிடம் புத்த ஆச்சிரமம் தான். நான் வருகிறேன்," எனப் புறப்பட்டான்.

போகும் வழியில் அடுத்த தெருவிற்குள் எச்சரிக்கைச் சங்கொலியுடன் காவல்துறை வாகனங்கள் விரைவதைக் கண்டான். அவன் பிறந்து ஓடி விளையாடிய ஊராயிற்றே! என்ன? ஏது? என அறிய அங்கு போனார். தேரோவைக் கண்டதும் காவல்துறை அதிகாரி வாகனத்தை விட்டிறங்கி, கைகளைச் சேர்த்து உடம்பை வளைத்து வணங்கினான்.

"என்ன நடந்தது?" என விசாரித்தார்.

"புதுஹாமுதுருவோ! அதோ அந்தப் பள்ளத்தில் 14 வயது மதிப்பான ஒருவரின் எலும்புக்கூடு கிடைத்திருக்கிறது. மகன் பியதாசாவைக் காணவில்லை எனப் பெற்றோர் எட்டு வருசத்துக்கு முன் காவல் துறையில் முறையிட்டிருந்தார்கள். இது பியதாசாவின் எலும்புக்கூடு என உறுதியாகிவிட்டது. அவன் எப்படி இறந்திருப்பான் என்று ஏதாவது தடயங்கள் கிடைக்குமா எனப் பார்க்க வந்திருக்கிறோம்," என்றான்.

'பியதாசாவா? எட்டு வருடங்களுக்கு முன் இந்தத் தெருவிலே தானே அவனோடும் வேறு சில பையன்களோடும் விளையாடுவேன். ஒரு நாள் மல்லுக்கட்டி சண்டை பிடித்த போது தானே பியதாசா இந்தப் பள்ளத்துக்குள் விழுந்தான். பண்டா! பண்டா! என பியதாசா பரிதாபமாகக் கத்தக் கத்த, காது கேட்காதவன் போல் டவுன் பக்கம் போய், பாக்கைத் திருடி போலீசில் மாட்டிக் கொண்டேன்' என குற்றவுணர்வோடு வருந்தினார் ஆனந்த தேரோ.

கிரிபண்டாவாகவிருந்தால், பியதாசாவின் மரணத்திற்கு, தான் பொறுப்பில்லை என தோளை குலுக்கிவிட்டுப் போயிருப்பான். ஆனால் இப்போது ஆனந்த தேரோ அல்லவா! மனச்சாட்சி அவரை உறுத்தியது. நேரே காவல்துறைக்கு சென்று நடந்த சம்பவத்தைக் கூறி, "அன்று நான் பியதாசாவுக்கு

*உதவியிருந்தால், அவன் இன்னும் உயிரோடு இருந்திருப்பான்," எனச் சரணடைந்தார்.*

*'இரக்கம் இல்லாமையும், உன்னத எட்டுவகைப் பாதையில் ஒன்றான சரியான நடத்தையை அனுஷ்டிக்கவும் நான் தவறிவிட்டேன். புத்தம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி!'*

'தமிழ் நாட்டின்' விடியல் இலக்கிய இதழ்
டிசம்பர் 2021ஆம் ஆண்டில் வெளியானது.



தேவகியின் பெரும்பாலான கதைகள் பண்பாட்டு விழுமியங்களையும் தொட்டுச்செல்கின்றன. தாயகம் விட்டு புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவுக்கு வந்தாலும், குடும்ப வன்முறையினால், மற்றும் ஒரு நாட்டுக்கு தப்பிச்சென்று வாழவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட பெண், இலங்கையில் போர்க்காலத்தில் காணாமல் போன கணவன் மீண்டும் வரமாட்டான் என்ற நம்பிக்கையில் மற்றும் ஒரு இல்லற பந்தத்திற்குள் நுழைந்து, மீண்டும் நிர்க்கதியாகும் பெண், பெற்றோராகவிருக்கும் இரண்டு ஆண்களின் மத்தியில் வளரும் குழந்தை முதலான கதைகள் உட்பட அனைத்துக் கதைகளுமே நனவிடை தோய்தல் உத்தியுடன்தான் நகர்ந்துகொண்டிருக்கின்றன.

– லெ.முருகபூபதி, அவுஸ்திரேலியா

யாழினி குறுநாவல் முன்னிறுத்தும் பிரச்சினை மிகமுக்கியமானது. விசாரணைக்காக இழுத்துச் செல்லப்பட்ட இளைஞனின் வாழ்வில் நிகழும் உறவுச்சிக்கல் அதனால் ஏற்படும் உளவியல் ரீதியான தடுமாற்றங்கள் ஆகியவற்றை எப்படி கையாள்கிறார்கள் என்பதைத்தான் தேவகி மிகக் கவனமாக எந்த இடத்திலும் ஒரு சிறு இழை நழுவாமல் குறுநாவலாகப் படைத்திருக்கிறார்.

பழிவாங்குதலும் வெறுப்பும் எரிச்சலும் பொங்கிப் பெருக வேண்டிய அவலச் சூழலில் சளைக்காமல் அன்பை விதைக்கிறார் தேவகியம்மா. இக் குறுநாவல் அன்பின் ஒளி.

– நெய்வேலி பாரதிக்குமார், சென்னை

ESTILO BOOKS

www.estilobooks.com